

## தமிழக மீனவர் பிரச்சினை போன்று ஈழத்தமிழர் விடயம் கையாளப்படுமா?

பெப்ரவரி 06 - பெப்ரவரி 12, 2011 February 06 - February 12, 2011 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI


வாரமலர்



## பேய் தின்ற தெரு

ஒரு காதல் குறிப்பு

# சேலை அழுலாக்கம்



# பேய் தின்ற தெரு

## ஒரு காதல் குறிப்பு

**என் நாட்குறிப்புகளில் பதியப்பட்டவைகளில் சில நம்மைச் சூழ்ந்திருந்த அரசியல் நிலைமைகளோடு சில சமயங்களில் தாக்கத்தில் ஈடுபட்டிருக்கின்றன. அப்படியான ஒரு குறிப்பிலிருந்து கரைதொழுகிய ஒரு பயணம்.**

2009 இன் இடைப்பகுதியில் ஒருநாள். என்னை ஒரு பயணம் முழுமையாகத் தின்றது. முதல்நாள் இரவு பயணத்தை முடிவைத்து விட்டுக் கண்களை மட்டும் மூடிக்கொண்டேன். மனசு விடிய விடிய முழித்துக்கொண்டிருந்தது. கட்டில் பாவம் அழுதுகொண்டே இருந்தது. என்னைக் காதலித்து கொன்றவளுடன் பயணிக்கும் முதல் நாள் விடிந்தது. நாம் கொஞ்ச நாட்களுக்கு முன் காதலைக் களவு கொடுத்தோம். ஒரே வகுப்பறையில் எதிர் எதிர் முகங்களாய் அமர்ந்திருந்தாலும் அவள் என்னைப் பார்ப்பதை பாவம் என்றிருந்தாள். அந்தக் காலத்தில் அவளுக்குப் பின்னால் நடக்கும் தெருக்களும் வகுப்பறையும் நரகமாய் இருக்கும். சந்தோஷம் நிரந்தரமாகவே என் தேகத்தை விட்டும், என் தேசத்தை விட்டும் புலம் பெயர்ந்து போயிருந்தது. என் எல்லாத் தொடக்கங்களும் விரக்தியில் முற்றுப்பெற்றிருந்த ஓர் காலையில் அந்த பஸ்ஸின் பின்வழியாக ஏறிக்கொண்டேன். அவள் முன்பக்கத்தில் நின்றுகொண்டிருந்தாள்.

ஏ-ஒன்பது பெருந்தெரு "புதிதாய்ப் பிறந்த" பின் முதல் முதலாய்ப் பயணிக்கிறேன். எல்லா அவலங்களும் நலன்புரி நிலையங்களுக்குள் அடைக்கப்பட்ட பின், ஆட்களற்ற அந்த செந்தெரு மனித நடமாட்டங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக அனுபவித்திருந்தது. பல ஆயிரம் மனிதர்கள் இதன் திறப்புக்காய் நடத்தப்பட்ட வேள்வியில் தீயில் இடப்பட்டிருந்தனர்.

கொடிகாமம்; அவள் ஒரு முறை என்னைப் பார்த்தாள். ஆங்கிலத்திலும், தமிழிலும் மட்டும் எழுதப்பட்டிருந்த "OUR NATION, OUR COUNTRY" இதனுடைய அழகியல் அவளையும் பாதித்திருக்கும் என்பதை உணர்ந்தேன். மிருசுவிலில் கடந்தோம். ஜீவராசிகள் இல்லாத பற்றைக் காடுகளும் கைவிடப்பட்ட காவலரண்களும், குடி தொலைத்த குடிமனைகளின் எச்சங்களும் பாதையின் இருபக்கங்களிலும் குற்றுயிராய்க்கிடந்தன. முகமாலையில் பஸ் ஒன்று கோரமாக கொலை செய்யப்பட்டிருந்தது. "அந்த பஸ்ஸில் தான் 2006. 08.10 அன்று மாலை நான்கு மணிக்கு யாத்திரை போய் வந்த மனிசர்களை ரவைகள் சாப்பிட்டனவாம்". செய்தியைக் கேள்விப்பட்டிருந்தேன். அந்த குறுந்தூர சூனியப்பகுதி மயானப் பகுதியாகவே இருந்தது. புதைக்கப்படாத பிணங்கள் நாறிக் கொண்டிருந்தன. பழைய கட்டுப்பாட்டு பகுதி, '..... உங்களை அன்புடன் வரவேற்கிறது' காணாமல்போயிருந்தது. ஒரு முறை நானும் அவளும் பாதை உயிரோடு இருந்த காலத்தில் இந்த இடத்தில் அருகருகாக கதைகளை மென்றபடி நடந்திருக்கிறோம். 'அந்தப்பகுதியினுள்' உள் நுழைவதற்காக தரப்படும் அனுமதிப்பத்திரம் நிரப்பத் தெரியாமல் வெட்கப்பட்டு நின்றிருந்தோம். "அந்த தமிழ்" சத்தியமாய் எங்களுக்குத் தெரியாது. ஒரு சின்னப் பொடியன் உதவினான். தனித்தனி அறைகளுக்கு அழைத்துப் போய் விசாரித்தார்கள். நான் அவளை விசாரணைக்கு அனுப்பி விட்டு ஒரு துளி பயம்கூட இல்லாமல் காத்திருந்தேன். அன்று நடந்தவைகள் அந்த பயணம் முழுவதும் எமக்குச் சிரிப்பு தரும் பாடுபொருளாகியது. அதெல்லாம் நினைக்க மனசு அறுந்து விழுந்தது. அவளும் இப்படியெல்லாம் உணர்ந்திருப்பாளோ? அந்த இடத்தில் கூட என்னைப் பார்க்கவில்லை. பனைகளில் தலையை ஆட்டிலெறி செல்கள் அறுத்திருந்தன. ஆயிரம் ஆண்டுத் தொன்மைகள் இவைகளுக்கு மட்டும் தான் தெரியும். உண்மைகள் கண்டறிவோரிடம் சாட்சி கூறவந்துவிடும் என்ற பயத்தினால் தான் பனைகளும், தென்னைகளும் ஊனமாக்கப்பட்டனவோ? புதுக்காட்டுச் சந்தியில் இருந்த பசுமை முறிந்து கிடந்தது. அடியோடு அகற்றப்பட்டனவாம்.

**'சுவையூற்று'; பசுமையை உற்பத்தி செய்யும் பெரும் பேட்டை. நானும் அவளும் ஒரு முறை அங்கு ஐஸ்கிரீம் சாப்பிட்டிருக்கிறோம். ஒரே குவளையில் அல்ல.**

ஆனையிறவு; அவள் முகத்தை வெக்கையும், இருளும் போர்த்தி இருந்தது. ஆழமற்ற கடல், அரைக் கோவணத்தோடு மீன் பிடிப்பவன், துடிக்கும் மீன்கள், உப்புப் படிந்த கற்கரை அவளுக்கு அலாதி விருப்பம். ஜன்னலுக்குள்ளால் குனிந்து தலையை நீட்டி தேடினாள் போல. அவை எதுவுமே ஆனையிறவு வெளியில் இருக்கவில்லை.

இனி ஒருபோதும் இருக்கப் போவதில்லை என்பதை அங்கு நிர்மாணிக்கப்படப் போகும் 'வெற்றிச்சின்னங்களின்' அத்திவாரம் சொல்லிக்கொண்டிருந்தது. அவன் பாவம். ஏதோ சூனிய நம்பிக்கையில் காலத்தைப் பார்க்கிறான்.

முதல் ஒரு காலத்தில் இந்த வீதியில் பயணிக்கும் போது காலாற, கட்டவிழ்த்து நடக்க வேண்டும், பேச வேண்டும் என்பதற்காக இடையிடையே இறங்கிக் கொள்வோம். அப்படியான ஒரு பொழுதில் நாம் அதிகம் செலவிட்ட இடம் பரந்தன் பேருந்து நிலையம். யாரோ செல்வந்தரின் நினைவால் அது கட்டப்பட்டிருந்தது. பெரு நிலப்பரப்பில் எல்லா முகங்களையும் இவ்விடத்திலேயே தரிசித்திருக்கிறேன். நாம் அருகே இருந்து பேசுவதை அங்கிருப்பவர்கள் விநோதமாய்ப் பார்த்ததனால், விநோதப் பார்வைக்குப் பயந்து உடனே பஸ் ஏறிக்கொண்டோம். நினைவிருக்கிறதா? என்ற உணர்வோடு அவளைப் பார்த்தேன். நிர்வாணமாய் நின்ற பரந்தன் சந்தியைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். குருதி பாய்ந்த தெரு மீது பயணிக்க வெட்கமாய் இருந்தது. எல்லோரும் மௌனமாய் ஏதோ பேசியும் பேசாமலும் கண்களை அகல விரித்திருந்தனர். சிலர் காதுகளுக்குள் ஏதோ முணுமுணுத்துக்கொண்டிருந்தனர். தான் கட்டியிருக்கும் வேட்டியை இழுத்து முகத்தை மூடிக்கொள்ளும் மானங்கெட்ட உணர்வு அங்கிருந்தவர்களைத் தொட்டிருக்கலாம்.

ஐந்து வருடத்தில் அவசர அவசரமாய் தூக்கி நிறுத்தப்பட்ட அந்த குழந்தைகளின் நகரை ஒரே இரவில் பேய்தின்றிருந்தது. சமிபாடடையாத கட்டட எச்சங்கள் மட்டும் நிலத்தைப் புதைத்துக் கொண்டிருந்தன. பிரமாண்ட கொள்கலனை யாரோ அடியோடு புரட்டி இருந்தார்கள். சில மனிதர்கள் அதனைப் புதினம் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களில் இருந்து ஒரு புதிய வாடை வீசியது. பச்சையாய்த் தெரியும் உருவங்கள்

**ஐந்து வருடத்தில் அவசர அவசரமாய் தூக்கி நிறுத்தப்பட்ட அந்த குழந்தைகளின் நகரை ஒரே இரவில் பேய்தின்றிருந்தது. சமிபாடடையாத கட்டட எச்சங்கள் மட்டும் நிலத்தைப் புதைத்துக் கொண்டிருந்தன. பிரமாண்ட கொள்கலனை யாரோ அடியோடு புரட்டி இருந்தார்கள்.**



''அந்தத் தமிழ்'' சத்தியமாய் எங்களுக்குத் தெரியாது. ஒரு சின்னப்பெடியன் உதவினான். தனித்தனி அறைகளுக்கு அழைத்துப் போய் விசாரித்தார்கள்.

பாழடைந்த கடைகளிலும் மறைவான இடங்களிலும் அருவருப்பாய் தெரிந்தனர்.


'சுவையூற்று'; பசுமையை உற்பத்தி செய்யும் பெரும் போட்டை. நானும் அவளும் ஒரு முறை அங்கு ஐஸ்கிறீம் சாப்பிட்டிருக்கிறோம். ஒரே குவளையில் அல்ல. எனக்கு ஆசைதான். கேட்கக் கூச்சமாய் இருந்தது. கேட்கவேயில்லை. அவசர அவசரமாய்ச் சாப்பிட்டாள். அவளின் எண்ணம் எல்லாம் அதற்கு முன்பு கட்டப்பட்டிருந்த பூங்காவிலேயே இருந்தது. இருபது ரூபாய், ஓடிப்போய் இரண்டு ரிக்கற் வாங்கிக் கொண்டு, [...]ாலத்தில் ஏறிநின்று நான் [...]சலால் உள் நுழையும் போது திருட்டுத்தனமாக ஒரு புகைப்படமும் எடுத்தாள். அதை இப்போது வைத்திருப்பாளா? 'சுவையூற்று, பூங்கா' இருந்த இடத்தில் அங்கே சிதறிய உணவை தின்று வளர்ந்த

ஜெரா

எறும்பைக் கூட காணோம். எல்லாம் அகற்றப்பட்டிருந்தது.

முறிகண்டி வரை எனக்கு வெளியில் பார்க்க அருவருப்பாய் இருந்தது. கச்சான் வாங்கவும், பிள்ளையார் கும்பிடவும் செல்லும் காரியம் வெல்ல நேர்த்தி[...]க்கவும் பஸ் அனுமதிக்கவில்லை. தொடர்ந்து காட்டுவழிப்பாதையில் காடுகள் மீது தீ மூட்டியிருந்தனர். புகைத்துக் கொண்டிருந்தது. மாங்குளம், கனகராயன் குளம் எந்த நினைவும் இல்லை. மௌனித்து கிடந்தது வெட்டை வெளி. பூநெல்லின் வாசமற்ற வயல்கள் எதற்கோ தவம் கிடந்தன. அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். அழமொற்றுக்கிடந்தாள். ஒற்றைத் மொழியற்ற மொழி எம்மைத் துரிதமாய் இறக்கியது. இதற்கு முன் அவளது பயணப்பையை நான் தான் தூக்கி இறக்கி காலடி வரை கொண்டு சேர்த்தேன். தனியே இழுத்துக் கொண்டு போனாள். நான் அந்த கிராவல் தரையில் வெற்றுப்பையில் இழுபடும் தேகத்தை உணர்ந்தேன். அவள் என்னைத் திரும்பிப் பார்க்காமல் பஸ்ஸில் ஏறிக் கொண்டாள். அங்கொன்றும் இங்கொன்றுமாக புனைக்கிருந்த மனித குடியிருப்பினூடாக பயணித்து வவுனியா நெரிசல் நகரை அடைந்தோம். என்னை ஒருமுறை கூடப் பார்க்காமல் இரைச்சலுக்குள் மறைந்து போனாள். நான் நினைவுகளால் தொலைவெய்யப்பட்டு நின்றேன். என் கடைசி பயணம் அது. முற்றுப் பெற்ற நேரம் மாலை 3.17.

# சேலை அமுலாக்கம்



சமூகத்து பெண்நிலை என்பது ஒருபொது கருத்தாக்கத்தின் கீழ் செயற்படுவது அல்ல. அது வடக்கு, கிழக்கு, மலையகம் என ஒவ்வொரு பிராந்திய நில, புல சூழமைகளுக்கு ஏற்ற வகையில் கட்டமைக்கப்பட்டது. அவ்வப்பிராந்தியங்களுக்கு பாரம்பரியமாக தலைமை வகிக்கும் அதிகார வர்க்கங்களால் தான் பெண்ணுக்குரிய அனைத்தும் தீர்மானிக்கப்பட்டு வருகின்றது. உலகில் உள்ள எல்லா சமூகங்களிலும் அதிகாரத்தைக் உடமையாக கொண்டவர்கள் ஆண்களே. இதில் ஆபிரிக்க தேசத்தில் வாழும் பழங்குடியினரைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் அங்கு வாழும் இனங்களில் சில இன்னும் நிலவுடமை சமுதாயக் கட்டமைவுகளைக்கூட எட்டவில்லை. சில பழங்குடி இனத்தவர்களுக்கு பெண்கள் தலைமை தாங்குகின்றனர். இச்சிறு விதிவிலக்கைத் தவிர சமூகம் என்பது ஆணின் வெளியாகவே உள்ளது. அதில் பெண்கள் பார்வையாளர்களாய் இருப்பதற்கும் தகுதியற்றவர்கள். ஆண் வெளிக் காட்டும் பாவனைகளில் எவ்வளவு தான் தூர நோக்கு எண்ணம் இருந்தாலும், பெண்பற்றிய ஆணின் பார்வை ஒருபோதும் மாறுவதில்லை. அவள் ஒரு அழகுசாதனப் பொருள் அல்லது குழந்தைகளை உற்பத்தி செய்யும் இயந்திரம் எனப் பார்க்கப்படுகிறாள். உலகத்திலும் சரி ஈழத்திலும் சரி இதேபார்வை தான் பெண் மீது வீசப்படுகிறது.

உண்மையிலேயே வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே பண்பாடுகளில் பெண் வழிநடத்துபவளாக இருந்திருக்கிறாள். செழிப்புத் தெய்வகோட்பாட்டின் (Fertility Cult) அடிப்படையாகவே சமூக அசைவியக்கம் நிகழ்ந்திருக்கின்றது. இவ்வெண்ணம் வலுப்பெறக் காரணம் அக்கால ஆண்களால் ஆற்றமுடியாத காரியங்களை பெண்கள் ஆற்றியமையே ஆகும். அச் சமூக இருப்பிற்கும், இயங்கியலுக்கும் தொடர்ச்சிக்கும் உந்துசக்தியாய் விளங்கியவள் பெண். இக்கருத்தியலின் செல்வாக்கினை ஈழத்தில் பண்டைய சமூகங்களில் வாழ்ந்தவர்களிடமும் காணலாம். கந்தரோடை, பூநகரி போன்ற தொல்லியல் மையங்களில் இருந்து மீட்கப்பட்ட ஏராளமான சுடுமண் சிற்பங்கள் செழிப்புத் தெய்வக் கோட்பாட்டினை பின்னணியாகக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம். இலங்கையின் வரலாற்றுக் காலமானது வட இந்திய, தென்னிந்திய பண்பாட்டு கலாசார தொடர்புகளால் தீர்மானிக்கப்பட்டது. அதனால் ஆசிய சமூகங்களில் பெண் நிலைக்கு ஏற்பட்ட விபரீதங்களே இங்கும் நிகழ்ந்தன. மன்னராட்சி நிலைகொள்ளத் தொடங்கியதும் பெண் போகப் பொருள் ஆனாள். இந்த எண்ணக் கருவைக் கட்டமைப்பதில் மனுதர்ம சாஸ்திரம், அர்த்த சாஸ்திரம், சங்க இலக்கியங்கள் போன்றவை முன்நின்றன. ஈழமும் இதைத்தழுவிக் கொண்டது.

காலனிய காலத்தில் பெண் பற்றிய எண்ணத்தில் சில மாற்றங்கள் நடந்தாலும் அது பரவலாக்கப்படவில்லை. அந்த மாற்றங்கள் 'வெள்ளைக்காறி', 'அவர்களால் முடியும்' என்ற பிரசாரங்களை ஆண் உலகம் உருவாக்கிப் பரப்பின. பெண்மூடிய அறைக்குள்ளும், குசினிக்குள்ளும் குடியமர்த்தப்பட்டாள்.

1950 களுக்குப் பிறகு கூர்மையடைந்த விடுதலைப் போராட்டமும் பெண்ணிய விடயத்தில் தோற்றுப் போனது. ஒரு பொது இனஒடுக்கு முறைக்கு எதிராக போராடவேண்டி ஏற்பட்டதால் அதில் பெண்களையும் இணைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதையும் தீர்மானித்தது ஆண்களே. அங்கு பெண் விடுதலை ஒரு உணர்வு மையப்பட்டதாக ஆக்கப்பட்டதே தவிர உளவியல் மயப்பட்டதாக ஆக்கப்படவில்லை. கொடூர கொற்றவைகளும், கண்ணகிகளுமே உருவாக்கப்பட்டார்கள். அந்தப் பெண்களால் இயக்கமாக இருக்கும் போது வலுமிக்கதாக செயற்பட முடிந்தது.

தம்பி

(6 ஆம் பக்கம் பார்க்க)




... தமிழரின் கலாசார பண்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் சேலையுடன் தான் வேலைக்கு வரவேண்டும் என்பதே அது. அதனை நடைமுறைக்கு கொண்டு வந்தவர் ஒரு பெண் உயரதிகாரி என்பது அனைவருக்கும் தெரியும். அப்படியாயின் அதே அலுவலகத்தில் பணிபுரியும் ஆண்கள் அனைவரும் தமிழர் கலாசாரத்தைப் பின்பற்றும் வகையில் வேட்டியுடன் தான் வரவேண்டும் என்பதை அவரால் அமுல்படுத்த முடியுமா?

# பல்சுவை

## வீட்டோடு சுற்றுலாப் போக

உங்கள் வீட்டை விட்டு வெளியேறும் சூழ்நிலை வந்தால் என்ன பண்ணுவீர்கள். இந்தப் பேருந்து உங்கள் இடம் இருந்தால் நீங்கள் கவலை படவேண்டி இருக்காது. பேருந்தில் உள்ள கட்டமைப்பு ஒரு அடுக்குமாடி குடியிருப்பைக் காட்டிலும் அழகாக இருக்கும். உங்கள் காரை பேருந்துக்குள் வைத்துக் கொள்ளலாம் இதைவிட வேறு என்ன வசதி வேண்டும்.






## குண்டு துளைக்காத கார்கள்...



தீவிரவாதிகளால் ஆபத்து என்று கருதப்படுகிற உலகத் தலைவர்களுக்காக குண்டு துளைக்க முடியாத கார்கள் தயாரிக்கப்படுகின்றன. இவை எப்படி அந்தத் தலைவர்களைப் பாதுகாக்கின்றன என்பது தெரியுமா? இந்தக் கார்களின் கண்ணாடிகள் கெவ்லார் எனப்படும் ரசாயனப் பொருள் கலந்து கனமாக தயாரிக்கப்படுகின்றன. இந்தக் கண்ணாடியின் மேல் குண்டு படும்போது அதன் வேகம் குறைந்து வழுக்கிக் கொண்டு போய் ஏதாவது ஒரு பக்கம் விழுந்து விடும். இந்தக் கண்ணாடியைத் தவிர காரில் பயணிகள் உட்காரும் இடத்தைச் சுற்றிலும் 10 மில்லிமீட்டர் கனத்துக்கு இரும்புத் தகடுகளும் வைக்கப்படும். இந்த இரும்புத் தகடுகளும் துப்பாக்கித் தோட்டாக்களை உள்ளே அனுப்பாது. அதே போல் யாராவது காரைப் பின் தொடர்ந்து வந்தால் காரை மறைக்கும் விதத்தில் வெண்மையான புகை மண்டலத்தை எழுப்பி எதிரிகளைக் குழப்பிவிடும் வசதியும் இதில் உள்ளது.

## காற்றில் ஆடும் காகிதப் பேய்கள்



பேய்களை காற்றில் நடனமாட வைத்திருக்கின்றார் ரஷ்ய நாட்டுக் கலைஞர் ஒருவர்.

இவர் பொலிபாஸ்டர் பேப்பரினைப் பயன்படுத்தி பேய்களின் முகங்கள் என்று சொல்லக் கூடிய பயங்கரமான உருவங்களை உருவாக்கி உள்ளார்.

மரங்களின் கிளைகளில் தொங்க விடப்பட்ட இம்முகங்கள் திடீரென பார்ப்பவர்களுக்கு பீதியை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

அத்துடன் கண்காட்சிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

## கவர்ச்சியான ஆடை அணிந்தால் அபராதம்!



அபரிமிதமான கிளிவேஜ் காட்டி செக்ஸியான ஆடை அணிந்தால் அபராதம் என்று ஒரு நாடு அறிவித்துள்ளது. தற்போது இச்சட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது அரபு நாட்டிலோ ஆப்ரிக்காவிலோ அல்ல. மாறாக குறைவான ஆடைகளை உடுத்துவதுதான் நாகரீகம் என்று கருதும் இத்தாலியில்!

இத்தாலியின் கேஸ்டல்மெரேடி ஸ்டேபியா என்ற நகரில், கவர்ச்சிகரமான குட்டைப்பாவாடை அணிவது, அபரிமிதமான கிளிவேஜ் தெரியும்படியாக டிரஸ் போடுவது ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளது. இதை மீறினால் அபராதம் செலுத்த வேண்டும்.


தடையை மீறி இதுபோல உடை அணிந்தால் 695 அமெரிக்க டாலர்கள் அபராதம் செலுத்த வேண்டும் என்று உத்தரவு உடனடியாக அமுலுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேப்பிள் அருகே உள்ளது இந்த நகரம் உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில், கவர்ச்சியான உடைகளுடன் பெண்கள் நடமாடுவதைத் தடுக்கும் வகையில் இந்தத் தடை உத்தரவாம். இது போல ஆண்களுக்கும் சில கட்டுப்பாடுகளை விதிப்பது குறித்து இந்த நகர நிர்வாகம் யோசித்து வருகிறதாம். மொத்தமாக 41 புதிய உடைக் கட்டுப்பாடுகளை அது தீட்டியுள்ளது.

காதலி:-
டேய், எங்கடை வீட்டில் யாருமேயில்லையடா!
காதலன்:-
ஒரு நிமிஷம் பொறு. இதோ வாறன்.

ஒரு நிமிஷம் கழிந்தது.

காதலன்:-
என்னடி உங்கடை விடு பூட்டிக்கிடக்கு...
காதலி:-
அதான் முதலிலே சொன்னனே,
வீட்டில் யாருமில்லை
எல்லாரும் ஊருக்குப் போயிட்டோம் என்று.
காதலன்:- ......!



# தமிழக மீனவர் பிரச்சினை போன்று ஈழத்தமிழர் விடயம் கையாளப்படுமா?



இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்படும் சம்பவம் அதிகரித்ததால், இந்தியாவில் உருவெடுத்த பதற்றமான நிலைக்கு தீர்வு காணும் நோக்கில் இலங்கைக்கு அவசர விஜயம் மேற்கொண்டார் இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் நிருபமா ராவ்.

நிருபமா ராவின் விஜயத்தின் மூலம் தான் நினைத்ததைச் சாதித்து, வெற்றியும் பெற்று, நாட்டின் குழப்பத்துக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டது இந்தியா.

**இலங்கையும் இந்தியாவும் மீனவர்கள் பிரச்சினைக் குத் தீர்வு கண்டுள்ளமை இந்திய மீனவர்களுக்கு நல்ல செய்தியாகத் தான் இருக்கும். அவர்கள் நிம்மதியாகத் தமது தொழிலை முன்னெடுக்க வாய்ப்புக் கிட்டியுள்ளது. மீனவர்கள் ஊடுருவி வளங்களைச் சூறையாடுவதை நிறுத்த வேண்டும் என இலங்கை மீனவர்கள் கேட்கிறார்கள். அதற்கான சூழலை இரு நாடுகளும் எடுக்கவேண்டியது அவசியம்.**

இந்திய மீனவர் விவகாரத்தில் பிரயோகித்த ராஜதந்திரத்தை இலங்கைத் தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஏன் இந்தியாவால் பயன்படுத்த முடியாதுள்ளது என்று கேள்வி எழுப்புகின்றனர் ஈழத் தமிழ் மக்கள்.

தமிழக மீனவர்களின் விவகாரத்தை எந்தளவுக்குத் தமது தேர்தல் வெற்றிக்குப் பயன்படுத்துகிறார்களோ அதேயளவு ஈழத் தமிழர் பிரச்சினையும் தேர்தலில் எழும். ஈழத் தமிழர் விவகாரம் தேர்தல் முடியும் தறுவாயில் அடங்கிப்போய் விடும்.

இப்போது நடக்கப்போகும் தமிழகத் தேர்தலில் ஆளும் கட்சிக்கு தமிழக மீனவர் பிரச்சினை பெரும் பின்னடைவைக் கொண்டுவரும் என்பதால் இந்தியா தனது கூட்டாளியான தமிழக முதல்வர் கருணாநிதிக்காக விரைந்து செயற்பட்டுள்ளது.

சமீப நாள்களாகத் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் தீவிரமடைந்திருந்தன. இரு மீனவர்கள் கொல்லப்பட்டனர்.

அதன் எதிரொலியாக தமிழக மீனவர்கள் கடலில் இறங்க மறுத்துவிட்டனர். தமக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று கோரிப் பெரும் போராட்டங்களை முன்னெடுத்தனர். இதனால் பதற்றமான சூழல் உருவாகி, அரசுக்கு எதிராக எதிர்ப்பு வலுவடைந்தது.

இதன் எதிரொலி அவசர அவசரமாகத் தனது எதிர்ப்பை சென்னையில் உள்ள இலங்கைத் தூதரை அழைத்து இந்தியா தெரிவித்தது. அதைத் தொடர்ந்து வெளிவிவகார அமைச்சு இலங்கை வெளிவிவகார அமைச்சுக்குத் தனது ஆட்சேபத்தைத் தெரிவித்தது.

இதற்கு மேலாக இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தொலைபேசியில் தனது அரசாங்கத்தின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார்.

இந்திய மீனவர் சுடப்படும் சம்பவத்துக்கும் இலங்கைக் கடற்படையினருக்கும் தொடர்பு இல்லை என இலங்கைக் கடற்படை தெரிவித்தபோதும் -

இந்தியாவின் விடாப்பிடியான போக்குக் காரணமாக இந்திய வெளிவிவகார அமைச்சுச் செயலர் நிருபமாராவ் இலங்கை வந்தார்.

இலங்கையில் 24 மணி நேரம் அவர் தங்கியிருந்த போதும், இந்திய மீனவர் பாதுகாப்பு விடயத்தை முன்னிலைப்படுத்தி பலருடன் பேசி இலங்கையைத் தனது காலடிக்கு கொண்டுவந்துவிட்டார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க, வெளிவிவகாரச் செயலர் சி.ஆர்.ஜெயசிங்க ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார் நிருபமா ராவ்.

எத்தகைய சந்தர்ப்பத்திலும் மீனவர்களுக்கு எதிராக தாக்குதல்களை நடத்துவதில்லை என்று இந்திய - இலங்கை அரசுகள் இணக்கம் கண்டுள்ளன என இரு நாடுகளும் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

இலங்கையும் இந்தியாவும் மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுள்ளமை இந்திய மீனவர்களுக்கு நல்ல செய்தியாகத் தான் இருக்கும். அவர்கள் நிம்மதியாகத் தமது தொழிலை முன்னெடுக்க வாய்ப்புக் கிட்டியுள்ளது. மீனவர்கள் ஊடுருவி வளங்களைச் சூறையாடுவதை நிறுத்த வேண்டும் என இலங்கை மீனவர்கள் கோருகிறார்கள். அதற்கான சூழலை இரு நாடுகளும் எடுக்க வேண்டியது அவசியம்.

இதற்கு மேலாக தமிழக அரசியலில் கருணாநிதிக்கு இருந்த எதிர்ப்பும் முடிவு வந்துள்ளது.

தேர்தலை மையமாக வைத்து தமிழக அரசு இந்திய மீனவர் விடயத்தைக் கையாண்டு, வென்றது போல, இலங்கைத் தமிழர் விடயத்தையும் தேர்தலில் மையப்படுத்தி அதற்கான தீர்வை இலங்கை வழங்க இந்தியா அழுத்தம் கொடுக்குமா என்று கேள்வி எழுப்பப்படுகிறது.

இலங்கையில் நியாயமான தீர்வை இந்தியா வலியுறுத்துகின்றது என்று அடிக்கடி கூறிக்கொண்டிருக்கும் போக்கை மாற்றி, தமிழகத் தேர்தலுடன் ஈழத்தமிழர்களுக்கு விடிவு கிடைக்க இந்திய மத்திய அரசுடன் இணைந்து கருணாநிதி முயலவேண்டும்.

மீனவர் பிரச்சினையை எவ்வாறு கையாண்டதோ அதேபோன்று ஈழத்தமிழர் பிரச்சினையையும் தமிழகம் கையாளவேண்டும் என்பதே ஈழத் தமிழரின் விருப்பமாகும்.

## எதிரணிக்கு வாய்ப்பளித்த உள்ளூராட்சித் தேர்தல்

அதுநிற்க -

இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. சகல கட்சிகளும் தமது பிரச்சாரங்களை ஆரம்பித்துவிட்டன.

தேர்தலுக்காக நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் பணிகள் கடந்த மாதம் 27 ஆம் திகதி முடிவடைந்துவிட்டன. நியமனப் பத்திரங்களைத் தவறாகத் தாக்கல் செய்ததால் 450 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் 19 வேட்பு மனுக்கள் உட்பட 35 ஆளும் கட்சியின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் ஆளும் கட்சி சார்பில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட ஈ.பி.டி.பி. தாக்கல் செய்த சகல வேட்பு மனுக்களும் நிராகரிக் கப்பட்டுள்ளன. இதன் காரணமாக ஈ.பி.டி.பி. போட்டியிட்ட ஒரே மாவட்டமான யாழ்ப்பாணத்தில் அக் கட்சியால் தேர்தலில் நிற்க முடியாது போய்விட்டது.

உள்ளூராட்சிச் சபைகளுக்குக் கடந்த தடவை இடம்பெற்ற தேர்தலில் சகல சபைகளின் நிர்வாகங்களையும் கைப்பற்றிய ஈ.பி.டி.பி. இம்முறை ஒரு சபையையும் தம்வசம் எடுக்க முடியாது போய்விட்டது.

வடக்கில் யாழ். மாநகர சபை ஒன்று தான் அக்கட்சியின் வசம் உள்ளது. ஏனையவை எல்லாம் வேறு கட்சியின் ஆட்சிக்கே போகப் போகின்றது.

இது ஒரு பின்னடைவாக இருந்தாலும் மீண்டும் எழுந்து வருவோம் என அக் கட்சி கூறியுள்ளது.

**யாழவன்**

ஐ.தே.கட்சியின் ஒன்பது மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒன்பது மனுக்களும், ஜே.வி.பியின் இரண்டு மனுக்களும், தமிழரசுக் கட்சியின் இரண்டு மனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

ஆளும் கட்சியின் 35 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதால் பெரும்பான்மையான சபைகள் எதிர்க்கட்சிகளின் வசமாகப் போகின்றன.

நிராகரிக்கப்பட்ட சபைகளில் போட்டியிடும் சுயேச்சைக் குழுக்களின் ஆதரவைப் பெற்று அரசு பிரசாரம் செய்து ஆட்சியைப் பிடிக்க முயற்சி எடுத்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் போன்று பெரும் எண்ணிக்கையான சுயேச்சைக் குழுக்கள் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடாத காரணத்தால் அந்த முயற்சி வெற்றியைக் கொடுக்காது.

பெரும்பான்மையான சபைகளின் அதிகாரம் எதிர்க்கட்சிகளின் கைகளிலேயே போகப்போகின்றது. அது அரசுக்கு நெருக்கடியாகத்தான் அமையப் போகின்றது. ★★★

# சேலை அமுலாக்கம்



(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் தனியாகும் போது இயங்க முடியவில்லை. பெண்ணிலை உளவியல் ரீதியில் மோசமாக பாதிக்கப்பட்டவையாக பெண் சமூகத்தாலேயே நோக்கப்பட்டனர்.

நவீனம், அதிநவீனமாக வளர்ந்து பெருத்து மனிதனின் வாழ்க்கை முறைகள் அனைத்தையும் தன் இரக்கமற்ற பொருளாதார வாய்களால் மென்று தின்றுகொண்டிருக்கின்ற சூழலில் நாம் வாழ்கிறோம். இங்கு பெண் விற்பனைப் பொருள். அழகியாக, நடிகையாக வணிகங்களில் விளம்பரப்படுத்தப்படுகிறாள்.

சமூகத்தில் இதையொத்த தாக்கம்

> **சேலைப்பண்பாடும் நாயக்கர் காலத்தை தொடர்ந்து வந்த ஆண்களின் எண்ணம் தான். அண்மையில் யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. அரச அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள் தமிழரின் கலாசார பண்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் சேலையுடன் தான் வேலைக்கு வர வேண்டும் என்பதே அது.**

அண்மைக்காலங்களில் அதிகரித்துப் போவதைக்காணலாம். எந்த விழிப்புணர்வும், அறிதல் செயற்பாடும் இல்லாமல் புதிய வரவுகளை அப்படியே பின்பற்றுதல் ஆபத்தானதாக அமையும் என்பதை வெகுவிரைவில் காலம் உணர்த்தும்.

தற்காலத்திலும் இதற்கு முன்பும் சமூகப் பெண்கள் ஆண் வர்க்கத்தினால் இலகுவாக பயன்படுத்திக் கொள்ளும் பொருளாகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். வடக்கு, கிழக்குப் பாகங்களில் முளைத்திருக்கின்ற எல்லா நிறுவனங்களிலும், கணனி நிலையங்களிலும், அழகு சாதன நிலையங்களிலும், வங்கிகளிலும் பெண்களே சில்லறை ஊழியர்களாக நிறுத்தப்பட்டிருக்கின்றனர். இதற்குப் பல காரணங்கள் உண்டு. பெண்களைக்கொண்டு இலகுவாக வேலை வாங்கலாம். திருப்பிப் பேசமாட்டார்கள். கொடுக்கும் காரியத்தை அப்படியே செய்து முடிப்பார்கள். ஆணுக்கு ஒரு கவர்ச்சிப் பொருள். இந்த விடயத்தில் வங்கிகள் பெரும்பாலும் ஒரு பொதுக் கொள்கையையே கடைப்பிடிக்கின்றன. 'அழகானவர்கள்' என்று ஆணியம் கட்டமைத்திருக்கின்ற வெள்ளைத் தோல்காரிகளையே தெரிவு செய்திருக்கும். இந்த நிலையங்களில் நிகழ்த்தப்படும் மனித உரிமை மீறல், பெண்ணுரிமை மீதான தாக்குதல் போன்றவற்றை யாருமே கண்டுகொள்வதில்லை. பாதிக்கப்படும் பெண்களே இவற்றை அனுசரித்துப் போகவே துணிகிறார்கள். ஏனெனில் சமூகம் என்பது ஆணின் உலகம் தானே.

இவ்வாறு வேலைக்கு அமர்த்தப்படும் பெண்களே சுயபொருளாதார ரீதியில் ஆண்களுக்கு நிகரானதாக மாறுகின்றது என்ற நேர்விளைவை தவிர மற்றவை யெல்லாம் மறைப்பெறுமானம் உடையவையே. ஒரு சமூகத்தின் பண்பாட்டு விருத்தியென்பது தனியே பொருளாதாரத்தில் மட்டும் தங்கியிருப்பதில்லையே.

அண்மைக்காலங்களில் வடக்கு, கிழக்குப்பிராந்தியங்களில் உள்ள உயர் பதவிகளில் பெண்கள் அமர்த்தப்படுகின்றனர். இது தென்னாசிய சமூகங்களுக்கு ஒரு நல்ல முன்னுதாரணம் ஆகும். ஆனால் இதில் இருக்கும் அரசியலை பெண்கள் புரிந்து கொள்ளவேண்டும். புரட்சித் தோல்வி ஒன்றின் பின்னரான சமூகம் ஒன்று எப்போதும் குமுறிக்கொண்டே இருக்கும் உளவியலை உடையது. அதனை வழிநடத்தும் உயரதிகாரிகள் மென்மைப் போக்குடையவர்களாக இருக்க வேண்டும், அல்லது வன்மைப் போக்குடையவர்களாக இருந்தால் மாத்திரமே இன்னொரு புரட்சியைத் தவிர்க்க முடியும். இங்கு, பெண்களைக் கொண்டு இதனை இலகுவாக நடைமுறைப்படுத்த முடியும் என ஆணியம் சூழமைத்த தந்திரம் பலிக்கிறது. எந்த முடிவையெடுப்பினும் தனக்கு மேல் உள்ள அதிகாரியின் அனுமதியுடன் செயற்படுவதில் பெண்கள் எப்போதும் கவனமாயிருப்பர். அவர்களின் சுயம் அவர்களுடையதாய் இருப்பதில்லை என்பது இதற்கு காரணம்.

மலையகப் பெண்கள் எதிர்கொள்வது வேறுவகையான சுரண்டல். நாள் முழுவதும் வேலை செய்யும் அதற்குரிய சரியான ஊதியத்தைப் பெறமுடியாமை, அதிகரித்து வரும் பாலியல் கொடுமையென வெளிச்சொல்ல முடியாத துயரங்களுக்குள் அவர்களது வாழ்க்கை முறை செல்கிறது.

ஆணிய உலகம் உடைகள் மூலம் பெண்கள் மூலம் ஏற்றிவைக்கும் பெண்பற்றிய கருத்தாக்கங்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படவேண்டியவை. உடை ஒன்றே நம் உடலுக்கு எப்போதும் நெருக்கமானதாக அமைகிறது. உடையில்லாதவரை பிச்சைக்காரன் என்கிறோம். உடலை மறைக்கவும் பாதுகாக்கவும் சுற்றுச் சூழலின் தாக்கத்தில் இருந்து நம்மைக் காத்துக் கொள்ளவும் உடை அவசியமானது. ஆனால் அரசியல் உருவாக்கியிருக்கும் உடைமீதான கண்ணோட்டம் வேறானது. அது ஒரு மொழியாக, உளவியலாக பாவிக்கப்படுகிறது. காந்தி, புத்தர், சில ஆளுமை மிக்க அரசியல் தலைவர்கள் இதனைக் கைக்கொண்ட உதாரண புருஷர்கள். அண்மைக்காலத்தில் இந்திய இராணுவத்தினரின் வன்புணர்ச்சிக்கு எதிராக காஷ்மீர் மக்கள் நிர்வாணத்தை ஆயுதமாகப் பயன்படுத்தி இருந்ததை குறிப்பிடத்தக்கது.

உடைகளுக்குப் பின்னால் இவ்வளவு அரசியல் பின்புலம் இருக்க பெண் உடைகள் மட்டும் ஆண்களுக்கு கவர்ச்சி தரக்கூடிய வகையில் உருவாக்கப்படுவதையும், விளம்பரப்படுத்தப்படுவதையும் புரிந்து கொள்ளவேண்டும். பெண்களை அடிமையாக்கி வைத்திருப்பது பெரும்பங்கு ஆடை, அலங்கார, அழகுணர்ச்சிகளே. நவநாகரீகம் பெண் சமூக வயப்படுதல் மற்றும் பெண் சுதந்திரம், முற்போக்கு சிந்தனை இன்ன பிற.. பெயர்களால் பெண்கள் ஆண்களின் இச்சைக்கு காட்சிப்பொருளாக்கப்படுவது அதிகரித்து வருகிறது.

நவநாகரீகமானது அதிகாரங்களினால் கட்டமைக்கப்படுவது. அதிகாரம் முழுவதும் ஆண்களின் கைகளிலேயே இருக்கின்றது. அவர்கள் எதிர்பாலருக்காக எதை விரும்புகிறார்களோ அதையே ஊடகங்கள் கொண்டு செல்கின்றன. இணையத்தளம், சினிமா எனப் பல தகவல் வழிகளும் பெண்களின் தோல்கள் அற்ற விளம்பரங்களை வெளியிடுவதில்லை. Fair & Lovely தொடக்கம் பீ.டி. வரைக்குமான விளம்பரங்கள் பெண்களின் தோலூடாகவே நகர்த்தப்படுகின்றது. பெண் ஆடைகள் விடயத்திலும் இவைகள் தாராளம் காட்டுவதில்லை. உதாரணமாக ஒரு தமிழ் சினிமாவில் வரும் கதாநாயகனின் அம்மாவும் தங்கையும் போர்த்திய ஆடைகளுடன் 'புனித' பாத்திரங்களாகவே வருவர். ஆனால் கதாநாயகி உள்ளாடைகளுடன் வருவதையே கதாநாயகன் விரும்புவார். இது நாம் உருவாக்கிக் கொண்ட கற்பிதமா? அல்லது அதிகார வர்க்கம் திணிக்கும் கலாசார திணிப்பா? பெரும்பாலான பெண்கள் கதாநாயகியையே பின்பற்றுகின்றனர். இது ஒரு சர்வதேச வர்த்தக மையம் தான் வடிவமைக்கும் புதிய புதிய ஆடைகளை விற்பதற்கான ஒரு விளம்பர உத்தி என்பதை புரிந்து கொள்வார்களா?

இதற்கு எதிராக எமது கலாசாரம் பண்பாடு என்ற பார்வையில் பெண்கள் மீண்டும் ஆணாதிக்கத்தனத்தின் உச்சிக்குக் கொண்டு போகப்படுகின்றனர். தென்னாசிய சமூகங்களின் கலாசாரத்தையும், பண்பாட்டையும் உருவாக்கியவர்கள் ஆண்களே. அர்த்தசாஸ்திரம், மனுதர்மசாஸ்திரம், காம சாஸ்திரம், சங்க இலக்கியங்கள் யார் எழுதியது? பெண்கள் எப்படி ஆணுக்கு இருக்க வேண்டும் என்பதை ஆண்கள் தீர்மானித்தார்கள். அதை சட்டமாக எழுதினர். ஓவியமாக தீட்டினர். சிற்பமாக வடித்தனர். அவர்களது பார்வையில் குனிந்த தலை, வில்போன்ற புருவம், மீன் போன்ற கண்கள், பருத்த மார்பு, சிறுத்த இடை... இது பெண் பற்றிய ஆணியப் பார்வையே தவிர பெண் பற்றிய பெண்ணியப் பார்வை அல்ல.

சேலைப்பண்பாடும் நாயக்கர் காலத்தை தொடர்ந்து வந்த ஆண்களின் எண்ணம் தான். அண்மையில் யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. அரச அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள் தமிழரின் கலாசார பண்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் சேலையுடன் தான் வேலைக்கு வர வேண்டும் என்பதே அது. அதனை நடைமுறைக்கு கொண்டு வந்தவர் ஒரு பெண் உயரதிகாரி என்பது அனைவருக்கும் தெரியும். அப்படியாயின் அதே அலுவலகத்தில் பணிபுரியும் ஆண்கள் அனைவரும் தமிழர் கலாசாரத்தைப் பின்பற்றும் வகையில் வேட்டியுடன் தான் வரவேண்டும் என்பதை அவரால் அமுல்படுத்த முடியுமா? இது யாருடைய அமுலாக்கம்? உண்மையிலேயே ஒரு பெண் உயர் அதிகாரியாக, சமூகத்தை வழிநடத்தும் சக்தியாக மாறும் போது அவளுள் படிந்துள்ள ஆணிய உளவியலின் வெளிப்பாடே இது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

### இதற்கு என்ன தான் தீர்வு?

உடை என்ற விடயத்தில் சூழல் தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கின்றது. பலர் கூடும் இடங்களிலும், எமது அன்றாட நடைமுறையிலும் அருகிலிருப்பவர்களுக்கும், ஏனையோருக்கும் இடையூறு இல்லாமல் அணிந்தால் சரி. ஆண் - பெண்

> **பெண் ஆடைகள் விடயத்திலும் இவைகள் தாராளம் காட்டுவதில்லை. உதாரணமாக ஒரு தமிழ் சினிமாவில் வரும் கதாநாயகனின் அம்மாவும் தங்கையும் போர்த்திய ஆடைகளுடன் 'புனித' பாத்திரங்களாகவே வருவர். ஆனால் கதாநாயகி உள்ளாடைகளுடன் வருவதையே கதாநாயகன் விரும்புவார்.**

உடலீர்ப்பு இயற்கையால் தீர்மானிக்கப்பட்டது. அது ஒரு உளவியல். இதனைப் புரிந்து கொண்டு நவநாகரீகத்தையும் கலாசார பண்பாட்டையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பிக் கொள்ளாமல் பெண் சுதந்திரத்திற்காக உரிய வகையில் செயற்படலாம்.

***



# வைரமாளிகை

## அடிவானத்துக்கப்பால்..

## - யாழ்ப்பாணத்தின் முதல் விளம்பரம்

விளம்பரங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் உலகத்தில் நாங்கள் வாழுகிறோம். விளம்பரம் இல்லாவிட்டால் வியாபாரமே இல்லை என்கின்ற சூழலை பெரிய பெரிய விளம்பரக் கம்பனிகள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றன.

தாமிரகத்தில் நகைக்கடை விளம்பரத்துக்கு சினேகா வந்தது போய் இப்பொழுது இளையராஜா வந்திருக்கிறார்.

காலம் எப்படி மாறுகிறது. விளம்பரங்கள் எப்பொழுதும் எல்லோரையும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றன.

இப்பொழுதெல்லாம் சினிமா திரை அரங்கிற்குப் போனால் அரை மணித்தியாலம் விளம்பரத்தைப் போட்டுத் தொலைக்கிறார்கள். அரை மணித்தியாலம் எங்களை வீணடித்து விட்டுத்தான் படத்தைப் போடுகிறார்கள்.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது விளம்பரம். ரீ.வியில் ஒரு புறோகிராம் உருப்படியாகப் பார்க்க முடிவதில்லை. விளம்பரத்துக்கு மேல் விளம்பரம்.

எனது நண்பர் ஒருவருக்கு வழுக்கைத் தலை. மொட்டைத் தலையை அப்படியே விட்டால் என்ன? கல்சியக் குறைவோ என்ன இழவோ? முடி கொட்டி விட்டது. முடி இல்லாமல் உலகத்தில் ஆட்கள் வாழவே இல்லையா? இவர் ஒரு இடத்துக்கு போனார். அவர்களும் காசைக் கறந்து முடி நட்டார்கள் தலையில்.

இப்பத் தலையில் புதிய வலி ஒன்று வந்து அவதிப்படுகிறார். மொட்டையாக இருந்த நேரம் சுக தேகியாக இருந்தவர் இப்பொழுது தலைவலியால் கிடந்து உழலுகிறார். இயற்கைக்கு மாற்றமாகப் போனால் இப்படித்தான் நடக்கும். கறுப்பாக முகத்தை வெள்ளையாக்குகிறோம், அப்படி இப்படி என்று விளம்பரங்கள் கொட்டிக்கிடக்கின்றன.

விளம்பரங்கள் முழுவதும் பெண்ணுடல்கள் நிர்வாணமாகக் கிடக்கின்றன. எங்கு பார்த்தாலும் விளம்பரத் தட்டிகளில் கடை விரித்திருப்பது பெண்ணுடல்கள்தான். பெண்ணுரிமை பேசும் அமைப்புகளுக்கு இந்த அடாவடித்தனத்தைத் தட்டிக் கேட்க நாதியில்லை. உலகம் விளம்பரத்தின் பின்னால் அலைந்து கொண்டிருக்கிறது.

என்ன பொருள் வாங்குவது என்று தீர்மானிப்பவர்கள் நாங்களாகத் தான் இருக்க வேண்டும். எங்கள் தேவையை மற்றொருவன் தீர்மானிக் கிறான். அது தான் கொடுமை.

நாங்கள் என்ன சோப் போட வேண்டும், என்ன பெனியன் போட வேண்டும், என்ன ஜட்டி போட வேண்டும், என்ன சைக்கிள் வாங்க வேண்டும், என்ன பால் குடிக்க வேண்டும், என்ன சாறி உடுத்த வேண்டும் என்று வியாபாரி நினைக்கிறானே இதுதான் கொடுமை என்று சொல்கிறேன்.

நான் சிறுவனாக இருந்த பொழுது முல்லைத்தீவில் இருந்து 85 ஆம் நம்பர் பஸ்ஸில் யாழ்ப்பாணம் போன நினைவு வருகிறது.

அம்மாவிடம் உடுப்பிட்டிக்கு போவதற்குப் பெமிசன் வாங்கினதற்குப் பிறகு சிலநேரம் திரும்பிக் கூப்பிட்டு விடுவாவோ என்று பயந்து இரண்டு மூன்று பஸ் ஸ்டாப் தள்ளிப் போய் நின்று கொண்டு தான் பஸ் ஏறுவேன். ஓட்டுசுட்டானில் இருந்து யாழ்ப்பாணம் போவதென்றால் வலு புளுகம் எனக்கு.

யாழ்ப்பாணம் பஸ் ஸ்ராண்டில் நான் கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு மனிதர் வைரமாளிகை. வைரமாளிகையைப் பற்றி இப்பொழுது நினைத்தாலும் அவரின் தோற்றம் கண்ணுக்குள் அப்படியே நிற்கிறது.

லண்டனில் இருந்து கொண்டு இப்பொழுது நினைக்கும் போதும் வைரமாளிகை முப்பது வருசத்துக்கு முன்னால் காலை அகட்டி கையை விரிச்சுக் கொண்டு கம்பீரத்துடன் நிற்பது கண்ணுக்குள் தெரிகிறது. வெளிர் நீல நிறத்தில் பட்டுத்துணியில் வைரமாளிகை என்று எழுதி, தோளில் உலக அழகிகள் பட்டத்துக்கு போடுற மாதிரி துண்டு ஒன்றை போட்டிருப்பார்.

வைர மாளிகை நகைக்கடையின் விளம்பரமாக அவர் நடமாடினாலும் நகைக் கடைக்கு மக்கள் போகிறார்களோ இல்லையோ இவரை மறக்க மாட்டார்கள். இன்றும் வைரமாளிகை மனதில் நிற்கின்ற ஒருவர் தான்.

லொத்தர் டிக்கட்டுக்கள், பத்திரிகைகள் விற்பார். சத்தம் போட்டு "22" கரட் தங்க நகைகள். நயம் நம்பிக்கை நிறைந்தது. என்று வைரமாளிகைக்கு விளம்பரம் செய்வார்.

யாழ்ப்பாணத்தின் விளம்பர உலகத்தை வித்தியாசப்படுத்திய மனிதர் அவர்.

எடுப்பான கறுவல் மனிசன் அவர். அப்பவே 55, 60 வயது மதிக்கலாம். 1960 ஆம் ஆண்டு முதல் அவர் விளம்பரங்கள் செய்து வந்தார் என்று கேள்விப்பட்டேன்.

நல்லூர் கோவில் திருவிழாவில், பெரிய கோவிலில் காணலாம். பெரும்பாலும் பஸ் ஸ்ராண்டை சுற்றி சுற்றியே வருவார். திடீரென்று காதுக்குக் கிட்ட வந்து உரத்த குரலில் கத்தி ஏதாவது சொல்லுவார். உண்மையில் ஏன் சின்ன வயதில் நான் அவரைக் கண்டு பயந்திருக்கிறேன்.

அவர் ஒரு பயப்படும்படியான மனிதராகவே எனக்கு அப்பொழுது பரிச்சயமானார்.

நடப்பார்; ஓடுவார்; பாடுவார்; ஆடுவார் வைரமாளிகை ஒரு விகடகவியாகவே இருந்தார். யாழ்ப்பாணத்தில் அவரை விளங்கிக் கொண்டவர்கள் அரிதாகவே இருந்தனர். இவருக்கு என்ன விசரோ என்று எனது காதுபட ஆட்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

அவரின் நடையுடை பாவனை அப்படி இருந்தது. அவர் ஏன் அப்படி செய்கிறார் என்று பலருக்கு தெரியாது.

ஓய்வில்லாத ஒரு மனிதராக அவர் இருந்தார். வைரமாளிகை ஒரு இடத்தில் இருந்து நான் எப்பொழுதும் பார்த்ததில்லை.

வலியப் போய் உதவி செய்வார். வன்னியில் இருந்து வந்து பஸ் எது வென்று தெரியாமல் தடுமாறும் கிராம மக்களுக்கு உதவி செய்வார்.

வயதாளிகள், கண்தெரியாதவர்களைக் கையில் பிடித்து பஸ்ஸில் ஏற்றி விடுவார். றோட்டைக் கடக்க உதவுவார். ஒரு வேடிக்கை காட்டும் மனிதராகவே அவரை மக்கள் பார்த்தார்கள். பேப்பர் விற்கும் போது அதில் வரும் தலைப்புச் செய்திகளை உரக்கப் படித்து காட்டுவார். அவர் ஒரு நடமாடும் செய்திக் களஞ்சியமாகத் திரிவார். அவரிடம் எல்லா வகையான செய்திகளும் இருக்கும்.

அவருடைய பிறப்பு வளர்ப்பு எல்லாம் மானிப்பாய் என்று கேள்விப்பட்டேன். குடும்பம் பற்றி தெரியாது. திருமணம் முடிக்கவில்லை. தனிக்கட்டையாகவே வாழ்ந்திருக்கிறார்.

அவருக்கு வைரமாளிகை நகைக் கடை விளம்பரம் செய்வதற்கு சம்பளம் அந்த நேரத்தில் மாதம் 60 ரூபா கொடுத்ததாக அறிகிறேன்.

1980 ஆம் ஆண்டுகளில் நிலைமை மாறத் தொடங்க யாழ்ப்பாணத்தில் மணிக்குரல் றேடியோ சேவை அப்பொழுது ஆரம்பித்தது.

யுத்தம் ஆரம்பித்த பிறகு இயல்பு வாழ்வு பறிபோனதற்கு பின்பு வைரமாளிகையால் முன்பு போல வாழ முடியவில்லை என்று கேள்விப்பட்டேன்.

வைரமாளிகை நகைக்கடை வியாபாரம் முடங்கியது. கடைக்கு விளம்பரம் தேவையில்லாததாகி விட்டது. 1987 ஆம் ஆண்டு தொழிலை கிட்டத்தட்ட முழுமையாக விட்டே விட்டார். அவர் உணவுப் பொருட்கள் வாங்கி சிறியளவில் விற்று தனது சாப்பாட்டு தேவையைப் பூர்த்தி



செய்து கொண்டார்.

யாழ்ப்பாண மக்களை அறிவு பூர்வமாக நேசித்த ஒரு கலைஞன், மக்களோடு மக்களாக வாழ்ந்த அந்த வைரமாளிகை 1987 ஆம் ஆண்டு எவராலோ சுட்டுக் கொல்லப்பட்டார்.

1987 உடன் அவரின் கதை

### இளைய அப்துல்லாஹ்

முடிந்து விட்டது. அதற்குப்பிறகு ஒரு மனித விளம்பரம் யாழ்ப்பாணத்தில் தோன்றவே இல்லை.

அந்தக் காலத்தில் எங்கள் கிராம மக்கள் எந்த விளம்பரத்தையும் எதிர்பார்த்து சாமான் வாங்கவில்லை.

வாழ்க்கைக்கு தேவையான பொருட்களை வாங்கினால் மகிழ்ச்சியாக ஆரோக்கியமாக இருந்தார்கள்.

சிம்பிளான வாழ்வுக்கு அங்கு எல்லாம் இருந்தது. நாலு சாறி, மூன்று நாலு முழம், நாலு சாரம் இரண்டு துவாய் என்று ஒரு குடும்பத்தில் உடுதுணிகள் இருக்கும்

ஒரு புதுவருடம் என்றால் பொங்கல், புதுவருடம் வர வேண்டும். இந்த நேரம் புது உடுப்பு வந்தாலே ஒரு சந்தோஷம் தான்.

'பொலிபோல்' மருந்துக்குப் பெரிய விளம்பர தட்டி வைத்திருப்பார்கள். ஆனால் யாரும் விளம்பரத்தை பார்த்து பொலிபோல் வாங்க மாட்டார்கள். தேவைப்பட்டால் வாங்கி புல்லு சாக அடிப்பார்கள்.

அந்த நேரம் இப்பொழுது போல நுகர்வுக் கலாசாரம் இல்லை. இப்போது வாழ்வை விளம்பரங்கள் அபகரித்து விட்டன. விளம்பரங்கள் பிள்ளைகளையும் பெண்களையும் ஆட்டிப்படைக்கின்றன.

இலங்கையில் பரவாயில்லை. காட்டுகிற எல்லாவற்றையும் வாங்க முடியாது. இங்கு லண்டனில் பெண்களும் பிள்ளைகளும் விளம்பரத்துக்கு பின்னால் தலையைப் பிய்த்துக் கொண்டு ஓடுகிறார்கள்.

ரீவியில் காட்டிய டிசைனை உடனே வாங்கி உடுக்க வேண்டும் இல்லாவிட்டால் தெய்வக்குற்றம் வந்துவிடும் போல அலைகிறார்கள்.

சும்மா கூகிளில் போய் 'அட்வடைசிங்' என்று ரைப் பண்ணினால் 40 கோடியே 30 லட்சம் றிசல்ட் வருகிறது. குடிக்கிற தண்ணியில் இருந்து ரொயிலட் பேப்பர் வரை விளம்பரத்தில் தான் தங்கியிருக்கிறது.

உலகம் முழுவதும் 500 பில்லியன் அமெரிக்க டொலர் விளம்பரத்துக்காக செலவு செய்யப்படுகிறது. 1985 இல் பருமனைக் கூட்டுவதற்கு, எடை போடுவதற்கு விளம்பரம் செய்திருக்கிறார்கள் என்றால் பாருங்கள்.

இன்றைக்கு உடம்பை மெலியச் செய்வதற்கு விளம்பரம் செய்கிறார்கள். அதனை வாங்கி குடித்து விட்டு மக்கள் இடுப்பில் சக்தி இல்லாமல் ஒடிந்து விழுந்து விடுவார்களோ என்று பயமாய் இருக்கிறது.

இப்பொழுது பஸ், வான்கள், ரெயில், விமானம், றோட் என்று எங்கும் விளம்பரங்களே தொங்கிக் கொண்டிருக்கின்றன. விளம்பரங்கள் மனிதனை பைத்தியமாக்கிக் கொண்டிருக்கின்றன.

போதுமென்ற மனம் படைத்தவர்கள் மாத்திரமே இந்த விளம்பர யுகத்தில் இருந்து நிம்மதி பெறலாம். மற்றவர்கள் விளம்பரம் இழுக்கின்ற திசையில் இழுபட்டுக் கொண்டே இருக்கிறார்கள். பாவம். ★★★

# தேர்தலுக்கு முன்னர் கலைஞர் பதவி விலகுவாரா?

காங்கிரஸ் கட்சியின் தமிழகத்துக்கான மேலிடப் பொறுப்பாளராக இருந்து வந்த மத்திய சுகாதார அமைச்சர் குலாம் நபி ஆசாத் மாற்றப்பட்டு சோனியாகாந்தியின் அரசியல் செயலர் அஹமது பட்டேலும் பிரணாப் முகர்ஜியும் தமிழக விவகாரங்களை கவனிப்பர் என அறிவிக்கப்பட்டுள்ளது. குலாம் நபி ஆசாத் மாற்றப்பட்டமைக்கான காரணம் எதும் தெரிவிக்கப்படவில்லை.

சோனியா காந்திக்கு நெருக்கமானவர் எனக் கருதப்படும் இந்த அஹமது பட்டேலிடம் கட்சிதொடர்பான தமிழக விவகாரம் ஒப்படைக்கப்பட்டமை முக்கிய விடயமாகும். தி.மு.க.வுடன் தொகுதிப்பங்கீடு குறித்துக் காரமாகப் பேச காங்கிரஸ் தலைமை தயாராவது போன்ற தோற்றம் ஏற்பட்டுள்ளது. அ.தி.மு.கவுடன் கூட்டணி ஏற்படுத்தினால் காங்கிரசுக்கு 75 இடங்கள் தரப்படும் என பேரம் பேசப்பட்டுள்ளது. எனவே தி.மு.க கூட்டணியிலும் கணிசமான இடங்களைக் கோர காங்கிரசுக்கு தெம்பு ஏற்பட்டுள்ளதாம். எனினும் தமிழகத்தில் மீனவ மாவட்டங்களான நாகப்பட்டினம், ராமநாதபுரம் முதலிய வற்றில் கடலில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படும் சம்பவங்களால் காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசின் பெயர் கெட்டுப்போக நேர்ந்துள்ளது. மீனவர் அவலம் குறித்து டெல்லி சென்று பேசத் திறனில்லாத கலைஞர் தேர்தல் பேரம் பேச டெல்லி சென்று சோனியா காந்தியைச் சந்திக்கவுள்ளார். இது எதிர்க்கட்சிகளுக்கு சாதகமான துரும்பாக மாறியுள்ளது. தேர்தலில் வெல்ல இலவசங்களை மட்டுமே தி.மு.க நம்பியுள்ளது. மறுபுறம் எதிர்க்கட்சிகளுக்கோ மீனவர் பிரச்சனை, விலைவாசி உயர்வு, ராசாவின் ஸ்பெக்ரம் ஊழல் எனப்பல விடயங்கள் கையில் கிடைத்துள்ளன. விலைவாசி உயர்வு தமக்குப் பாதகமாக அமையும் என்பதை தி.மு.க உணர்ந்தே உள்ளது. தேர்தலுக்கு முன் கலைஞர் பதவி விலகி ஸ்டாலினை முதல்வராக்கலாம் என ஊகங்கள் அடிபடுகின்றன. இதற்கு காங்கிரசின் ஆதரவை டில்லி பயணத்தின் போது கலைஞர் கோரக் கூடும். தேர்தல் குறித்த கள நிலவரத்தை நாளாந்தம் தி.மு.க தலைமை கண்காணித்து வருகிறது. வெற்றி கிட்டும் என உறுதியானால் உடனடியாக தேர்தல் பிரசாரத்தின் நடுவே ஸ்டாலினை முதல்வர் என அறிவிக்கும் திட்டமும் உள்ளது. இதை விட தி.மு.க.வுக்கு மக்கள் ஆதரவில் இறங்குமுகம் உள்ளது என உளவுத்துறை உறுதிப்படுத்துமானால் உடனடியாக கலைஞருக்கு நோய் காரணமாக உயிராபத்து என அவரை வைத்தியசாலையில் அனுமதித்து அனுதாப வாக்குகளை அள்ளும் திட்டமும் தி.மு.க.வசம் தயாராக உள்ளதாம். விஜயகாந்த் பகிரங்க மேடையில் கலைஞரின் இந்த மலினமான திட்டம் பற்றிப் போட்டுடைத்துள்ளார். இவ்வாறு நோயாளி என பொய்நாடகமாடினால் அ.தி.மு.க எதிரிகள் நிச்சயமாக தி.மு.க.வுக்கு வாக்களிப்பர் என கலைஞர் நம்புகிறார்.

**தி.மு.க தலைமையைப் பொறுத்த வரை மேலும் பல அதிசய வியூகங்களை வகுக்கத் தயராகி வருகிறது. இரு பெரும் திராவிடக்கட்சிகளுமே வென்றே ஆகவேண்டிய நிர்ப்பந்தத்தில் களமி றங்கும் முக்கிய தேர்தலாக இது அமையவுள்ளது. மறுபுறம் தேர்தல் நெருக்க நெருக்க புதுப்புது தொந்தர வுகளும் தி.மு.க.வுக்கு எதிராக முளைத்த வண்ணம் உள்ளன.**







# தமிழகத்துக்கான காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் மாற்றத்தின் மர்மமென்ன?

எஸ்.சுரேந்திரஜித்

1984 டிசெம்பர் சட்டசபை தேர்தலில் எம்.ஜி.ஆர் இப்படி படுக்கையில் இருந்தே ஜெயித்துக் காட்டியது கலைஞருக்கு நன்றாகவே நினைவில் உள்ளது. இவ்வாறு நாடகமாடுவது என்பது கலைஞருக்கு ஒன்றும் புதிதல்லவே. ஏற்கனவே கலைஞர் ஈழத்தமிழருக்காக 2 மணி நேர உண்ணாவிரதம் என நாடகமாடியவர் தானே. கலைஞரின் இந்தத் திட்டத்தை விஜயகாந்த் மோப்பம் பிடித்தது தான் சிக்கல். உண்மையில் இந்தத்தேர்தலில் தி.மு.க.வுக்கு மிகப் பெரிய சவால் விஜயகாந்த் தான். விஜயகாந்த் நாளாந்தம் போடும் இத்தகைய சரவெடிகள் தி.மு.க.விற்குப் பெரும் சிக்கலாக முளைத்து வருகின்றன.

தான் முன்பு போட்டியிட்ட விருத்தாசலம் தொகுதியைவிட்டு விழுப்புரம் தொகுதியில் போட்டியிட விஜயகாந்த் தயாராகி வருவதாக தெரிகிறது விழுப்புரத்தில் கடந்த தேர்தலில் தே.மு.தி.கவுக்கு கணிசமான அறுவடை கிடைத்தது. அ.தி.மு.க வேட்பாளர் 10,000 வாக்குகளால் தே.மு.தி.க பெற்ற வேட்பாளர் பொன்முடியிடம் தோற்றிருந்தார். ஆனால் தே.மு.தி.கவுக்கு இருபதாயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகள் கிடைத்திருந்தன. அதாவது தே.தி.மு.கவின் அந்த வாக்குகள் அ.தி.மு.கவுக்கு கிடைத்திருந்தால் அ.தி.மு.க வேட்பாளர் வென்றிருப்பார். இவ்வாறு நூற்றுக்கு மேற்பட்ட தொகுதிகளில் தே.தி.மு.க வாக்குகளும் அ.தி.மு.க பெற்ற வாக்குகளும் சேர்ந்திருந்தால் தி.மு.க அணி தோற்றிருக்கும். இந்தக் கணக்கின்படி அ.தி.மு.கவும் தே.தி.மு.கவும் கூட்டணி சேர்ந்தால் நிச்சயமாக தி.மு.க தோற்கும் என்பது வெளிப்படை.

தி.மு.க தலைமையைப் பொறுத்த வரை மேலும் பல அதிசய வியூகங்களை வகுக்கத் தயராகி வருகிறது. இரு பெரும் திராவிடக்கட்சிகளுமே வென்றே ஆகவேண்டிய நிர்ப்பந்தத்தில் களமிறங்கும் முக்கிய தேர்தலாக இது அமையவுள்ளது. மறுபுறம் தேர்தல் நெருக்க நெருக்க புதுப்புது தொந்தரவுகளும் தி.மு.க.வுக்கு எதிராக முளைத்த வண்ணம் உள்ளன. கடந்த வாரம் போக்குவரத்துத்துறை தொழிலாளர்கள் பலகோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டனர். மேலும் பல அரசதுறை ஊழியர் பிரிவுகள் சம்பள அதிகரிப்பு கோரிக் போராட்டம் நடத்தவுள்ளதாகத் தெரிய வருகின்றது. முன்பு ஜெயலலிதா ஆட்சியில் அரச ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்த போது அவர்களில் பெருந்தொகையானோரை ஜெயலலிதா பணிநீக்கம் செய்ததும் அதன் பிரதிபலனாக அரச ஊழியர்கள் அடுத்த தேர்தலில் ஒட்டுமொத்தமாக தி.மு.க அணியை வெற்றியடையச் செய்ததும் நினைவிருக்கலாம். தொடர்ந்தும் ஏனைய தேர்தல்களிலும் அரச ஊழியர்கள் தி.மு.க.வுக்கே ஆதரவு வழங்கி வந்தனர். இன்று அதே அரச ஊழியர்கள் தி.மு.கவுக்கு எதிராகத் திரும்பி இருப்பது காலத்தின் கோலமே.

ராசாவின் ஸ்பெக்ரம் ஊழல், வானளாவிய விலைவாசி உயர்வு, ரவுடிகளின் அட்டகாசம், அரச ஊழியர் வேலைநிறுத்தமென தி.மு.கவிற்கு பிரதிகூலமான அம்சங்களே தொடர்கின்றன. ஜெயலலிதாவோ இவற்றைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயல்வதாகத் தோன்றவில்லை என அ.தி.மு.க தொண்டர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதேவேளை கலைஞரோ களநிலவரங்களை நாளாந்தம் கூர்ந்து கவனித்து அதிரடி முடிவுகளை வெளியிட்டு வருகிறார். கடந்தவாரம் மத்திய அமைச்சரவையில் மாறுதல் செய்யப்பட்ட போது ராசாவின் இடத்தில் தி.மு.கவின் வேறு எவருக்கும் அப்பதவி தரப்படவில்லை. தி.மு.கவும் வற்புறுத்தி எதையும் கேட்கவில்லை. காரணம் இப்போது கறாராக மத்திய மந்திரி பதவிகேட்டால் இளங்கோவன் தரப்பு தமிழ் நாட்டில் ஆட்சியில் காங்கிரசுக்கு பதவிகோருவர் என தி.மு.க அஞ்சியது. ராசா ராஜினாமா செய்த புதிதில் தி.மு.கவைச் சேர்ந்த வேறு ஒருவருக்கு தொலைத்தொடர்புத் துறையை தரவேண்டுமென பிரதமரிடம் தி.மு.க கோரிய போதிலும் அக்கோரிக்கை மறுக்கப்பட்டு காங்கிரசைச் சேர்ந்த மூத்த அமைச்சர் கபில்சிபலிடம் அத்துறை ஒப்படைக்கப்பட்டது. நடந்து முடிந்த அமைச்சரவை மாற்றத்தில் காங்கிரசிடம் கறாராக பேசாமல் நைசாக நழுவியதன் மூலம் தமிழ்நாட்டில் ஆட்சியில் பங்கு கோரும் காங்கிரஸ்களுக்கு வாய்ப்பூட்டுப் போட கலைஞர் முடிவெடுத்துள்ளார். எனவே களநிலவரம் தி.மு.கவுக்கு எதிராக இருப்பினும் கலைஞர் யதார்த்தத்தைப் புரிந்து செயல்படுவதில் ஜெயலலிதாவை விடப் பல மடங்கு வேறுபட்டிருக்கிறார். இது ஒருவேளை தேர்தலில் தி.மு.க.வை கரைசேர்க்க உதவக் கூடும் யார் கண்டது? ★★★

# கலாசாரமும் பண்பாடும் பெண்களுக்கு மட்டுந்தானா?

தமிழர்களின் கலாசாரம், பண்பாடு என்று பார்க்கும்போது ஒரே குழப்பமாக இருக்கிறது. எப்போதும் கலாசாரம், பண்பாடு என்று வரும் போது நம் நாட்டுப் பெண்களும், அவர்களது பொட்டும் தாலியும் உடைகளும்தான் அலசப் படுகின்றன.

ஏன் எமது நாட்டு ஆண்களுக்கென்று கலாசாரம், பண்பாடு எதுவுமே இல்லையா?

கலாசாரம், பண்பாடு என்று பார்க்கும்போது அதற்குள் எத்தனையோ விடயங்கள் அடங்குகின்றன. ஆனால் எமது பட்டிமன்றங்களும், ஒட்டு வெட்டுக்களும் பெண்களின் பொட்டும், தாலியும், உடையும்தான் விவாதத்துக்கான கரு என்று சொல்லிக் கொள்கின்றன.

அதையும் தாண்டிப் போவதானால், பெண்களின் மறுமணம் பற்றிப் பேசுகின்றன. ஆனால் ஆண்களின் மறுமணம் பற்றிப் பேசுவதில்லை. ஆண் மறுமணம் செய்து கொள்வது அதிசயமான விடயமே இல்லையாம். மனைவி இறந்த வீட்டுக்குள்ளேயே அவனுக்கு மறுமணம் பேசி, அவனது மனைவியின் தங்கையையோ அல்லது உறவுப் பெண்ணையோ நிச்சயித்து விடுவார்கள். ஏனென்றால் அவன் ஒரு ஆண்.

ஆனால் பெண்ணுக்கு மட்டும் கணவன் இறந்தவுடன் பொட்டை அழித்து, தாலியைக் கழற்றி, வெள்ளைச் சேலை உடுத்த வைத்து, "இனி உனக்கு ஆசாபாசம் எதுவுமே வரக்கூடாது" என்று சொல்லி, மூலையில் தள்ளி விடுகிறார்கள்.

**இது என்ன நியாயம்?**

ஆணுக்கும் பெண்ணுக்கும் என்று இப்படி வெவ்வேறு கலாசாரத்தையோ பண்பாட்டையோ உருவாக்கியது யார்?

பெண் பிள்ளையொன்று பிறந்து விட்டாலே பொன் வேண்டும், பொருள் வேண்டும், அவளை நல்லவன் கையில் பிடித்துக் கொடுத்து விடவேண்டும். என்று சிந்திக்கத் தொடங்கிவிடுவார்கள் பெற்றோர்கள். தமது ஆசைகளைக் குறைத்து, தேவைகளைத் தவிர்த்து அந்தப் பெண்பிள்ளைக்காகச் சேமிக்கத் தொடங்கி விடுவார்கள். முக்கியமாக ஆசிய நாடுகளில், குறிப்பாக இந்தியாவிலும் இலங்கையிலும் பெண்ணைப் பெற்றவர்கள் மிகவும் பரிதாபத்துக்கு உரியவர்களாகி விடுகிறார்கள்.

ஏதோ - ஒரு பெண் பிறந்ததே - இன்னொருவன் கையில் பத்திரமாக ஒப்படைக்கப்பட்டு, அவனிடம் அடங்கி ஒடுங்கி, அவனுக்கு ஆக்கிப் போட்டு, அவன் அடித்தாலும், உதைத்தாலும் அக்கம் பக்கம் தெரிய விடாது அவன் மானத்தைக் காத்து, அவனைத் தாய்மையுடனும், தோழமையுடனும் கவனித்து, பிறந்த வீட்டின் பெருமையைக் காப்பதற்கே, என்பது போல் இருக்கும் அவர்கள் செயற்பாடு.

இந்த நியதியில் எந்த மாற்றமும் ஏற்படக்கூடாது. அப்படி மாற்றம் ஏற்படுவதே ஒரு தப்பான விடயம் என்பது போலவே காலங்காலமாக எல்லாம் நடைபெற்றுக் கொண்டும் வருகின்றன.

எமது பண்பாட்டின்படி "ஒருவனுக்கு ஒருத்தி" என்ற வரையறையான கோட்பாடு, மிகவும் போற்றப்பட வேண்டிய ஒன்றுதான். ஒருவனுக்கு ஒருத்தியாக வாழும் போது மனதுக்கும் மகிழ்ச்சி. நிறைவு. பாலியல் நோய்களும் தவிர்க்கப்படும்.

ஆனால் ஆண்கள் மனைவி இருக்கையில் வேறு பெண்ணுடன் தொடர்பு கொண்டால், "ஆண்கள் சேறு கண்ட இடத்தில் மிதித்து தண்ணீர் கண்ட இடத்தில் கழுவுவார்கள். பெண்கள் அதைக் கண்டுகொள்ளக்கூடாது" என்கிறார்களே. இதுவும் தமிழர் பண்பாடா?

எமது பண்பாட்டில் ஏனிந்தப் பாகுபாடு? எமது கலாசாரமும் பண்பாடும் பெண்களுக்கு மட்டுந்தானா?

**தாலி, பொட்டு**

தாலி என்று இன்று விவாதிக்கப்படுகிறதே. இந்தத் தாலி ஆதிகாலத்தில் வெறும் மஞ்சள் கோர்த்துக் கட்டும் கயிறாகவே இருந்தது. அதாவது நாம் சமையலுக்குப் பாவிக்கும் மஞ்சள். மஞ்சள் ஒரு இயற்கையான கிருமி நாசினி. இருவர் திருமண பந்தத்தில் இணையும் போது, ஒருவரில் இருக்கும் தொற்றுக் கிருமிகளோ, நோய்களோ மற்றவரை அணுகாமல் இருக்கவும், கிருமிகளைச் சாகடிக்கவுமே இந்த மஞ்சள் காய் பயன் படுத்தப் பட்டது.

**சந்திரவதனா**

இதே காரணத்துக்காகத்தான் மணமக்களின் உடைகளிலும் மஞ்சள் பூசப்பட்டது. ஒரு கிராமத்தில் இருந்து இன்னொரு கிராமத்துக்கு அனுப்பப்படும் திருமண அழைப்பிதழுடன் நோய்க் கிருமிகள் சென்று விடாதிருக்கவே, அழைப்பிதழ் மஞ்சள் பூசி அனுப்பப்பட்டது. மஞ்சள் காயை, மஞ்சள் தண்ணீரில் தோய்த் தெடுத்த நூலில் கட்டித் தாலியாக அணிந்த காரணமே வேறு. ஆனால் அதுவே நாளடைவில் தங்கத்துக்கு மாறிவிட்டது.

இதே நேரத்தில் நகைத்திலங்கள், தங்கம் இவைகளுக்கு சில நோய்கள் எம்மை அணுகாமல் தடுக்கும் தன்மைகளும், சில நோய் களைத் தீர்க்கும் தன்மைகளும் உள்ளன. அத்தோடு காது குத்துதல், மூக்குக் குத்துதல் போன்றவை அக்கு பஞ்சர் ரீதியிலான நன்மைகளை எமக்குத் தருகின்றன.

இதே போலத்தான் பொட்டும். மூலிகைகள் கொண்டு செய்யப்படும் பொட்டை, நெற்றிப் பொட்டில் வைக்கும் போது அது மருத்துவ ரீதியாக உடலுக்கு நல்ல குளிர்ச்சியையும் நன்மையையும் தருகிறது.

இப்படியான நல்ல காரணங்களுக்காகக் கொண்டுவரப்பட்ட பல விடயங்கள் இப்போ தடம் மாறி, அவரவர் வசதிக்கேற்ப பல மாற்றங்கள் புகுத்தப் பட்டு, கலாசாரம் பண்பாடு என்பதற்கு என்ன அர்த்தங்கள் என்று தெரியாமலே பெண்கள் மேல் திணிக்கப்பட்டுள்ளன. கலாசாரம், பண்பாடு என்ற பெயரில் எமது பெண்கள் அடக்கப் படுகின்றனர். அடிமைப் படுத்தப்படுகின்றனர்.

முதலில் எமது கலாசாரத்தில், பண்பாட்டில் புகுத்தப்பட்ட அனர்த்தமற்ற மாற்றங்கள் களையப்பட்டு, தேவையான நல்ல புதிய விடயங்கள் புகுத்தப்பட வேண்டும். சேலை அணிவதுதான் பெண்களின் பண்பாடு என்றால், ஆண்களால் வேட்டியுடன் மட்டும் செல்ல முடியுமா?

சில விடயங்கள் காலத்துக்கேற்ப நேரத்துக் கேற்ப இடத்துக்கேற்ப மாறத்தான் வேண்டும். கலாசாரம் என்ற முறையில் கட்டிக்காக்க எம்மிடம் வேறு எத்தனையோ நல்ல விடயங்கள் உள்ளன. அவைகளைக் கட்டிக் காப்போம்.

★ ★ ★

## பாலியல் கொடுமையிலிருந்து சிறுமிகளைக் கவனியுங்கள்

குழந்தைகளுக்கு எதிரான பாலியல் கொடுமை அதிகரித்து வருகிறது. மிகவும் நெருக்கமாகப் பழகும் ஒருவரே இதில் குற்றவாளியாக இருப்பது தான் கொடுமையான விஷயம்.

குழந்தைகள் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்களா? என்பதைக் கண்டு சில வழிகள் முன்வைக்கப்படுகின்றன.



★ நடப்பது அல்லது உட்காருவதற்குச் சிரமப் படுவது.

★ மன உளைச்சலால் ஏற்படும் உடல் நலக் குறைவு, அனோரெக்சியா, புலிமியா போன்றவை.

★ சிறுநீர் அல்லது மலம் கழிப்பதில் அசௌகரியம்.

★ எந்த வயதுக் குழந்தையாக இருப்பினும் பால்வினை நோய்கள் இருத்தல்.

★ பாடங்களைக் கற்றுக்கொள்வதில் சிரமம். காரணமில்லாமல் குறைவான மதிப்பெண்களைப் பெறுவது. ஞாபகசக்திக் குறைபாடு, சிந்தனையை ஒருமுகப்படுத்துவதில் சிரமம் போன்றவை.

★ விளையாட்டு, பொழுதுபோக்கு போன்ற உடலுழைப்புச் சம்பந்தப்பட்ட செயல்களில் ஈடுபட ஆர்வமின்றி இருத்தல்.

★ விரல் சூப்புவது, உறக்கத்தில் சிறுநீர் கழித்தல், பேச்சுத்திறன் குறைபாடு போன்ற வயதுக்குப் பொருத்தமற்ற, சிறுகுழந்தையைப் போன்ற செயல்களைச் செய்தல்.

★ எப்போதும் அடுத்தவரைச் சார்ந்திருக்கும் தன்மை.

★ திடீரென நிறைய பணமும், பரிசுகளும் சேர்வது.

★ உடல் ரீதியான காரணம் ஏதுமின்றி தலைவலி, வயிற்றுவலி அல்லது வாந்தி பற்றி முறையிடுதல்.

★ உடல் சோர்வு அல்லது உறங்குவதில் சிரமம்.

★ தன்னைப் பேணிக்கொள்வதிலும், உடல் நலத்தை கவனிப்பதிலும் ஆர்வமின்மை.

★ மனச்சோர்வுக்கு ஆளாகுதல்.

★ திடீரென பயம், இனம் தெரியாத வெறுப்பு, மன உளைச்சல் போன்றவற்றிற்கு ஆளாகுதல். (கொடுமைப்படுத்தப்பட்ட இடம் குறித்த பயம், குறிப்பிட்ட நபரைக் கண்டால் பயப்படுவது).




## சொற்சிலம்பம் - போட்டி இல: 455

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | 5 | 6 | 7 |
| 8 | | | 9 | | | | |
| | | | 10 | | | | |
| 11 | | 12 | | | 13 | | 14 |
| 15 | | | | 16 | | | |
| 17 | | | 18 | | | | |
| | | 19 | | | | 20 | |
| | 21 | | | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 455

*சொற்சிலம்பம் 455 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2011 ஆண்டு பெப்ரவரி 12 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஆகியன பெப்ரவரி 20ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.*

*முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

*சொற்சிலம்பம் போட்டி இல.453 க்கான விடைகளும் பரிசு பெற்றோர் விபரங்களும் அடுத்தவார சுடர் ஒளியில் பிரசுரிக்கப்படும்.*

*கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரிகள்:*
**சுடர் ஒளி,**
**85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,**
**கொழும்பு-14.**


**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### இடமிருந்து வலம்

1. புறாவுக்காகத் தனது சதையை அறுத்துக் கொடுத்த சக்கரவர்த்தி.
2. காம நோய்.
3. சிறைப்பிடிக்கப்பட்டவன்.
4. தேசிய விளையாட்டுகளில் ஒன்று.
5. தோழன்.
6. கைகூப்பு.
7. ஏவுகணை ரகம்.
9. நீண்டகால அளவீடு.
11. ஒன்றை வரவேற்று உதவுவது.
12. மன்மதன் மனம் கவர்ந்தவள்.
13. ஒன்றை வழிப்படுத்தும் பொறுப்பு.
14. மூன்று முனை கொண்ட வேல்.
16. தலையில் எழுதப்பட்டது.
18. மறக்காமல் ஞாபகம் கொள்.
19. நிலா/ அறிவு.
20. சைவர்கள் வாயில் அடிக்கடி ஒலிப்பது.

### மேலிருந்து கீழ்

1. தண்டிகை.
4. ஒரு சரக்கு; சர்பத்துக்குப் போடுவார்கள்.
8. பதில் உதவி.
10. வாயினால் கவ்வு.
11. சான்று.
13. தலைமை பற்றிய நிலைமை.
15. மரவேலைத் தொழிலாளி.
16. நீதி கேட்டு கண்ணகி வந்தது இக்கோலத்தில். தன் சபதம் நிறைவேறும்வரை திரௌபதி தோற்ற மளித் ததும் இக் கோலத்தில்தான்.
17. மேல் நாட்டுக் குடிவகை ஒன்று.
18. நிலைவரம் பற்றிய தன்மை.
19. இல்லாள்.
20. பல அல்ல.
21. அரைவாசி.
22. சடப் பொருள்களின் மூன்று நிலைகளில் ஒன்று.




**கே.ஆரூரன்**
**வவுனியா.**

**கேள்வி:** பித்தரே, காதலைப் பெற்றோர் அனுமதிக்காவிட்டால் பெற்றோரை எதிர்த்துத் திருமணம் செய்வது சரியா? தவறா?

**பதில் :** பெற்றோரை எதிர்த்துத் திருமணம் செய்யும் போது உனக்கு நீ, எனக்கு நான் என்று தனித்துப் போகிறோம். தனிமையும் எத்தனை நாளைக்குத் தான் இனிக்கும்? அது கசக்கும் போதுதான் காதல் வாழ்க்கையும் வேப்பங்காயாக மாறுகிறது. அதைவிட நல்லது பெற்றோருக்கு எடுத்துச் சொல்லி, காத்திருந்து அவர்கள் சம்மதம் பெற்று திருமணம் செய்வதுதான்.

**சி.பா.செல்வரஞ்சன்**
**மட்டக்களப்பு.**

**கேள்வி:** பள்ளிக் காதல் நிறைவேறுமா பித்தரே

**பதில்:** பார்த்தீரா, உமக்கே உள்ளுக்குள் சந்தேகம் துளிர்விடுகிறது. பள்ளிக்காலம் வாழ்வில் ஒரு முறைதான் வரும். அதில் ஏற்படும் பசுமை நினைவுகள் வாழ்நாள் முழுவதும் தொடரும். அதை ஒழுங்காக முறைப்படி கவனிப்பதை விட்டு விட்டு காதல், கீதல் என்று ஏன் அலைகிறீர்கள். ஒழுங்காக படிக்கிற வேலையைப் பாரும்.

**ஐ.ஜெயந்தி**
**புதுக்குடியிருப்பு.**

**கேள்வி:** பித்தரே! காதல், காமம், இந்த இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

**பதில்:** இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை. பொதுவாக காமத்தைப் பிரிக்க நினைத்தால் காதல் செத்துவிடும் என்கிறார்கள். உண்மைக்காதல் என்பது இருமனங்களின் பிரிக்கமுடியாத இணைவு.

**அ.ராமதாஸ்**
**ஹட்டன்.**

**கேள்வி:** டியர் பித்தா, உமது வீட்டில் உமக்கும் மனைவிக்கும் இடையில் நடைபெறும் சண்டையை ஒரு தரம் நேரில் பார்க்க விரும்புகிறேன்.

**பதில்:** வீட்டில் எனக்கும் மனைவிக்கும் சண்டை ஆரம்பிக்கும்போது உமக்குத் தகவல் தருகிறேன். வந்து பாதுகாப்பாக ஒளித்திருந்து பார்த்து ரசியும். வேறென்ன, சண்டை ஆரம்பித்ததும் சட்டி பற பற... பீங்கான் கோப்பை பற... பற, சட்டி முட்டியெல்லாம் பற... பற... தான். தப்பித்துக் கொள்ள நான் படும் பாட்டைக் கண்டு உமக்கே என்போல் அனுதாபம் பிறக்கும்....

**வி.அன்பழகர்**
**பதுளை.**

**கேள்வி:** கவலையை மறக்கத் தான் குடிக்கிறோம் என்கிறார்கள் சிலர். ஆனால் குடிப் பழக்கத்தைக் கைவிட என்ன வழி சொல்கிறீர் பித்தரே.

**பதில்:** கவலையை மறக்கக் குடிக்கிறேன் என்பது வெறும் பம்மாத்துப் பேச்சு. குடிப்பதால் ஒருபோதும் கவலைகளை மறக்க இயலாது. குடிப்பதால் செலவு அதிகமாகி, வீண் சச்சரவுக்கு வழி வகுக்கும். குடும்பத்தில் நிம்மதி குலைவதால் கவலைகள் மேலும் மேலும் பெருகுமே தவிர குறையாது.

குடியை மறக்க தியானம், யோகா என்பவை குறிப்பிடப்படுகின்றன. ஆனால் எல்லோராலும் அது இயலாது. எனவே மனதைக் கட்டுப்படுத்தி வேறு பொழுது போக்குகளில் ஈடுபட்டால் குடியை மறக்கலாம்.

**யோ.அஜந்தன்**
**கொழும்பு.**

**கேள்வி:** பித்தரே, உமது மனைவி உம்மைக் கொடுமைப்படுத்துவதாக அடிக்கடி புலம்புகிறீர். பேசாமல் எங்காவது கடற்கரைப் பக்கமாக வீடெடுத்து இரும். இன்னொரு சுனாமி வந்தால் மனைவியைக் கடலில் பிடித்துத் தள்ளிவிடலாம்.

**பதில்:** தம்பி, அவள் சரியான 'அலேர்ட்' பேர்வழி. சுனாமி வந்தால் என்னைத் தள்ளி விட்டு விட்டுத் தான் தப்பிக் கொள்வாள்.

**வி.வைகுந்தவாசன்**
**கோட்டைக் கல்லாறு.**


**கேள்வி:** பித்தா, பத்திரிகைகளில் ஆக்கங்களை எழுதுவோரில் பலர் தமது சொந்தப் பெயரைப் பயன்படுத்துவதில்லையே. அதற்குக் காரணம் என்ன?

**பதில்:** சிலவேளை வெட்கமாக இருக்கலாம். அல்லது புனை பெயரில் விருப்பமாக இருக்கலாம். நான் நினைக்கிறேன் இந்தக் காலத்திலெல்லாம் எதற்காக சொந்தப் பெயரில் எழுதிச் சிக்கலை விலைக்கு வாங்கிக் கொள்ளவேண்டும் என்ற அச்சம், முன்னெச்சரிக்கை உணர்வே காரணமாக இருக்கலாம்.

**எஸ்.கோபிகா**
**மட்டக்களப்பு.**

**கேள்வி:** பித்தா! கற்பனையே வாழ்க்கை என்று வாழ்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

**பதில்:** வாழ்க்கைக்குக் கற்பனை வேண்டியது தான். ஆனால் கற்பனையே வாழ்க்கையாகிவிடக்கூடாது. எதிர் காலத்திலே நான் அப்படி வர வேண்டும். இப்படி வாழ வேண்டும் என்ற கற்பனைகள் வளமான வாழ்வுக்கு வழி அமைக்கும். அதாவது ஒருவன் நான் ரஜனி போல், விஜய் போல், பில்கேட்ஸ் போல், சச்சின் டெண்டுல்கர் போல் வரவேண்டும் என்று ஆசைப்படுவது எதிர்காலத்துக்கு ஆரோக்கியம். ஆனால் அவர்கள் தான் நான் என்று கற்பனை செய்தபடி வாழ்ந்தால் அது அழிவிலே தான் கொண்டுபோய் விடும்.





**GERMAN (DEUTSCH), SWISS**

**மொழி வகுப்புக்கள்**

இலங்கையின் முதல்தர ஆசிரியர் நரேஸ்

★ புதிய வகுப்பு
★ GERMAN, SWISS மொழி பெயர்ப்பும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
0777661863, 0774709929

# எரியும் பாலைவனம்

பாலைவன நாகரீகம் எனப்படும் எகிப்து, புரட்சியால் எரிந்து கொண்டிருக்கிறது. வட ஆபிரிக்காவில் ஏற்பட்டு வரும் இவ் அரசியல் கொதிநிலை தற்போது எகிப்தில் மையம் கொண்டுள்ளது. தென்சூடான், டுனிசியா, எகிப்து என மக்கள் அடக்குமுறைக்கு எதிரான போராட்டங்களை வலிந்து முன்னெடுக்கின்றனர்.

எகிப்தில் உள்ள பண்டைய நகர் அலெக்ஸான்ரியா. இவ்வருட தொடக்கத்தில் அந்நகரில் அமைந்துள்ள கோப்டிக் தேவாலயத்தில் இடம்பெற்ற பிரார்த்தனையின் போது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் 25 பேர் கொல்லப்பட்டதுடன் 97 பேர் வரை காயப்பட்டிருந்தனர். கோப்டிக் கிறிஸ்மஸ்க்கு முன்னதாகவே அப்பகுதியில் பாதுகாப்பு நிலை பலப்படுத்தப்பட்டிருந்த போதும் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து தொலைக்காட்சியில் தோன்றிய எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் 'சர்வதேச பயங்கரவாதம் தான்' என குற்றம் சாட்டினார். இதே பாணியில் பல உள்நாட்டு அரசியல் பிரமுகர்களும் தாது கருத்துக்களை தெரிவித்திருந்தனர். மொத்த மக்கள் தொகையில் 10% இருக்கும் கோப்டுக்கள் பெரும் பொருளாதார சமூக மத ரீதியிலான ஒடுக்குமுறைகளை இவ் அரசினால் நீண்ட காலமாக அனுபவிக்கின்றனர். இவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலானது அரசுக்கெதிராக மக்களை கிளர்ந்தெழச் செய்தது. தேவாலயத்தில் இருந்து வெளியேறியவர்கள் அரசுக்கெதிரான கோஷங்களை எழுப்பினர். அதிகாரிகள் தெரிவிக்கும் இரங்கல் செய்தியை ஏற்க மறுத்தனர். பொலிஸாரை எள்ளி நகையாடியதுடன் அவர்கள் மீது கற்களை வீசினர் பொலிஸார் அதை அடக்கும் விதத்தில் கண்ணீர் புகைக்குண்டுகளையும் ரப்பர் தோட்டாக்களையும் பாவித்தனர்.

நாட்டில் நடக்கும் களேபரங்களை ஏப்ரல் 2006 இளைஞர் இயக்கம் Face book, twitter இணையதளம் போன்றவற்றை பயன்படுத்திப் பரவலாக்கியது. 2008 இல் எகிப்தில் ஒரு தொழில் நகரத்தில் உரிமை கேட்டுப் போராடிய தொழிலாளர்களுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் Face book இல் இளைஞர் ஆரம்பித்துள்ள இயக்கம் இது. கோப்டிக் தேவாலய சம்பவத்தை அரசுக்கெதிரான போராட்டமாக மாற்றி பரவலாக்கியது இவர்கள் எந்தக் கட்சியும் சார்ந்தவர்கள் அல்ல. பிற கட்சிகள் இவர்களின் எழுச்சியில் தங்களை முன்னிறுத்திக் கொள்ளப் பார்க்கின்றன என்பது தான் உண்மை.

இந்த இளைஞர்களுக்கு இன்னும் வீரியத்தை அளித்தது, எல்பரேடியின் வரவு தான். 1997 முதல் 2009 வரை ஐ.நாவின் சர்வதேச அணுசக்தி ஏஜென்சியின் இயக்குனராகப் பணியாற்றிய இவர், 2005 இல் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார். உலக நாடுகள் அணுசக்தியை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும் என்பதற்காக பாடுபட்டதற்காக 2008 இல் இந்தியா இவருக்கு இந்திராகாந்தி அமைதிப் பரிசை வழங்கியது. 2010, பெப்ரவரி, 24 இல் எகிப்தில் ஜனநாயக ரீதியிலான மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பதற்காக 'மாற்றத்திற்கான தேசியக் கூட்டமைப்பு' என்ற இயக்கத்தை துவக்கினார். நடைபெற்றுக் கொண்டிருக்கும் மக்கள் எழுச்சியை தொடர்ந்து நாடு திரும்பி போராட்டங்களில் பங்கெடுத்து வருகிறார். இவர்களோடு இணைந்து முஸ்லிம் சகோதரத்துவக் கட்சியும் போராடி வருகின்றது.

இவர்கள் அனைவரும் இணைந்து எகிப்தில் மக்களாட்சி வேண்டும் என்பதையே கோரி நிற்கின்றனர். கடந்த 30 ஆண்டுகளாக சர்வாதிகாரம் கொண்டு மக்களின் பேச்சுரிமையையும், சுதந்திரத்தையும், அடக்கிவரும் ஹொஸ்னி முபாரக் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை வலுத்திருக்கிறது.

லட்சக்கணக்கான மக்கள் தலைநகர் கெய்ரோ தொடக்கம் அலெக்ஸாந்திரியா எனப் பல நகரங்களிலும் கிளர்ந்திருக்கின்றனர். விலைவாசி உயர்வு, உணவுத் தட்டுப்பாடு, பரவலாக காணப்படும் ஊழல், அரசு வேவுத்துறையின் அட்டகாசம், வேலையில்லாத்திண்டாட்டம் எனப் பல பிரச்சினைகளை தாங்காத மக்கள் தொகையை எவ்வளவு காலத்துக்குத் தான் அடக்கி வைக்க முடியும்.

இந்த மக்கள் எழுச்சிக்கு அடிப்படையாக அமைந்ததே விக்கிலீக்ஸ் வெளியிட்ட எகிப்திய ரகசிய ஊழல் ஆவணங்கள் தான். அதனைத் தொடர்ந்து அல்ஜசீரா தொலைக்காட்சியின் சேவை போன்றன புரட்சிக்கு ஆதரவளித்தன. மக்களை அரசுக்கெதிராக திருப்புவதிலும் பரவலாக்குவதிலும் ஊடகங்கள் முக்கிய பங்காற்றியதால், முபாரக் உடனடியாக இணையத்தள சேவைகளை தடை செய்தார். வெளியுலகுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அரபு தேசத்தின் ஒரேயொரு சர்வதேசமயமாக்கப்பட்ட ஊடகமான அல்ஜெசீரா அரசுடமையாக்கப்பட்டு நிறுத்தப்பட்டது. அதில் பணிபுரிந்த 05 ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

30 வருடங்கள் ஆட்சியிலிருந்துவிட்டபோதிலும் ஆசையடங்காத முபாரக் தன் ஆட்சியை கைவிட மனமில்லாதவராக காணப்படுகிறார். மக்கள் போராட்டம் வலுப்பெற்ற நிலையில் அமைச்சரவையை கலைத்த முபாரக், தனக்கு நெருக்கமான முன்னாள் இராணுவ அமைச்சர் ஷபீக்கை பிரதமராகவும், உளவுத்துறை தலைவர் உமர் சுலைமானை துணைத்தலைவராகவும் நியமித்தார். இதனையும் ஏற்றுக் கொள்ளாத மக்கள் கிளர்ந்தனர். அமெரிக்காவில் கூட எகிப்துக்கு ஆதரவாக பேரணி நடத்தினர். ஆனால் முபாரக் செப்டம்பர் வரை தனது ஆட்சிக்காலம் இருக்குமெனவும் அதன் பிறகே பதவி விலகுவேன் எனவும் தெரிவித்திருக்கிறார்.

இதுவரைக்கும் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் 300 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருக்கின்றனர். 1500 க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். 5000 வரையிலான சிறைக் கைதிகள் தப்பியோடியிருக்கின்றனர். எகிப்தின் முக்கிய பொருளாதார வளங்களான எண்ணெய் வர்த்தகமும், சுற்றுலாத் துறையும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. பிரான்ஸ், சுவீடன், இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா எனப் பல நாடுகள் எகிப்திற்கான பயணங்களை தடை செய்துள்ளன. பங்குச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது. நாடு பூராகவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள இப் போராட்டம் மக்களது இயல்பு வாழ்க்கையை முற்றாக ஸ்தம்பிதமடையச் செய்துள்ளது.

எந்த அரசுக்கும் எதிரான போராட்டங்களில் அரச இயந்திரங்களான இராணுவம் அரசின் பக்கமே நிற்கும். ஆனால் எகிப்தில் அதிசயம் நடந்தது. இராணுவம் புரட்சிக்கு ஆதரவு வழங்கியது. எகிப்து மக்களின் சட்டபூர்வ போராட்டத்துக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்குவதாக இராணுவத் தரப்பு கூறிவருகின்றது.

அமெரிக்கா இந்த நிலவரத்தைக் கையாண்டதில் வெற்றி பெற்றுள்ளது எனலாம். கடந்த யூன் மாதம் கெய்ரோ பல்கலைக்கழகத்தில் ஒபாமா உரையாற்றும்பொழுது, 'உலகில் எந்த பகுதியில் வாழ்ந்தாலும் மக்கள் சுதந்திரமாக தங்கள் கருத்தை வெளிப்படுத்தும் உரிமையை, தாங்கள் யாரால் எப்படி ஆட்சி செய்யப்பட வேண்டும் என்கிற உரிமையையும் விரும்புகிறார்கள்' என்றார். தற்போது இக்கருத்தினை வெளிப்படுத்தும் முகமாக புரட்சி நடைபெற்று வருகின்றது. அமெரிக்காவுக்குத் தேவை தனது கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஓர் அரசே. ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் நவி நீதம்பிள்ளையின் ஆதரவு அறிக்கையும் வெளியாகியுள்ளது.

எகிப்தைப் போன்று மக்கள் மீது அடக்குமுறைகளை மேற்கொள்ளும் அரசுகள் புரட்சியலை தம்மீதும் வீசிவிடும் என்ற பயத்தால் அதற்கான தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இந்தியாவில் தேர்தல் காலம் நெருங்கிவருவதால் ஆதரவாக இருப்பதாக கூறப்படுகிறது. இலங்கையில் அரச ஊடகங்கள் எகிப்திய செய்திகளை தணிக்கை செய்து வருகின்றது. சீனாவில் இணையத்தளம் Face book, twitter போன்றன இடைநிறுத்தப்பட்டுள்ளன. லிபியா, ஜோர்தான் ஆகிய நாடுகளில் சிறுசிறு மக்கள் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

இறுதியில் டுனீசிய அதிபருக்கு நடந்தநிலைதான் முபாரக்கிற்கும் நடக்கப் போவதற்கான அறிகுறிகள் தெரிகிறது. ஆபிரிக்க கண்டம் புரட்சி அலைகளால் மிக வேகமாக தாக்கப்பட்டு வருகிறது. அது எல்லை கடந்து ஒடுக்கப்படும் எல்லாத் தேசங்களிலும் வீசுமா? எகிப்தின் வெற்றிதான் பதில் கூறும். ★★★

அட்சயன்





# இலங்கையர்களுக்கான சவால்!

போர் முடிந்து சனங்கள் சற்று நிம்மதியாக இருக்க முயன்றால், இயற்கை அதைக் குழப்புகின்றது. அண்மையில் இலங்கையில் பெய்த பெருமழையின் காரணமாக பெரும் பாதிப்பை மக்கள் சந்தித்துள்ளனர். அதிலும் வடக்கு, கிழக்கு மக்களே அதிக பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இதிலும் கிழக்கில் ஏற்பட்ட பாதிப்பு மிக உச்சமானது.

வெள்ளத்தினால் ஏற்படும் பாதிப்பில் முக்கிய ஒரு விடயம் கவனிக்கப்பட வேண்டியுள்ளது. அது முக்கியமானதும் கூட.

வெள்ளம் இயற்கையோடு தொடர்புடைய ஒன்றாயினும், இயற்கை அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தவும் தவிர்க்கவும் கூடிய ஒரு பொறிமுறையும் நல்ல முறையும் நம்மிடம் இருந்தால் , இந்த அனர்த்தத்தைக் கட்டுப்படுத்தலாம், அல்லது தவிர்க்கலாம்.

இதற்கு அபிவிருத்தி நடவடிக்கையில் பின்பற்றப்பட வேண்டிய ஒன்று திட்டமிடலாகும்.

முறையான திட்டமிடல் இருக்குமானால், சரியான ஒழுங்கமைப்பில் நகர- கிராம நிர்மாணம் அமையும். அப்படி அமையும் போது இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்க முடியும்.

உலகில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படாத இடங்களும் இல்லை. காலமும் இல்லை. எரிமலை வெடிப்பது, வெள்ளப்பெருக்கு ஏற்படுவது, சுனாமி ஏற்படுவது, புயல் - சூறாவளி போன்றவை தாக்குவது என இயற்கை அனர்த்தங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. பனிவீழ்ச்சி, தீ பரவுவது என்று கூட இயற்கை அனர்த்தங்கள் நிகழ்கின்றன.

ஆனால், இந்த இயற்கை அனர்த்தங்களில் இருந்து எவ்வாறு மக்களைப் பாதுகாப்பது? எப்படி சொத்துகளையும் சூழலையும் அழிவுகளில் இருந்து காப்பாற்றுவது என்பதே மனிதர்களின் சிந்தனைக்குரிய பொறுப்புமிக்க முக்கிய விடயமாகும்.

இயற்கை அனர்த்தம் எப்பது மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. எனினும் மனித அறிவானது இந்த அனர்த்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் அனர்த்தம் நிகழ்வதைப் பற்றி முன்கூட்டியே அறிந்து மக்களை எச்சரிக்கை செய்வதற்கும் உதவுகிறது.

இவ்வகையில் பல முன்னேற்பாடுகளை வளர்ச்சியடைந்த நாடுகள் கடைப்பிடிக்கின்றன. சமிக்ஞைகளின் மூலமும் ஊடகங்களின் வாயிலாகவும் மக்களுக்கு அறிவூட்டி இயற்கை அனர்த்தப் பாதுகாப்பிலிருந்து காப்பாற்றுவது ஒரு வகை. இயற்கை அனர்த்தம் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு நகர - கிராம குடியிருப்பு அமைப்புகளை திட்டமிட்டு உருவாக்குவது இன்னொரு வகை.

இலங்கையில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்களில் முக்கியமானது வெள்ளப் பெருக்காகும் சிலவேளை புயல்- சூறாவளித் தாக்கமும் நிகழும் ஒரேயொரு தடவை சுனாமி தாக்கியுள்ளது. ஆகவே வெள்ளத்தினால் ஏற்படும் இயற்கை அனர்த்தமே இலங்கையர்களை அதிகம் பாதிக்கிறது. கடந்த மாத முற்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பு குறித்து நாம் அறிவோம்.

இதற்குப் பிரதான காரணம் சீரான, முறையான வடிகாலமைப்பு இல்லாமையாகும். கடந்த ஆண்டு கொழும்பில் வெள்ளப்பெருக்கின்போது நாடாளுமன்றத்திலுள்ளேயே வெள்ளம் புகுந்தது. அந்த அளவுக்கு தலைநகரத்தின் வடிகாலமைப்பு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதொன்றாக இல்லை என்பதையே இது காட்டுகிறது.

2008 ஆம் ஆண்டு நிஸா புயல் வீசியபோது யாழ்ப்பாணத்தில் ஏற்

**ஜோசப் தயாளன்**

பட்ட வெள்ளப் பாதிப்பும், 2010 டிசெம்பர் 2011 ஜனவரி மாதங்களில் கிழக்கில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் ஏற்படுத்திய வெள்ளப் பாதிப்பும் வடக்கு, கிழக்கின் சீரற்ற வடிகாலமைப்பு முறைகட்கு உதாரணங்களாகும். இவை காரணமாக கடந்த 30 ஆண்டுகளாக வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் நகர- கிராம அபிவிருத்தி நடவடிக்கைகள் ஒழுக்கு முறைக்குட்படுத்தப் படாததால் வீதிகள், குடியிருப்புகள், பொது இடங்கள் எனச் சகல பகுதிகளும் சீரற்ற அமைப்பிலேயே காணப்படுகின்றன.

இதேவேளை சிறுகுளங்கள் மற்றும் அவற்றின் வாய்க்கால்கள், மதகுகள் போன்றவை பல ஆண்டுகளாகச் சீர்ப்படுத்தப்படவில்லை. சில இடங்களில் தொண்டர் அமைப்புக்களின் நிதி உதவியில் குளம் சீரமைத்தல், வாய்க்கால்கள் புனரமைத்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்டாலும் அவை முழுமைப்படுத்தப்பட்டதாக இல்லை.

வாய்க்கால்கள், வடிகாலமைப்பு, புவியமைப்பு, வீதிகள், குடியிருப்புகள் என்ற பொது அவசிய அமைப்பு முறைகளைப் புறந்தள்ளிவிட்டு, போரின் தேவைக்காக அமைக்கப்பட்ட மண் அணைகளும் பாரிய அகழிகளும் இவ்விடயத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் காரணமாகின்றன.

ஊர் அல்லது நகரம் என்பது பல உட்கூறுகளையும் அமைப்புக்களையும் கொண்ட அமைவிடமாகும். வீடுகள், தெருக்கள், வடிகாலமைப்புகள், மரங்கள், பாடசாலைகள், பொது மைதானங்கள், நீர்நிலைகள், நீரோடிகள், வாய்க்கால்கள் - ஆலயங்கள், கடைத்தொகுதிகள் சந்தை, மருத்துவமனை, போக்குவரத்துத் தொடர்பாடல் மையங்கள் எனப் பலவற்றைக் கொண்டதே ஊர் அல்லது கிராமம் அல்லது நகரம் ஆகும்.

இதேவேளை காடு அல்லது வயல் வெளி அல்லது கடற்கரை என்றாலும் கூட அவற்றில் இயற்கையாகவோ அல்லது மனிதர்களால் அமைக்கப்பட்டோ ஒருபொது அமைப்பு முறை பொருத்தமாக இருக்கும்.

வயல்வெளிப் பிரதேசமாயின் வாய்க்கால்களும் வடிகாலமைப்பு முறைகளும் நிச்சயம் இருக்கும். இதுபோல காட்டிலும் மழைநீர் வடிந்தோடக்கூடியவாறு காட்டாறுகள் நிச்சயமாக இருக்கும். ஆனால் போரின் தேவைக்காக இந்த இடங்களில் கூட ஏகப்பட்ட மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது பொது அமைப்பைக் குலைத்துள்ளது. இதனால் இயற்கை அனர்த்தங்கள் நிகழும் போது பெரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

குறிப்பாக வன்னியில் மழைநீர் வடிந்து செல்லக் கூடிய இடங்களில் போருக்கான மண் அணைகள் காரணமாக பல இடங்களில் வெள்ளம் தேங்கியுள்ளது. ஏ9 வீதி அதிகமாகச் சேதமடைந்தமைக்கான காரணமும் இதுவே.

பல உள் வீதிகளும் அறுத்தோடிகளால் பாழடைந்துள்ளன. அத்துடன் இந்த வீதிகள் மிக மோசமான பாதிப்பையும் சந்தித்துள்ளன.

இவ்வாறே பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியிருந்தன. பல ஆயிரக் கணக்கானவர்கள் வெள்ளப்பாதிப்புக்குள்ளாகியிருந்தனர்.

போர்ப்பாதிப்பு நீங்க முன்னரே வெள்ளப்பாதிப்பு என்ற நிலை மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கியது.


இதெல்லாம் முறையான நிர்மாண அமைப்பு இல்லாததன் விளைவுகளே இப்போது நாடு அபிவிருத்தியை நோக்கிய பயணத்தில் இறங்கியுள்ளது என்று அரசாங்கம் கூறுகிறது. இதைச் சில புத்திஜீவிகளும் துறைசார்ந்தவர்களும் ஏற்றுள்ளனர். அவ்வாறானால், அந்த அபிவிருத்தியில் நிர்மாண அமைப்பு முறைகளில் எந்த அம்சங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன? என்றே கேள்வி எழுகிறது.

ஏனெனில், கடந்த காலங்களில் மக்கள் தமக்கேற்ற தம்மால் சாத்தியப்பட்ட அளவுக்கு நிர்மாண அமைப்பு முறைகளை ஏற்படுத்தி வைத்திருந்தனர். குறைந்த பட்சம் அந்த அளவுக்காவது இப்போது மேற்கொள்ளப்படும் நிர்மாண அமைப்பு முறை பொது அமைப்பு முறைக்குட் படுமாயின் அதுவே போதும்.

இல்லையெனில் மழைக்கும் காற்றுக்கும் வெள்ளத்துக்கும் வெய்யிலுக்கும் அஞ்சி வாழும் ஆதிவாசிகளைப் போல நாமும் பாதிப்புக்களையே சந்திக்க வேண்டிவரும்.

அறிவார்ந்த சமூகங்கள் எப்போதும் எத்தகைய பாதிப்புக்களில் இருந்தும் தம்மைக் காத்துக் கொள்ளும். அதற்கமைவான பொறிமுறையை அவை கண்டுணர்ந்து தம்முள் வைத்துக் கொள்ளும். இலங்கைஇவ்விடயத்தில் எத்தகைய நிலையில் உள்ளது என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொண்டால் சரி.

★ ★ ★



# முற்றுப்புள்ளியைத் தேடி...

சிறுகதை



"என்னடா
பிரமைபிடிச்ச மாதிரி
இருக்கிறாய்? என்ன...
உனக்குச் சொல்லாமல்
ஊருக்குப் போட்டு
வந்திட்டன் எண்டு
கோவமோ? நீ தான்
பிள்ளையளைக் கூட்டிக்
கொண்டு
போனனியெல்லோ?
பிறகென்ன, நான்
போட்டு வந்திட்டன். நீ
போனாலென்ன நான்
போனாலென்ன.
எல்லாம் ஒண்டுதான்".

"அண்ணை அழகண்ணை நாளைக்கு ஊருக்குப் போக விடுகினமாம் அறியிளே?" ஒருபேச்சும் இல்லை. வெறித்த பார்வை. 'உந்தச் செல்லடியளுக்கை நல்லாத்தான் காது கெட்டுப்போச்சுப் போல, அழகண்ணை; உங்களைத்தான்'. என்றேன் மீண்டும்.

"என்னடா சௌந்து, எனக்கு நீ முதலிலை சொன்னதே நல்லாக் கேட்டது. நீ நாளைக்குத்தானே போகப் போறாய்? நான் இப்பதான் அங்கை நிண்டு வந்து இதிலை தலையைச் சரிச்சு அயர்ந்து போனன். ஆரோ கூப்பிடுற மாதிரிக் கிடக்கத்தான் எழும்பினனான்.

இதற்கு மேல் என்னால் பேச முடியவில்லை. இன்னமும் புதுக்குடியிருப்புப் பக்கம் மீள்க் குடியேற ஒருத்தரையும் விட இல்லை. எங்களை வீடு புதுக்குடியிருப்பிலை. வள்ளிபுனத்திலை பத்தேக்கர் காணி. பொன் விளையும் பூமி. தென்னை, தேசி, தோடை, மாமுந்திரி இப்படி நீண்ட காலப்பயன் தரும் மரங்கள். அந்த வருமானத்திலை தான் இரண்டு பேரும் புதுக்குடியிருப்பிலை இரண்டாயிரத்துக்குப் பிறகு பெரிய கல்வீடு கட்டினனாங்கள்.

அழகண்ணை வீடு முண்டுவிச்சிலை அப்பவே தகர்ந்து போயிச்சு. அதுக்குள்ளை மனைவியையும் மூத்த மகள் மலரையும் பறிகொடுத்து விட்டுத்தான் எஞ்சிய பிள்ளைகளோடு வந்தவர். அந்த நேரம் பார்த்து நானும் காயமடைந்ததால் அவருக்கு ஆறுதலாக இருக்கமுடியவில்லை. ஏதோ காலத்தின் ஓட்டம் அவர்களையும் கரை சேர்த்தது.

முகாமில் மீண்டும் நான் சந்தித்த போது அழகண்ணை மிகவும் தெளிவாகத்தானிருந்தார். நான் எனது மகனின் உயர்கல்வியைக் காரணம் காட்டி கொழும்புக்குச் சென்று சில மாதங்கள் தங்கி விட்டேன். மகளின் திருமணத்திற்காக இந்தியா சென்று சில வாரங்கள் அங்கே. இப்பொழுதுதான் மீண்டும் யாழ்ப்பாணம் வந்தேன். எனக்குத்தெரிந்த நண்பர் ஒருவரின் பழக்கத்தால் அழகண்ணைக்கு ஒரு வீடு எடுத்துக்குடுத்தனான். அவர்களுடைய செலவுக்காக அவர் மனைவியின் தம்பி வெளிநாட்டிலிருந்து உதவுகிறார். இவருக் காக இல்லாவிட்டாலும் தனது பெற் றோருக்காக.

நான் போன கிழமைதான் இங்கை வந்தனான். அழகண்ணையைப் பாக்கப் போனபோது அவர் மாமி 'தம்பி சௌந்து, இப்பெல்லாம் மருமேன் நல்ல நிலையிலை இல்லையடா மோனை. வெறிச்சப் பார்க்கிறது. ஏதாவது தன்ரை பாட்டிலை பேசுறது. வேலைவெட்டியும் இல்லைத்தானே. அங்கை ஒருநேரம் சும்மா இராத மனிசன். பிள்ளையளிலை கூட அக்கறையில்லை. நினைச்ச நேரம் போறது, நினைச்ச நேரம் வாறது. பயமாக் கிடக்கடா மோனை. இப்ப உன்னைக் கண்டது ஒரு ஆறுதல். அந்தப் பிள்ளையார் கோயில் மடம் தான் தஞ்சம்' என்றார். எனக்கு நிலைமை ஓரளவு விளங்கியது.

"எடேய் சௌந்து" அழகண்ணையின் குரல் கேட்டு ஏதோ புது உலகிற் பிரவேசித்தது போலத் திடுக்கிட்டேன். "ஆ.... என்ன...? கூப்பிட்டனீங்களே?"

"என்னடா பிரமைபிடிச்ச மாதிரி இருக்கிறாய்? என்ன.... உனக்குச் சொல்லாமல் ஊருக்குப் போட்டு வந்திட்டன் எண்டு கோவமோ? நீ தான் பிள்ளையளைக் கூட்டிக் கொண்டு போனனியெல்லோ? பிறகென்ன, நான் போட்டு வந்திட்டன். நீ போனாலென்ன நான் போனாலென்ன. எல்லாம் ஒண்டுதான்".

"ஓ....ஓ" என்று ஒப்புக்குத் தலையாட்டினேன்.

'ஊர் எப்பிடியிருக்கெண்டு கேக்க மாட்டியே?'

'வள்ளிபுனம்காணி எப்படியிருக் கெண்டு தெரியுமே?'

'மகேசுவையும் ரதியையும்மெல்லே பார்த்தனான்'

"........... இப்படி அடுக்கிக் கொண்டே போனார்.

அழகண்ணை புதுக்குடியிருப்பு வாசி. நான் யாழ்ப்பாணத்திலிருந்து சென்றவன். குடும்பத்தில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக திசைதெரியாமல் போனவன்தான் நான். எதிர்பாராமல்தான் அவருடன் பழக்கம் ஏற்பட்டது. அவரின் உறவினரின் கடையொன்றில் வேலைக்குச் சேர்ந்த நான் அப்பகுதிகளிலிருந்து தேங்காய், நெல், கச்சான், செத்தல், கருவாடு இப்படியான பொருட்களை மொத்தமாக வாங்கி யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வந்து விற்பதைத் தொழிலாகக் கொண்டேன். வீட்டிலிருந்து பெரிய முதலோடு செல்லவில்லை. அழகண்ணையின்ரை வாக்கை நம்பித்தான் பொருட்களைக் கடனாகத் தந்தார்கள். நானும் அவரின் கௌரவத்தைக் காப்பாற்றும் விதத்தில் நடந்து கொண்டேன்.

இந்த நேரம் தான் என் மனதைக் கவர்ந்த ஒரு பெண்ணைப்பற்றி அவரிடம்கூறியபோது 'ஊர் பேர் தெரியாதவன்' என்று எவரும் சொல்ல இடம் வைக்காது தனது காணியிலேயே

**பூ.ஜெயமலர்**

அரை ஏக்கர் காணியை எனக்கு எழுதித் தந்து, அழகான ஒரு மண்வீடும் கட்டித்தந்து, ஆசைப்பட்ட பெண்ணையும் கட்டிவைத்த பெரிய மனிதர். அதன் பின் நானும் அவ்வூர் வாசியாகி விட்டேன்.

எனது மகன் மகேசு பிறந்து இரண்டு ஆண்டுகளின் பின்னர் தான் அவரது மகள் ரதி பிறந்தாள். அப்போது "சௌந்து' எங்களை இந்த நட்பு எப்பவும் உறவாக இருக்க வேணும். என்ன சொல்லுறாய்?" நான் அவரது கேள்வியைப் புரிந்துகொள்ளாமல் இருந்த போது அப்பிஞ்சுக் குழந்தை வந்து "மாமா மாமா" என்றது. 'பாத்தியேடா பிள்ளைக்கு விளங்கினது உனக்கு விளங்க இல்லையே?.. அப்போதுதான் எனக்கு விளங்கினது.

"அதுக்கென்ன?... அதைவிடச் சந்தோசம் வேறையென்ன?... என்றேன்.

எங்கள் பிள்ளைகள் வளர்ந்தார்கள். பாடசாலைக்குப் போனார்கள். பருவமடைந்தார்கள். பரீட்சைக்குத் தோற்றினார்கள். உள்ளங்களில் பல கனவுகளைச் சுமந்து வளர்ந்தார்கள். ஆற்றை கொள்ளிக்கண், ஆற்றை குறைக் கண் பட்டுதோ? அவருடைய குடும்பத்தின் நிலை இவ்வாறாகிவிட்டது. முகாமில் இருந்த போதுதான் எனது மகன் பொறியியல் பீடத்துக்குப் படிக்கப் போனான். மகளுக்கு ஒரு நல்ல வரன் வந்தது. இவற்றுக்காகத் தான் நாம் அழகண்ணையைப் பிரிய வேண்டியதாயிற்று. அதனாலைதான் அவருக்கு இப்படி ஆனதையும் அறிய முடியாமற் போனது.

'சௌந்து.. வள்ளிபுனக்காணியுக்கை தேங்காய் விழுந்தா விழுந்தாப் போலைகிடக்கு. தேசி, தோடை எல்லாம் உதிர்ந்து போய்க்கிடக்கு. மாமுந்திரி நல்லாப் பூத்துக்கிடக்கு. என்ரை காணிக்கை தேங்காய் குவிச்சுக்கிடக்கு. மகேசுதான் குவிச்சிருக்க வேணும்.

மகேஸ்வரி, அழகண்ணையின் சொந்த மச்சாள்தான். அவர்களுக்குத் திருமணமாகிப் பத்து ஆண்டுகளாகியும் குழந்தைகள் இல்லாமல் போக மனைவியின் நேர்த்திக்கடனாலை புதுக்குடியிருப்புக் கந்தசாமி கோயிலிலை கற்பூரம் அணையச் சத்தியம் பண்ணி, மிளகு தண்ணி குடிச்சு விரதமிருந்ததும் அடுத்த கந்தசஷ்டிக்கை ரதி பிறந்ததும் அவர் அடைந்த மகிழ்ச்சியும் இப்பவும் கண்ணுக்கை தெரியுது.

(24 ஆம் பக்கம் பார்க்க...)



# ஸ்ருதியின் ரசிகர்கள் ஏமாற்றம்

'அகநக ஓ தீரடு' என்ற தெலுங்குப் படத்தில் நடித்திருந்தார் ஸ்ருதிஹாசன். இந்தப் படம் வெற்றிப்படமாக அமையும் என எதிர்பார்த்திருந்த ஸ்ருதிக்கு அப்படம் சிறப்பாக அமையவில்லை. கமல் மகளின் படம் என ஆவலோடு படத்தைப் பார்க்க வந்த ரசிகர்கள், பார்த்ததும் ஏமாற்றமடைந்தனர். இதனால் படத்தைப் பார்வையிடும் ரசிகர்களின் எண்ணிக்கையும் குறைந்தது. திரையரங்குகளிலும் படம் முதல் வாரத்துடனேயே நிறுத்தப்பட்டது. இவர் அறிமுகமான முதல் ஹிந்திப்படமும் இதே மாதிரியாகத்தான் அமைந்தது. இந்தத் தொடர் தோல்விகளால் ஸ்ருதி கவலைப்பட்டாரோ இல்லையோ? இவரை வைத்துப் படம் எடுத்துக் கொண்டிருக்கும் 'ஏழாம் அறிவு' முருகதாசுக்கு சின்ன நடுக்கம் ஏற்பட்டிருக்கிறது. அப்பா கமல் போலவே சகல திறமைகளும் கொண்ட ஸ்ருதிக்கு நல்ல குரல் வளம், நான்கு பேரை மயங்க வைக்கும் இசை என்று பல்வேறு கதவுகள் திறந்திருக்கின்றன. எனவே இப்போது வரும் புதுப்படங்கள் எதையும் ஒப்புக்கொள்ளவில்லையாம். ஏழாம் அறிவுக்குப் பின்புதான் புதுப்படங்களை ஒப்புக் கொள்ளப் போகிறாராம்.

# நாயகனான கவியரசின் வாரிசு

'பொன் மாலைப்பொழுது' படத்தின் நாயகனாக கவியரசு கண்ணதாசனின் மகன் களமிறங்கியுள்ளார். கவிஞரின் கலையுலக வாரிசு இவர்தான். ஆதவ் சினிமாவில் உதவி இயக்குநராகப் பணியாற்றிவிட்டு, நாயகனாகியுள்ளார். நடிப்பில் பயிற்சி பெற்ற, திறமையான புதுமுக நாயகனாக ஆதவ் கண்ணதாசன் மிளிர்வார் என இயக்குநர் முருகதாஸ் தெரிவித்துள்ளார்.

பொன் மாலைப்பொழுது எவ்வளவு அழகாக இருக்குமோ அதைப்போல இந்தப் படமும் அழகாக இருக்கும். இயக்குநர் குமாரவேலிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றிவிட்டு, தற்போது நாயகனாகக் களம் இறங்கியுள்ளேன். சினிமாவில் கவிஞராக சாதித்தவர் கவியரசு கண்ணதாசன். அவரின் வாரிசான நான், கதாநாயகனாக நடித்து சாதிக்க வந்துள்ளேன் - என்றார் ஆதவ் கண்ணதாசன்.




# பெரிய தொகைக்கு ஆசைப்பட்ட அனுஷ்கா



'பில்லா 2' படத்தில் அஜித்துக்கு ஜோடியாக அனுஷ்கா நடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விஷ்ணுவர்தன் இயக்கும் இந்தப் படத்தை, ரஜினியின் 'பில்லா' படத்தைத் தயாரித்த காலம் சென்ற பாலாஜியின் மகன் சுரேஷ் பாலாஜி தயாரிக்கிறார். படத்துக்கு நாயகியாக யாரை ஒப்பந்தம் செய்வது என்பதில் பெரும் குழப்பம் நீடித்து வந்தது. 'பில்லா' தெலுங்குப் பதிப்பில் நாயகியாக நடித்த அனுஷ்கா அந்தப் படத்தில் கவர்ச்சிக்கு புது இலக்கணமே படைத்துள்ளார். எனவே 'பில்லா 2-'இல் அவரையே அஜித் ஜோடியாக்கத் திட்டமிட்டு, இயக்குநர் அனுஷ்காவை அணுகியபோது, தமிழில் ரஜினியைத் தவிர வேறு யாருடனும் இனி நடிப்பதாக இல்லை என்ற 'வைராக்கியத் துடன்' உள்ள அனுஷ்கா, முதலில் மறுத்துவிட்டாராம். பின்னர் பெரிய தொகை, படத்தில் அவருக்கான முக்கியத்துவம் குறித்து விளக்கிய பின்னர் பார்க்கலாம் என்று கூறியுள்ளாராம்.

நடிகர் : ஆதவ் கண்ணதாசன்
நடிகை : காயத்ரி
இயக்குநர் :ஏ.சி.துரை




# திரை விமர்சனம்

நடிகர் : ஆரான்
இயக்குநர் : டானி பாயல்
இசை : ஏ.ஆர்.ரஹ்மான்

ஸ்லம்டோக் மில்லினர் படத்திற்கு ஒஸ்கார் விருது பெற்ற இயக்குநர் டானி பாயல் மற்றும் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் இருவரும் இணைந்து உருவாக்கியுள்ள '127 ஹவர்ஸ்' படம் பரபரப்பாக நகர்கிறது.

அமெரிக்காவில் அபாயகரமான செங்குத்தான மலைப்பகுதிகளில் மலை ஏறும் துணிச்சலான ஆரன் என்ற இளைஞரின் வாழ்க்கையில் நடந்த உண்மைச் சம்பவத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும் படம் இது. மலைப்பகுதியில் பாறைகள் மீது சைக்கிளில் ஆபத்தான வேகத்தில் ஆரன் செல்கின்றார், சைக்கிளை நிறுத்திவிட்டு செங்குத்தான பாறைகளின் மீது ஏறுகிறார். அப்போது முற்றிலும் எதிர்பாராத வகையாக, பாறையில் இறங்கும்போது ஆரனின் வலது கை மீது பெரிய பாறாங்கல் விழுந்து, கை சிக்கிக் கொள்கிறது. எவ்வளவு முயன்றும் கையை எடுக்க முடியவில்லை.

அடுத்து 127 மணி நேரம் என்ன நடக்கிறது, ஆரன் எப்படி வெளிவருகிறார் என்பதுதான் படத்தின் மீதிக்கதை. படத்தின் பெரும்பகுதி தனக்குத்தானே பேசிக் கொள்வது போல அமைந்துள்ளது. ஆனாலும் படத்தின் விறுவிறுப்புத் தொடர்கிறது.

எதிர்பாராத விபத்து ஏற்படும்போது, முதலில் செய்ய வேண்டியது, பதட்டப்படாமல் இனி என்ன செய்ய வேண்டும்?, விபத்தில் இருந்து எப்படி வெளியேற வேண்டும்? என்று யோசிப்பதுதான். எல்லாமே முடிந்துவிட்டது என்ற விரக்தி நிலைக்கு வரக்கூடாது என்று ஆரன் சொல்கிறார். தன்னிடம் உள்ள கமெரா மூலம் தன்னைத்தானே படம் எடுக்கிறார். தன் நிலைமையைப் பற்றித் தன் பெற்றோர்களுக்கு தெரியப்படுத்த கமெராவில் பேசுகிறார். இந்தக் கமெராவை எடுப்பவர், கசற்றை மட்டும் என் பெற்றோரிடம் கொடுத்துவிட்டு, கமெராவை எடுத்துக்கொள்ளுங்கள் என்கிறார். தன்னிடம் இருக்கும் தண்ணீர் போத்தலில் தண்ணீரை அளந்து குடிக்கிறார். அவரது வாழ்க்கையில் பல சம்பவங்கள் அவருக்கு அந்த நேரத்தில் ஞாபகத்துக்கு வருகின்றன. பெற்றோருடன் நடந்த பல சம்பவங்கள் முதல், இந்தப் பாறையில் அகப்பட்டுக் கொள்ளுவதற்கு முன்பு சந்தித்து உதவி செய்த இரு இளம்பெண்கள் வரை யோசித்துப் பார்க்கிறார். தப்பிக்க இதைவிட்டால் வேறுவழி இல்லை என்று ஆரன் ஒரு முடிவு செய்கிறார். பாறையின் அடியில் சிக்கிய வலது கையை தன்னிடமிருக்கும் சிறிய கத்தியால் குத்தி குத்தி, மிகுந்த வலியோடு வெட்டிக்கொள்கிறார். பின்னர் அங்கிருந்து வெளியே வந்து, மீட்க வரும் ஹெலிகொப்டரில் ஏறி ஆஸ்பத்திரிக்கு சென்று சிகிச்சை பெறுகிறார்.

சண்டை, மசாலா, செக்ஸ், வன்முறை என்று ஏவையுமில்லாமல் வித்தியாசமான நல்ல படத்தை அளித்த டானி பாயல் பாராட்டுக்குரியவர். ஆங்கில படத்திற்கு பொருத்தமான முற்றிலும் மாறுபட்ட வகையில் இசை அமைத்திருக்கும் ரஹ்மானுக்கு இந்தப் படம் ஒரு மைல் கல்.



படம் : கோ
நடிகர் : ஜீவா
நடிகை : கார்த்திகா (ராதா மகள்)



## தனுஷுக்காக மாறியது கதை!

மலையாளத்தில் நவ்யா நாயர், ப்ருத்விராஜ் இருவரும் அறிமுகமான படம், நந்தனம். இந்தப் படத்தைதான் சீடன் என்ற பெயரில் எடுத்து வருகிறார் சுப்பிரமணியம் சிவா. நவ்யா நாயர் ஏழைக் குடும்பத்தை சேர்ந்தவர். ப்ருத்விராஜின் பாட்டியின் வீட்டில் வேலைக்கு வருகிறார். வெளியூரில் இருக்கும் ப்ருத்விராஜும் விடுமுறையில் பாட்டி வீட்டுக்கு வருகிறார்.

வந்த இடத்தில் நவ்யா நாயருடன் அவருக்கு காதல் மலர்கிறது. அதேநேரம் ப்ருத்விராஜுக்கு வேறொரு இடத்தில் பெரியவர்களால் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. அந்தத் திருமணம் நடந்ததா? நவ்யா, ப்ருத்வி காதல் கைகூடியதா என்பது கதை.

நவ்யா நாயர் இந்தப் படத்தில் தனது சோகத்தையும் சந்தோஷத்தையும் குருவாயூரப்பனிடம் முறையிடுவார். குருவாயூர் கோவிலுக்குப் போக வேண்டும் என்ற அவரது ஆசையும் நிறைவேறாமலேயே இருக்கும். இந்நிலையில் பக்கத்து வீட்டு இளைஞனாக வந்து நவ்யா நாயருக்கு ஆறுதல் தருவார் குருவாயூரப்பன். இந்தக் கடவுள் வேடம் படத்தில் ஒருசில காட்சிகளியேயே வருகின்றது. இந்தக் கடவுள் கதாபாத்திரத்தில் தான் தனுஷ் நடிக்கிறார். நடிப்பது தனுஷ் என்பதால் நந்தனம் படத்தின் திரைக்கதையை சீடனில் மாற்றிருக்கிறார் சுப்பிரமணியம் சிவா. அதாவது தனுஷ் அதிக காட்சிகளில் வருவதுபோல் சீடன் திரைக்கதை மாற்றப்பட்டுள்ளது.

# மூன்று வேடங்களில் சூப்பர் ஸ்டார் ரஜினி



கோடிக்கணக்கில் உலகம் முழுவதும் 'எந்திரன்' படம் ஈட்டிய வசூல் சாதனைக்குப் பின்னர், சூப்பர் ஸ்டார் ரஜினி நடிக்கும் புதிய படம் பற்றிய தகவல் வெளிவந்துள்ளது. உலக நாயகன் கமல் ஹாசனுடன் இணைந்து 'மன்மதன் அம்பு' படத்தை இயக்கிய கே.எஸ்.ரவிகுமார், தற்போது ரஜினியை வைத்து 'ராணா' என்ற பெயரில் படத்தை இயக்குவதாக அதிகார பூர்வமான தகவல் வெளியாகியுள்ளது.

இதில் ரஜினி மூன்று விதமான வேடங்களில் நடிக்க இருப்பதாகக் கூறுகிறார்கள். ராணா படத்தை 'ஈரோஸ் இண்டர்நஷனல் - ஆக்கர் ஸ்டுடியோஸ்' கம்பனிகள் இணைந்து தயாரித்து தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிட்டு உலக அளவில் வசூலை வாரிக் குவிக்கத் திட்டமிட்டுள்ளதாக சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இசை-ஏ.ஆர்.ரகுமான், ஒளிப்பதிவு-ரத்னவேலு, ஆர்ட்- ராஜீவன், எடிட்டிங்-ஆண்டனி எனப் பங்கேற்க, தொழில் நுட்பத்தில் சிறப்பாகப் பணியாற்ற சௌந்தர்யா ரஜினிகாந்த் ஆகியோர் தயாராகவுள்ளனர். மார்ச் மாதம் படப்பிடிப்பு ஆரம்பமாகி அடுத்த வருடம் 'ராணா' படம் ரசிகர்களின் பார்வைக்கு வரவுள்ளதாக கொலிவூட் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

## மீண்டும் வந்தார் விஜய்



3 இடியட்ஸ் படத்தில் விஜய்க்குப் பதில் சூர்யா நடிக்கிறார் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், மீண்டும் இப்போது விஜய்யே நடிக்கிறார் என்பதுதான் பலரையும் ஆச்சரியப் படுத்தியுள்ளது. நான்கு தினங்களுக்கு முன்பே ஊட்டியில் படப்பிடிப்பைத் தொடங்கிய ஷங்கர், சூர்யா இல்லாமலேயே படத்தை எடுத்து வந்தார். இப்போது சூர்யாவை நிரந்தரமாகவே படத்திலிருந்து நீக்கி விட்டார் என்று கூறப்படுகிறது. 3 இடியட்ஸ் போன்ற கதையில் விஜய் போன்ற பெரிய ஹீரோ நடிப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று தயாரிப்பாளர்களிடம் சொல்லிச் சமாதானப்படுத்தினார் ஷங்கர்.

## உள்ளாடை அணிய மறந்த நீத்து

உள்ளாடை அணியாமல் குட்டைப் பாவாடை அணிந்து பொது நிகழ்ச்சிக்கு வந்தார் நீத்து சந்திரா. நிகழ்ச்சி நடந்துகொண்டிருந்தபோது, தன் ஆடை விலகியதைக் கூட கண்டு கொள்ளாமல் அவர் இருந்ததால், புகைப்படக்காரர்கள் படங்களாக எடுத்துத் தள்ளினர்.

படங்களில் அணியும் ஆடைகளை விட இன்னும் குட்டையான, கவர்ச்சியான உடைகளை அணிவது நடிகைகளின் வழக்கமாகிவிட்டது. சின்ன கவுன் அணிந்து வந்து அதிர்ச்சி தந்த ஸ்ரேயா, வெள்ளை உள்ளாடை வெளியில் தெரியும் அளவுக்கு குட்டையான பாவாடை அணிந்து வந்த ப்ரியாமணி ... இவர்கள் வரிசையில் இப்போது நீத்து சந்திரா. சமீபத்தில் கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகே ஒரு நிகழ்ச்சிக்கு வந்திருந்தார் நீத்து. மிகவும் குட்டையான பாவாடையும், முன்னழகு தெரியும் அளவுக்கு தாராள அகலம் கொண்ட மேலாடையும் அணிந்து அவர் வந்திருந்தார்.

நாற்காலியில் கால் மீது கால் போட்டபடி அவர் அமர்ந்தபோது, எதிரிலிருந்த புகைப்படக்காரர்கள் மற்றும் பார்வையாளர்கள் அதிர்ந்தனர். பலர் வைத்த கண் வாங்காமல் அவரையே... அவரது ஆடை விலகாதா என்று பார்த்துக்கொண்டிருந்தனர். காரணம், மிகவும் குட்டையான ஒரு பாவாடை அணிந்து வந்த நீத்து, உள்ளாடை அணிய மறந்துவிட்டார் போலும். உடனடியாக பளிச் பளிச்சென்று படம்பிடித்தனர் புகைப்படக்காரர்கள். அப்படியிருந்தும் அதனை மறைக்கவோ, எழுந்து செல்லவோ நீத்து சந்திரா முயற்சிக்கவில்லை. படங்கள் சென்சார் செய்யப் படாமல் அப்படியே இணையத் தளங்களிலும் பத்திரிகைகளிலும் வந்த பின்னர், அதுபற்றிக் கருத்து கூறிய நீத்து, ''நான் உள்ளாடை அணிந்து வந்தால் என்ன... எப்படி வந்தால் என்ன? இதனால் யாருக்கு என்ன நஷ்டம்... வேலையைப் பாருங்கள். அதேநேரம், இவையனைத்தும் கிராபிக்ஸ் வேலை'' - என்றார்.



# நயனுக்கு அம்மாவாக மனீஷா




நயன்தாராவுக்கும் எனக்கும் வயது வித்தியாசம் அதிகமில்லை.

ஆனாலும் வேடத்தின் முக்கியத்துவம் கருதியே அவருக்கு அம்மாவாக நடித்தேன் - என்றார் நடிகை மனீஷா கொய்ராலா. ஹிந்தியில் பரபரப்பான நாயகியாக இருந்தவர் மனீஷா. தமிழில் பம்பாய் படத்தில் அறிமுகமாகி, ஷங்கரின் இந்தியன், ரஜினியின் பாபா உள்ளிட்ட பெரிய படங்களில் நாயகியாக நடித்திருந்தார். கடந்த ஆண்டு நேபாள தொழிலதிபரை மணந்த அவர், இப்போது தனது அடுத்த இன்னிங்ஸை ஆரம்பித்துள்ளார். வழக்கம்போல அம்மா, மாமியார் வேடங்களை ஒப்புக்கொள்ள ஆரம்பித்துள்ளார்.

மலையாளத்தில் நயன்தாராவுக்கு அம்மாவாகவும், மாப்பிள்ளையில் தனுஷுக்கு மாமியாராகவும் நடித்துள்ளார். இதுகுறித்து மனீஷா கூறுகையில், ''நயன்தாராவின் அம்மா வேடத்தில் நடிக்க அழைத்தபோது முதலில் யோசித்தேன். எனக்கும் நயன்தாராவுக்கும் வயது வித்தியாசம் அதிகமில்லை. ஆனாலும் படத்தில் எனக்கு அழுத்தமான வேடம். என்னைச் சுற்றியே கதை வரும். எனவேதான் சம்மதித்தேன்'' - என்றார்.

# இளமைக்கு உதவும் ஆசனங்கள்



எல்லோருக்கும் இளமையாக இருக்க வேண்டும் என்ற ஆசை இருக்கும். ஆனால் அதற்கு வழி தெரியாமல் இருப்பார்கள். இளமையாக இருக்க ஆசனங்கள் உதவும். அதாவது ஆசனங்களில் சிரசாசனம் ராஜா என்றும், சர்வாங்காசனம் ராணி என்றும் அழைக்கப்படுகின்றன.

இதில், சர்வாங்காசனம், விபரீத கர்ணி, மச்சாசனம், சிரசாசனம் ஆகியவற்றை முறையாக செய்து வந்தால் எந்த ஆரோக்கியக் குறைபாடும் இன்றி இளமையாக வாழலாம். ஆனால், இவற்றை முறையாக செய்வது மட்டுமின்றி, இதற்கு இணையான அதாவது நின்றபடி செய்யும் ஆசனங்களையும் செய்ய வேண்டியது அவசியமாகிறது. மேலும் இந்த ஆசனங்கள் ஒவ்வொன்றிற்கும் நடுவே சவாசனம், சுவாசனம், நித்திரை ஆசனம் ஆகியவற்றையும் செய்ய வேண்டும்.

சவாசனத்தில் தெற்கு நோக்கி தலை வைத்தபடியும், நித்திரையாசனத்தில் மேற்கு நோக்கி தலை வைத்தபடியும் செய்ய வேண்டும்.



# அழகான உதடுகளுக்கு.....

வாரம் இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு உதடுகளை வெதுவெதுப்பான மற்றும் குளிர்ந்த தண்ணீரால் ஒத்தடம் கொடுத்து வந்தால் அவை ரோஜா போல மென்மையாக மாறும்.

உதடுகளைக் கடிக்கும் பழக்கம் சிலருக்கு உண்டு. அது தவிர்க்கப்படவேண்டிய பழக்கம். அதனால் உதடுகள் வறண்டு போகவும், நிறம் மாறி அசிங்கமாகக் காட்சியளிக்கவும் கூடும். எனவே இது தவிர்க்கப்பட வேண்டும். மற்றவர்கள் உபயோகிக்கும் லிப்ஸ்டிக்குகளைப் பகிர்ந்து கொள்ளக் கூடாது. அதனுல் தொற்றுக் கிருமிகள் பரவ வாய்ப்புண்டு. இப்போது மேட் பினிஷ் லிப்ஸ்டிக்குகள் மிகவும் பிரபலம். அவற்றில் ஈரப்பதம் குறைவு என்பதால் அவை உதடுகளில் உள்ள இயற்கையான எண்ணெய்களை அழித்து விடும். எனவே அவற்றை எப்போதாவதுதான் உபயோகிக்க வேண்டும்.

லிப்ஸ்டிக் போட உபயோகிக்கும் பிரஷ்ஷை உடனுக்குடன் சுத்தப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் மறுபடி அதை உபயோகிக்கும்போது தொற்றுக் கிருமிகள் பரவ் வாய்ப்புண்டு.

இரவு படுக்கச் செல்வதற்கு முன்பாக உதடுகளில் உள்ள லிப்ஸ்டிக்கை சுத்தமாக அகற்றி விட வேண்டியது மிக முக்கியம். லிப்ஸ்டிக்கை நேரடியாக அப்படியே தடவக்கூடாது. அது உதடுகளின் முழுமையான அழகை வெளிப்படுத்தாது. எனவே லிப் பிரஷ்ஷின் உதவியாலேயே லிப்ஸ்டிக் போட வேண்டும். முட்டையின் வெள்ளைக் கருவோடு தேன் கலந்து உதடுகளில் தடவி வந்தால் அவை அழகு பெறும்.

# குறட்டையைக் குறைக்க



ஒக்சிசனை உடலில் தேவையான இடத்திற்கு எடுத்து செல் லும் வகையில் புதிய கருவிகள் தற்போது கிடைக்கின்றன. அறையில் உள்ள ஒக்சிசனை உள்ளிழுத்து நம் மூக்கின் வழியே உடலுக்குச் செலுத்தும் இவற்றை வீட்டிலும் வைத்துக் கொள்ளலாம்.

குறட்டையைக் குறைக்க மேலும் சில கருவிகள் விளம்பரப் படுத்தப்படுகின்றன. விசேஷ தலையணை, கழுத்துப் பட்டைகள், நாக்கை அழுத்திப் பிடிக்கும் கருவிகள் என இவற்றில் பல வகைகள் உள்ளன.

குறட்டை விடுபவரை, ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திற்குத் திருப்பிப் படுக்க வைத்தாலே குறட்டை ஒலி குறையும்.

ஸ்பைரோ மீற்றர் கருவியால் மூச்சுப் பயிற்சி செய்தல், பலூன் ஊதுதல், புல்லாங்குழல் ஊதுதல், ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை தினமும் 30 நிமிடம் மேற்கொண்டால் குறட்டை குறைகிறது என்பது ஆய்வில் கண்டயப்பட்ட உண்மை.

யோகாவில் உள்ள மூச்சுப் பயிற்சியும் மிகச் சிறந்தது. தினமும் 45 நிமிடம் யோகா, மூச்சுப் பயிற்சியுடன் கூடிய நடைப் புயிற்சி போன்ற பழக்கங்களை, சிறு வயது முதலே கடைபிடிக்க வேண்டும். இதனால் இளவயது பருமனைக் குறைக்கலாம். திடீர் மரணத்தையும் தவிர்க்கலாம்.



## சிந்தனைத் துளி

தோல்விகளின் முடிவில் விழும் கல்லெறிகளுக்குப் பணிந்து விடாதே.
காய்த்த மரமே கல்லெறிபடும்.
- யாரோ.

### முகம் அழகு பெற

கடலை மாவு,சந்தன பவுடர்,பச்சை பயிற்றம் பவுடர், மஞ்சள் பவுடர் இவை அனைத்தையும் சம அளவு எடுத்து அதை பாலில் குழைத்து முகம் மட்டும் அல்ல கை கால் கழுத்து எல்லா இடங்களிலும் தேய்த்து வந்தால் வெண்மையும் பளபளப்பும் கிடைக்கும்.

### முகப் பருக்கள் வராமல் தடுக்க

நார்ச்சத்து அதிகமுள்ள உணவை அன்றாட உணவில் அதிகம் சேர்க்க வேண்டும் . கீரை உணவைத் தினமும் சாப்பிடலாம். சமைக்காத பச்சைக் காய்கறிகள் மற்றும் பழங்கள் சாப்பிடுவது மிகவும் நல்லது தினமும் மூன்று லிற்றர் தண்ணீர் குடிப்பது நல்லது. சருமத்தில் எண்ணெய்ப் பசை அதிகம் உள்ளவர்களுக்கும் இந்த முகப் பருக்கள் வர வாய்ப்புகள் மிக அதிகம். அதற்கு தினமும் ஆரஞ்சு பழரசத்தை முகத்தில் தடவி நன்கு ஊறிய பிறகு கழுவிட வேண்டும். தக்காளி மற்றும் பப்பாளிபழக் கூழையும் முகத்தில் தடவி வந்தால் எண்ணெய்ப் பசை படிப் படியாக குறையும். எண்ணெய் பசை அதிகமுள்ள சோப்புகளைப் கண்டிப்பாகப் பயன்படுத்தக் கூடாது. முகப்பருக்கள்



வந்த பிறகு சிகிச்சை எடுப்பதற்குப் பதில்,அவை வரவிடாமல் தடுக்கும் முயற்சியில் அக்கறை செலுத்துவதே மிகவும் சிறந்தது.

### அடர்த்தியான புருவங்கள் பெற

தினமும் உறங்கச் செல்லும் முன்பு, அல்லது குளிப்பதற்கு முன்பு விளக்கெண்ணெயைப் புருவத்தின் மயிர் காலில் படும்படி தேய்த்து இலேசாக மசாஜ் செய்ய வேண்டும். இவை புருவங்கள் அடர்த்தியாக வளர உதவும். மேலும் ஹார்மோன்கள் பிரச்சனையால் புருவத்தில் முடி கொட்டியிருந்தாலும் அங்கு இரத்த ஓட்டத்தை அதிகரித்து அவை திரும்ப வளரவும் இந்த மசாஜ் முறை உதவும்.

### கரும் புள்ளிகள் மறைய

பயித்தம் பருப்பு மாவுடன் சிறிது எலுமிச்சை சாறு, சிறிது கிளிசரினை கலந்து முகத்தில் பூசித் தினமும் பத்து நிமிடம் ஊறவைத்துக் கழுவினால் நீண்ட நாளாயிருக்கும் கரும் புள்ளிகள் நீங்கும். பயிற்றம் பருப்பு மாவுடன் தயிரைக் கலந்து முகத்தில் பூசி அரைமணி நேரம் ஊறவைத்து கழுவி வந்தாலும் கரும்புள்ளிகள் நாளடைவில் மறையும். தேவைப்பட்டால் லிப் லைனரைக் கூட லிப்ஸ்டிக்காகப் பயன்படுத்தலாம். மாய்ஸ்சுரைசர் இல்லாத லிப்லைனரை லிப்ஸ்டிக்காகப் பயன்படுத்தினால், மறக்காமல் சிறிதளவு க்ரீம் தடவ வேண்டும். இது உதடுகள் காய்ந்து வெடிக்காமல் இருக்க உதவும்.

### எப்போது தாகம் ஏற்படுகிறது

உடம்பில் இருக்கும் நீரின் அளவு ஒரே மாதிரியாய் இருந்தால் நமக்கு தண்ணீரின் ஞாபகமே இருக்காது. நீரின் அளவு 2.5 சதவீதம் குறைந்தாலே போதும். முதலில் தொண்டையில் ஈரம் காய்ந்துப் போக மூளை விழித்துக் கொண்டு தண்ணீர்த் தேவையை வாய்ப் பகுதிகளில் உள்ள நரம்புகளுக்கு உணர்த்துகிறது

# திடீர்க் கூட்டணிகளால் மலையகத்தின் தனித்துவம் எதிர்கொள்ளும் சவால்

**இரா. புத்திரசிகாமணி**

முன் எப்பொழுதும் இல்லாத வாறு மலையகத்தில் சில திடீர் தமிழ் கூட்டணிகள் உதயமாகி உள்ளன. இவை உணர்வு பூர்வமாக உருவாக்கப்பட்டவையா? அல்லது ஒட்டிக் கொள்ள வேறு (அரசியல் கட்சிகள் கிடைக்காமல்) போக்கிடம் இன்றி உருவானவையா?

ஏட்டிக்குப் போட்டியாக உருவாக்கப்பட்டிருக்கும் இந்தக் கூட்டணி களால் மலையகத்தின் தனித்துவம் பாதுகாக்கப்படுமோ அல்லது பறி போய்விடுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

உண்மையாகவே மலையகத்தின் தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற இதய சுத்தியுடன் இக் கூட்டணி தோற்றுவிக்கப்பட்டது என்றால் நிச்சயமாக அதனை மக்கள் வரவேற்பர். அல்லது தேர்தலுக்காக அமைக்கப்பட்ட தற்காலிக கூடாரங்கள் என்றால் அதன் அடிப்படையிலேயே பிரதிபலன் அமையும்.

**முழுமையாகத் தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் மாவட்டங்களாக நுவரெலியா மாவட்டமும் பதுளை மாவட்டமும் அமைந்துள்ளன. சப்பிரகமுவ, கண்டி பிரதேசங்களில் பெருமளவிலான தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகள் இருக்கின்ற போதும் அவை பல அரசியல் கட்சிகளை சார்ந்தவையாகவே காணப்படுகின்றன.**

முழுமையாகத் தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் மாவட்டங்களாக நுவரெலியா மாவட்டமும் பதுளை மாவட்டமும் அமைந்துள்ளன. சப்பிரகமுவ, கண்டி பிரதேசங்களில் பெருமளவிலான தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகள் இருக்கின்ற போதும் அவை பல அரசியல் கட்சிகளை சார்ந்தவையாகவே காணப்படுகின்றன.

அதற்கான காரணம் இந்த தமிழ் தொழிற் சங்க அரசியல் தலைமைகள் தான். இவர்கள் தொழிற்சங்க ரீதியில் சிங்களப் பிரதேசங்களில் வாழும் தமிழர்களின் சந்தாப்பணத்தில் காட்டும் அக்கறையை அரசியல் ரீதியாக காட்டுவது இல்லை.

இவர்களுடைய வாக்குகள் தாம் நாடாளுமன்றம் செல்லவும், மாகாண சபை அமைக்கவும், அமைச்சர்களாகவும் உதவப் போவதில்லை என்ற நினைப்பில் அரசியல் ரீதியாக கிடைக்கும் 90 வீதமான வளங்களை நுவரெலியா, பதுளை பிரதேசங்களிலேயே கொட்டிக்குவித்து விடுகின்றனர். உதிரியாக தென்பகுதிக்கும் வழங்குகின்றனர். என்பதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இதனால் மலையக தொழிலாளர்கள் செறிந்து வாழும் தென்பகுதியில் தமிழ் மக்களை ஒரு குடையின் கீழ் கொண்டுவர முடியாதநிலை. இது ஒரு பெரிய பலவீனமாகும்.



நுவரெலியா மாவட்டத்தின் நிலைமையை நோக்கினால் இங்கே மூன்று கூட்டணிகளும், ஒரு தனி அரசியல் கட்சியும், டம்மிகளான எட்டுச் சுயேட்சைக்குழுக்களும் களம் இறங்கியுள்ளன.

1.அரசுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கூட்டணி.

2.மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், தொழிலாளர் விடுதலை முன்னணி, மலையக தேசிய தொழிலாளர் சங்கம், ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கூட்டணி.

3.சதாசிவத்தின் இலங்கை ஜனநாயக ஐக்கிய முன்னணி, மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி என்பன உள்ளடக்கிய கூட்டணி.

இவை அனைத்திற்கும் சவால் விடுவதாக தனிக்கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியும் குதித்துள்ளது.

இங்கு இன்றும் ஒரு நடைமுறையும் பின்பற்றப்படுகின்றது. அதாவது தமது கட்சியின் சின்னங்களில் போட்டியிடும் அரசியல் கட்சிகள், சிலவேளை தமது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டால் அதற்கு மாற்றீடாக சில சுயேச்சை குழுக்களையும் இறக்கி விடுவதுண்டு. இதன்படி சில உதிரிகளாகவும், டம்மிகளாகவும் எட்டு சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

கடந்த காலங்களில் கொழும்பு மாநகர சபைக்கு ஐக்கிய தேசியக் கட்சியினதும், தலாவாக்கலை லிந்துலை நகர சபைக்கு மலையக மக்கள் முன்னணியினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட போது, அவற்றின் டம்மிகள் வெற்றியடைந்து தம்மையும் களத்தில் இறக்கி முழு மூச்சாக தமது வெற்றிக்குப் பாடுபட்ட கட்சிகளின் காலை வாரிவிட்ட முன் அனுபவமும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

அரசுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் ஆறுமுகன் தொண்டமானும், சாந்தினி தேவி, இராதகிருஷ்ணன் குழுவில் உள்ள திகாம்பரம் அணி உட்பட அனைவரும் பெரிதும் எதிர்பார்த்தது நுவரெலியா பிரதேசசபையும், லிந்துலை, தலவாக்கலை நகர சபையுமே.

இங்கே தொண்டைமான் கூட்டணியினரின் நுவரெலியா பிரதேச சபைக்கும் லிந்துலை நகர சபைக்குமான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதேவேளை மலையக மக்கள் முன்னணியின் லிந்துலை தலவாக்கலை நகர சபைக்கான மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இது இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்கும் மலையக மக்கள் முன்னணிக்கும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

இப்படியான நிலையில் இந்தத் திடீர் கூட்டணிகளின் நிலைமையைச் சிறிது பார்ப்போம். ஏற்கனவே தனது சொந்தச்சின்னத்தை மறந்து விட்ட இ.தொ.கா. அணி அரசின் வெற்றிலைச் சின்னத்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறது.

மலையக மக்கள் முன்னணியின் தலைமையிலான ஐந்து கட்சிகளின் கூட்டைப் பாருங்கள். அம்பேகமுவ, கொத்மலை ஆகிய பிரதேச சபைகளுக்கு திகாம்பரத்தின் தேசிய தொழிலாளர் சங்கத்தின் மயில்சின்னத்தில் வாக்குக் கேட்கின்றனர்.

நுவரெலியா, வலப்பனை, ஹங்குராங் கெட்ட ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்கும் கற்றன் டிக்கோயா, லிந்துலை தலவாக்கலை நகர சபைகளுக்கும் மலையக மக்கள் முன்னணியின் மண்வெட்டி சின்னத்தில் கேட்கின்றனர்.

மூன்றாவது கூட்டணியைப் பார்க்கும் போது நுவரெலியா, கம்பளை, கொத்மலை ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்கும் சதாசிவத்தின் மீன் சின்னத்திலும்,

அம்பேமுவ, அங்குராங்கெட்ட ஆகிய பிரதேச சபைகளுக்கும் கற்றன் டிக்கோயா லிந்துலை தலவாக்கலை ஆகிய இரு நகரசபைகளுக்கும் மனோ கணேசனின் ஏணி சின்னத்திலும் போட்டியிடுகின்றனர்.

ஆறுமுகன் தொண்டைமானைத் தவிரத்து இரண்டு தமிழ்கூட்டணிகள்,

**ஏட்டிக்குப் போட்டியாக உருவாக்கப்பட்டிருக்கும் இந்தக் கூட்டணிகளால் மலையகத்தின் தனித்துவம் பாதுகாக்கப்படுமோ அல்லது பறிபோய்விடுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.**

நான்கு சின்னங்கள், இவற்றுடன் அரசுடன் சார்ந்த தொண்டைமானின் அணியுடன் வெற்றிலையும், மலையக மக்களுக்கு நன்கு பழக்கப்பட்ட யானையும் கூட இருக்கின்றன.

யானை வெற்றிலை மண்வெட்டி, மயில், மீன், ஏணி ஆறு சின்னங்களில் தமிழ் வேட்பாளர்கள் வாக்கு வேட்டைக்கு இறங்கி உள்ளனர். ஒவ்வொரு தமிழ்க்கூட்டணியிலும் தலா இரண்டு சின்னங்கள். இதனால் யாருக்குப் போடுவது, யாரை ஆதரிப்பது என்று புரியாமல் மலையக மக்கள் நிலை தடுமாறி உள்ளனர். இந்தத் தமிழ் கூட்டணிகளாவது ஒரே சின்னத்தில் போட்டியிட்டிருக்கலாம் அல்லவா? மக்கள் ஓரணியில் வாக்களிப்பார்கள் தானே?

தமிழ் மக்களின் வாக்குகள் இப்படி பலவாறு பிரிந்து நிற்கும் அதே வேளை, ஐக்கிய தேசியக்கட்சி இந்திய வம்சாவளி மக்களின் பிரஜா உரிமையை நீக்கியதன் மூலம் பாரிய துரோகத்தை செய்தது. 1983 களில் இனப்படுகொலைகளைக் கண்டும் காணாமல் இருந்ததை எல்லாம் மக்கள் மறந்து விடவில்லை.

அதேபோன்று ஆளும் கூட்டணியும் நட்சதிட்டத்தின் மூலம் தொழிலாளர்களை வீதிக்கு விரட்டியது. தனி சிங்கள சட்டம், ஸ்ரீ போராட்டம், இந்திய எதிர்ப்பு, தோட்டக்காணிகளை சுவீகரித்தது, சிங்களக் கிராமங்களை உருவாக்கியது, அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலை உயர்வு என்பனவற்றால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இதனால் இந்த இரண்டு பெரும்பான்மை அரசியல் கட்சிகள் மீதும் மலையக மக்கள் வெறுப்பு அடைந்துள்ளனர்.

இதனைத் தமிழ்க் கூட்டணிகள் உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு செயல்பட வேண்டும். இல்லாவிட்டால் பூனைகளுக்கு அப்பத்தைப் பங்கிட்ட குரங்கு போல் மலையக மக்களின் வாக்குகளை ஐ.தே.கட்சி சுருட்டிக் கொள்ளக் கூடிய பேராபத்தும் உண்டு என்பதை மறந்து விடக்கூடாது.

★★★

# சுடர் ஒளி

06, பெப்ரவரி - 12, பெப்ரவரி, 2011

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14. டெலிபோன்: 0115738005
பாக்ஸ்: 0115517944 - 5
E-mail: editorial@sudaroli.com


## எல்லோருமே நடிகர்கள்தாம்

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் 2002 ஆம் ஆண்டு அமைதிக்கான உடன்படிக்கை கைச்சாதிடப்பட்டது. நோர்வே நாடு இதற்கான ஒத்தாசைகளைப் புரிந்தது. 5 வருடங்களின் பின்னர் இந்த உடன்படிக்கை தோற்றுப் போனது. வழக்கம் போல, சிங்கள - தமிழ் இனங்கள் இடையில் செய்து கொள்ளப்பட்ட மற்றொரு உடன்படிக்கையும் கிடப்பில் போடப்பட்டு விட்டது.

அமைதிப் பேச்சில் விடுதலைப் புலிகள் இதய சுத்தியுடன் ஈடுபடவில்லை என்பது அரசினாலும் அனைத்துலக சமூகத்தினாலும் முன்வைக்கப்படும் முக்கிய குற்றச்சாட்டு. அரசியல் தீர்வு ஒன்றைப் பெறுவது அவர்களது நோக்கமாக இருக்கவே இல்லை என்று இந்தக் குற்றச்சாட்டுக் கூறுகின்றது.

எந்த ஒரு அமைதிப் பேச்சிலும், ஈடுபடும் இரு தரப்புகளும் சம மதிப்புள்ளவையாகக் கருதப்பட வேண்டும் என்பது பால பாடம். அனைத்துலக நாடுகள் தம்மை அப்படி நடத்தவில்லை என்ற குறை விடுதலைப் புலிகளிடம் இருந்தது. அனைத்துலக சமூகத்தின் நெருக்குதல்களை அவர்கள் சந்தேகத்துடன் பார்த்ததற்கு அதுவும் ஒரு காரணம்.

குறிப்பாக அமைதிப் பேச்சுக்களுக்கான இணைத் தலைமைகள் என்று தம்மைத் தாமே அழைத்துக் கொண்ட அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே ஆகிய நாடுகள் விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பாக மட்டுமே பார்த்தன. ஆனால், அமைதி வழியாகவோ ஆயுத வழியாகவோ புலிகளை இல்லாது ஒழிக்க வேண்டும் என்பதே இவற்றின் நோக்கமாக இருந்தது.

நீண்ட காலத்தின் பின்னர் இந்த உண்மையை அமெரிக்காவின் தென் மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான இராஜாங்கச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக் பகிரங்கமாக ஒத்துக் கொண்டுள்ளார். அமெரிக்காவில் செயற்படும் தேசியப் பொது வானொலிக்கு (National Public Redio) அவர் செவ்வி ஒன்றை வழங்கி இருந்தார்.

அதில், வன்னியில் இறுதிப் போர் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த போது "நாங்கள் மோசமானதொரு சூழலுக்குள் சிக்கிக் கொண்டோம். காரணம், ஒருபுறம் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த ஒரு பயங்கரவாத அமைப்பு இல்லாது ஒழிக்கப்பட வேண்டும் என்று நாம் விரும்பினோம். மறுபுறம் அதன் விளைவாக அதிக பொதுமக்கள் இழப்புக்கள் ஏற்படாமல் இருப்பதையும் உறுதிப்படுத்த விரும்பினோம்'' என்றிருக்கிறார் பிளேக்.

வன்னியில் ஆயிரம் ஆயிரமாய் மக்கள் இறந்து கொண்டிருந்த போதும் லட்சக்கணக்கானவர்கள் துன்ப துயரங்களை அனுபவித்து வந்த போதும் அனைத்துலக சமூகம் ஏன் அதனைத் தடுத்து நிறுத்தத் தவறியது என்பதற்கான உண்மைக் காரணம் இதுதான். தங்களுக்கு தலைவணங்காத ஒரு விடுதலைப் போராட்ட இயக்கம் இந்த உலகில் இருப்பதற்கு தகுதியற்றது என்று அனைத்துலக 'அரசுகள்' நம்பின. அதனை அழித்தொழிப்பதற்காக எத்தனை பொதுமக்களின் உயிர்களையும் பலியிட அவை தயாராக இருந்தன என்பதே இதன் மூலம் பெறப்படும் வெளிப்படை உண்மை.

இதன் உண்மை ஒன்று மட்டும்தான். அமெரிக்கா உட்பட எல்லா அரசுகளும் தமது நலன்களுக்காகப் பொதுமக்கள் உயிர்களைப் பலியெடுப்பதற்குத் தயங்கமாட்டா. அத்தோடு இலங்கையின் அமைதி முயற்சி வெற்றிபெற வேண்டும் என்று எந்த ஒரு தரப்பும் விரும்பி இருக்கவில்லை என்பதும்தான். எல்லோருமே நடித்தார்கள். அதனால் தமிழர்கள் இறந்தார்கள்.

# புலிகள் அழிய வேண்டும் என அமெரிக்கா விரும்பியது

## - பிளேக் கருத்து



"பயங்கரவாதத்திற்சார் கிளர்ச்சிகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு மாதிரியாக model சிறிலங்காவினது போரின் இறுதி நாட்களில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையினைக் கருத முடியும்'' என அண்மையில் வெளிவந்த நியூயோர்க்கர் சஞ்சிகையின் கட்டுரை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனை மையமாக வைத்துத் தென் மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்கத் துணை ராஜாங்கச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக்கிடம் சர்வதேச வானொலி ஒன்று செவ்வி கண்டிருந்தது. அதில் சில பகுதி.

**கேள்வி:** தென் மற்றும் மத்திய ஆசியாவிற்கான அமெரிக்காவின் துணை இராசாங்கச் செயலாளராகப் பொறுப்பேற்பதற்கு முன்னர் நீங்கள் சிறிலங்கா மற்றும் மாலைதீவுக்கான அமெரிக்கத் தூதுவராக இருந்திருக்கிறீர்கள். போர் இடம்பெற்ற அந்தக் காலப்பகுதியில் உங்களின் அனுபவம்தான் என்ன?

**பதில்:** அது எனக்கும் சிறிலங்காவிற்கும் இக்கட்டானதொரு காலகட்டம். பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிடப்பட்டிருந்த விடுதலைப் புலிகளை மையப்படுத்தி சிறிலங்கா அரசாங்கம் சமாதான முயற்சிகளில் ஈடுபட முனைந்தது. ஆனால் சிறிலங்காவினை இலக்கு வைத்து விடுதலைப் புலிகள் பல தாக்குதல்களை நடாத்தியிருந்த நிலையில் அந்த அமைப்பினை இராணுவ ரீதியில் தோற்கடிப்பது என்ற முடிவினைச் சிறிலங்கா எடுத்திருந்தது.

ஆனால் புலிகளமைப்பினை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முடியாது என நாம் கருதினோம். ஆனால் எந்த எண்ணத்தினையெல்லாம் சிறிலங்கா பொய்யாக்கியது. ஆனால் புலிகளைத் தோற்கடிப்பதற்குச் சிறிலங்கா கொடுத்த விலைதான் அதிகம். குறிப்பாகப் போரின் இறுதி நாட்களில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தார்கள்.

இந்த நிலையில் உண்மையான இனநல்லிணக்கம் மற்றும் உருப்படியான பொறுப்புச்சொல்லும் செயற்பாடுகள் இடம்பெறுவது மிகவும் அவசியமானது. அதுபோன்ற செயற்பாடுதான் சிறிலங்காவின் ஒருமையைப் பாதுகாக்கும்.

**கேள்வி:** "தொடர்புடைய பிராந்தியத்திற்கு ஊடகங்கள், ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமை அமைப்புக்கள் போன்றவை செல்லுவதற்கான அனுமதியினை மறுக்கும் அதேநேரம் உங்கள் எதிரியினைத் தனிமைப்படுத்துவதோடு குறுகிய காலத்திற்குள் எவ்வளவு பேரைக் கொல்ல முடியுமோ அவ்வளவு பேரைக் கொன்று குவிக்க வேண்டும். இதனூடாக எஞ்சியவர்களையும் பேரச்சத்திற்கு உள்ளாக்குவதோடு இடம்பெறும் இந்தச் சம்பவங்கள் அனைத்துக்கும் ஆதாரங்கள் எதுவும் இல்லாது அழிக்கவேண்டும். சிறிலங்காவில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு கைக்கொள்ளப்பட்ட உத்தி இதுதான்'' என அண்மையில் வெளிவந்த ஆய்வு ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்ததை நீங்களும் அறிவீர்கள் என நம்புகிறேன்.

சிறிலங்காவின் போரின் இறுதி நாட்களில் நடந்தது எதுவோ அதனை இந்தக் கூற்று சரியாகப் பிரதிபலிப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா? இது போன்ற போர்கள் முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு மாதிரியாக நீங்கள் இதனைப் பார்க்கிறீர்களா?

**பதில்:** இதற்குத் தெளிவான பதிலெதனையும் என்னால் வழங்க முடியும் என நான் நம்பவில்லை. ஆனால், இங்கு சமநிலையொன்று பேணப்பட வேண்டியது முக்கியத்துவமானதொன்று என நான் கருதுகிறேன். போரின் போது இடம்பெற்ற பல மீறல் சம்பவங்களுக்கு விடுதலைப் புலிகள் அமைப்பினரும் காரண கர்த்தாவாக இருந்திருக்கிறார்கள்.

நான் சிறிலங்காவில் பணியில் இருந்தபோது ஐரோப்பிய ஒன்றியம், நோர்வேயுடன் இணைந்து நாங்கள் வெளியிட்ட அறிக்கைகளை அவதானித்தால், பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இரண்டு தரப்பினருக்குமே உண்டு எனக் கூறி வந்திருக்கிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு 1997ஆம் ஆண்டுமுதல் அமெரிக்காவினது பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் உள்ளது.

தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாட்டினது வடக்குப் பகுதிகளை நோக்கிப் படையினர் முன்னேறிக்கொண்டிருந்தபோது கடந்த பல பத்தாண்டுகளாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழிருந்த பகுதிகளில் வசித்துவந்த பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் தொடர்ந்தும் வடக்கு நோக்கி இடம்பெயரும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்த மக்கள் தெற்கு நோக்கி, அதாவது அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி நகருவதற்குப் புலிகள் அனுமதிக்கவில்லை.

இந்த மக்களை தெற்கு நோக்கி நகரவைப்பதற்காக எடுக்கப்பட்ட அனைத்துலக முயற்சிகள் அனைத்தையும் விடுதலைப்புலிகள் தந்திரோபாயமாகத் தவிர்த்தனர். போரின் மத்தியில் அகப்பட்டிருந்த பொதுமக்கள் வேறு பகுதிக்கு நகர்த்தப்படுமிடத்து அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் தங்குமிடங்களை வழங்கமுடியும் என அனைத்துலக சமூகம் வாதிட்டது.

இதுபோல பொதுமக்கள் தாங்கள் விரும்பிய பிரதேசங்களுக்குப் பொதுமக்கள் செல்வதைத் தடுத்ததன் ஊடாக விடுதலைப் புலிகள் அனைத்துலக சட்டவிதிகளை மீறியிருக்கிறார்கள். போர் தீவிரம்பெற்ற நிலையில் மக்கள் தெற்குநோக்கி நகருவதற்குப் புலிகள் அனுமதித்திருந்தால் இதுபோல மோசமானதொரு பொதுமக்கள் இழப்பு ஏற்பட்டிருக்காது. காத்திரமான இந்த வாதத்தினை பெரும்பாலும் அனைவரும் மறந்துவிடுகிறார்கள்.

இரண்டாவதாக, ஆட்லறி எறிகணைகள் போன்ற கனரக போர்த்தளபாடங்களை விடுதலைப் புலிகள் வேண்டுமென்றே பொதுமக்கள் இடம்பெயர்ந்து வசித்துவந்த பகுதிகளுக்கு

அண்மையில் நிலைப்படுத்தியிருக்கிறார்கள். படையினர் நடாத்தும் பதில் தாக்குதல்களில் பெருந்தொகையான பொதுமக்கள் கொல்லப்படுமிடத்து அது இந்தப் பிரச்சினை அனைத்துலக கவனம் பெறுவதற்கும் சிறிலங்காவிற்கு எதிராக அனைத்துலக அழுத்தம் வலுப்பெறுவதற்கும் இதுபோன்ற நிகழ்வுகள் வழிசெய்யும் எனப் புலிகள் கருதினர். இதுபோன்ற அழுத்தங்களின் விளைவாக சிறிலங்கா அரசாங்கம் போரை நிறுத்தி அமைதி வழிக்குத் திரும்பும் எனப் புலிகள் தப்புக்கணக்குப் போட்டனர்.

நாங்கள் மோசமானதொரு சூழமைவினை எதிர்கொண்டமைக்கான காரணம் இதுதான். ஒருபுறம் பலநூற்றுக் கணக்கான பொதுமக்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த ஒரு பயங்கரவாத அமைப்பு இல்லாதொழிக்கப்பட வேண்டும் என நாங்கள் விரும்பினோம். மறுபுறம் இதன் விளைவாக அதிக பொதுமக்கள் இழப்புக்கள் இடம்பெறாமல் இருப்பதை நாம் உறுதிப்படுத்த விரும்பினோம்.

பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக அமைந்த போர்க் குற்றங்களிலும் மனித உரிமை மீறல்களிலும் இரண்டு தரப்பினரும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கு கூறியாக வேண்டும்.

சிறிலங்காவிற்கு நான் முன்னர் தெரிவித்த கருத்தையே தற்போதும் கூற விரும்புகிறேன். சிறிலங்காவில் உண்மையான இன நல்லிணக்க முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். நாட்டினது வடக்குப் பகுதியில் புதிய அரசியல் தலைமைத்துவத்தினை இனங்காணும் வகையில் தேர்தல்கள் இடம்பெறவேண்டும். அத்துடன் சிறிலங்காவில் இடம்பெற்றது எதுவோ அதற்குப் பொறுப்புச் சொல்லும் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

இதுதான் காயப்பட்ட பகுதிகள் ... கணைப்புணர்வும் கொண்ட தனது முன்னைய வரலாற்றினை ஒருபுறம் வைத்துவிட்டு, பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் புதிய நம்பிக்கைகள் ஏற்படும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமானது. இடம்பெற்ற கொலைகளுக்கு யார் பொறுப்போ அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியது கட்டாயம்.

★★★

# வன்னி மக்களின் புறச்சூழலை மாற்றியமைத்த யுத்தம்

பூமுகன்

வன்னிப் பெருநிலப்பரப்பு, வயல் வெளிகளும், குளங்களும், ஆறுகளும், புற்தரைகளும், காடுகளும் நிறைந்த வனப்பும் எழிலும் மிக்கது. அங்குள்ள பெரும்பாலான மக்களின் வாழ்க்கை இயற்கையோடு இணைந்தது. குறிப்பிடப்பட்ட சில நகரங்கள் தவிர ஏனைய கிராமப்புறங்களில் மண்,காட்டுமரம், பனையோலை,கிடுகு என்பவற்றால் அமைக்கப்பட்ட வீடுகளே அதிகம்.போக்குவரத்து,தொடர்பாடல் என்பன நவீனத்துவம் அடைந்திருக்கவில்லை. 2002 ஆம் ஆண்டு யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின்னரான அமைதிக்காலத்தில் இந்த நிலைமையில் சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் நான்கு ஆண்டுகளில் நிலைமை மிக மோசமாகியது.

2006ஆம் ஆண்டு யுத்தநிறுத்த ஒப்பந்தம் வலுவிழந்த பின்னர் ஆரம்பித்த யுத்த நடவடிக்கைகள் உயர்ந்து சென்று 2009 இறுதிக்கட்டப் போர்வரை மக்களுக்கு ஏற்பட்ட உடல், உளரீதியான வாழ்வியல் நெருக்கடிகள் ஏராளம். போர் உக்கிரமாக நடைபெற்ற காலத்திலும் அதன்பின்னர் மக்கள் படிப்படியாக மீள்குடியமர்த்தப்பட்டுவரும் தற்போதைய நிலையிலும் உள்ள வன்னிப்பகுதியின் புறச்சூழல் நிலைமைகளையும், விளைவுகளையும் ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**இயற்கைச் சூழலில் பாதிப்பு**

வன்னியில் பெரும்பாலன இடப்பெயர்கள் குளம், ஆறு என முடிபவை. உதாரணமாக கனகராயன் குளம், வவுனிக்குளம்,தென்னியங்குளம், அக்கராயன்குளம், வன்னேரிக் குளம் என்பவற்றையும் திருவையாறு, கல்லாறு, பிரமந்தனாறு என்பவற்றையும் குறிப்பிடலாம். அனேகமாகக் கிராமங்களாகவும் சிற்றூர்களாகவும் அமைந்திருக்கும் வன்னிப் பிரதேசத்தில் மக்களின் வாழ்வாதாரத் தொழில்களில் விவசாயம், அதனோடிணைந்த விலங்கு வளர்ப்பு, மீன்பிடி என்பவை முக்கியம் இடம்வகிக்கின்றன.

வன்னியில் குளங்களும் ஆறுகளும் அதிகமாக இருப்பதனால் அதிகமான மழைவீழ்ச்சி ஏற்பட்டாலும் நீண்ட நாள்கள் தேங்கி வெள்ளம் வடிந்தோடி விடும். காரணம் மழைநீரைப் பாரிய நீர்தேக்கக்குளங்கள் முதல் சிறு குளங்கள்வரை உள்வாங்குவதுடன் எஞ்சிய நீரை ஆறுகள் வழியாகக் கடலுக்கு அனுப்பி விடுகின்றன. இதனால் தாழ்வான பகுதிகள் தவிர ஏனைய இடங்கள் வெள்ள அபாயத்தை எதிர்நோக்குவதில்லை.

ஆனால் யுத்தம் காரணமாக ஏற்படுத்தப்பட்ட இயற்கைபுவி அமைப்பு மாற்றங்கள் இப்போது எல்லா இடங்களையும் வெள்ள அபாயத்துக்குள் தள்ளியுள்ளன. பாரிய மண் அணைகள், காவலரண்கள், தேவைக்கேற்ப வீதியமைத்தல்,தடுப்புவேலிகள் - குறிப்பாக பாலம், மதகு என்பனவற்றைச் சுற்றி முள்வேலிகள் இடப்பட்டுள்ளதால் வெள்ள நீர் பாய்ந்து வரும் போது கொண்டுவரும் கழிவுகள், குப்பைகள் என்பன அவற்றில் தடுக்கப்பட்டு விடுகின்றன. இதனால் நீரின் வடிந்தோடும் இயல்பு துண்டிக்கப்பட்டு வெள்ளம் தேக்கம் அடைகின்றது.

படைமுகாம்களைச் சுற்றியுள்ள பிரதேசங்கள் உட்பட பல இடங்களில் பாரிய மண் அணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் அளவுக் கதிகமான மழைநீரை வெளியேற்றும்



சிற்றாறுகளும் பெரிய ஆறுகளும் தடைப்படுவதால். வெள்ளம் மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் நுழைகின்றது. அது ஒட்டுமொத்தத்தில் மழைநீர் தான் நினைத்தபடி வியுகங்களை வகுக்க வழி செய்கிறது. இதனால் மக்கள் போக்குவரத்தும் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைகின்றன.

**விவசாயம்**

இறுதிப்போரின் பின்னர் நெற்பயிர்ச் செய்கை தவிர ஏனைய விவசாய முயற்சிகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட பல இடங்களில் மானிய அடிப்படையிலான நெற்பயிர்ச்செய்கைக்கு மக்கள் ஊக்குவிக்கப்பட்டனர். இதில் நிலம் பண்படுத்தல், விதைநெல் என்பன இலவசமாகவும், உரம் மானிய விலையிலும் வழங்கப்படும் என விவசாயிகளுக்கு உறுதியளிக்கப்பட்டது. விதைநெல் இலவசமாகவும் உரம்-மானிய விலையிலும் வழங்கப்பட்டாலும் நிலத்தைப் பண்படுத்த செலவாகும் தொகை இதுவரை பயனாளிகளுக்கு வழங்கப்படவில்லை. வாக்குறுதியை நம்பி கடன்பட்டோ,தம்மிடமிருந்த நகைகளை அடைவு வைத்தோ விவசாயிகள் பயிர்செய்கையை மேற்கொண்டனர்.

இவ்வாறு மக்களுக்கு வழங்கப்படும் உதவிகளும் வாக்குறுதிகளும் பாதியளவில் நிறைவேற்றதும் முழு வெற்றியாக கணக்குக் காட்டப்படுகின்றது. இதற்குப்பின்னால் சில அரசியல் தலைவர்களும்,உயர் பதவி வகிக்கும் அரச சேவையாளர்களும் தொடர்ச்சியாக,சுய இலாபத்துக்காக இயங்கவே செய்கின்றனர்.

இவர்களின் பொறுப்பற்ற விதத்திலான நடவடிக்கைகள் நியாயமாக உதவி பெறத்தக்கவர்கள் உரிய வகையில் இனங்காணப்பட்டு உதவி வழங்கப்படாத சீரற்ற நிவாரண நடைமுறைக்கு வழிவகுக்கின்றது.அது எப்படியோ தரிசு நிலங்களாகக் கிடந்த பல இடங்களில் நெல் பூத்துக்குலுங்குகின்றது. பொய்வாக்குறுதிகள் அறுவடையின்போது விவசாயிகளிடம் நியாயமான விலையில் நெல்லைக் கொள்வனவு செய்தாவது போக்கப்படுமா என ஏங்க வேண்டியுள்ளது.

**மீன்பிடி**

விவசாயத்துக்கு அடுத்தபடியாக மீன்பிடித் தொழில் முக்கியமானது. இலங்கையில் வடக்கு,கிழக்குப் பகுதிக் கடல்களே அதிக மீன்வளம் உடையவை. யுத்தத்தின்போது தொழில் உபகரணங்கள் எல்லாவற்றையும் இழந்த மக்கள் இப்போது கடலில் இறங்கி மீன்பிடிக்க முடியாதுள்ளனர். வன்னியில் உவர்நீர், நன்னீர் மீன்பிடித் தொழில்கள் செல்வாக்குப் பெறுகின்றன. முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களின் கரையோரப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத் தொழிலே மீன்பிடித் தொழில் தான். அது இன்று கேள்விக்குறியாகவே ஆகி உள்ளது.

இந்தக் கடற் பிரதேசங்களில் பெரும் பகுதி உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ளன. மேலும் முல்லைத்தீவு கரையோர மக்கள் இன்னமும் மீளக்குடியமர்த்தப்படவில்லை. சில பகுதிகளில் மக்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டாலும் உபகரணங்களின்மையால் உரிய வகையில் தமது தொழிலை மேற்கொள்ள இயலாதுள்ளனர். இதனால் மக்களின் வருமானம் பாதிக்கப்படுகின்றது. இதைவிட குறிப்பிடப்பட்ட கடற்பகுதியில் தென்னிலங்கை மீனவர்கள் படகு மூலமும் தரை வழியாகவும் வந்து நவீன இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தி மீன்வளத்தை அள்ளிச் செல்கின்றனர். இதுவே நன்னீர் குளங்களிலும் நடைபெறுகின்றது.

இங்கு காணப்படும் குளங்கள் பெரும்பாலானவை மீன் வளத்தைக் கொண்டவை. இந்தமீன்கள் பிடிக்கப்பட்டு கருவாடாக்கப்பட்டு தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படுவதன் மூலம் கணிசமான மக்கள் வருமானம் ஈட்டிவந்தனர். இப்போது இதற்கான வாய்ப்புக்கள் இருந்தாலும் சில குளங்களில் மீன் பிடிக்கத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

**விலங்கு வளர்ப்பு**

யுத்தத்தின்போது வன்னியில் விலங்குகளும் பாதிக்கப்பட்டன. அதனால் இப்போது ஆடு,மாடு, கோழி, நாய், பூனை முதலான வளர்ப்புப் பிராணிகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. 2008, டிசெம்பரில் கிளிநொச்சிப் பகுதியில் இலங்கை விமானப்படையினர் நிகழ்த்திய குண்டுத் தாக்குதலில் பட்டியொன்றில் இருந்த 85 மாடுகள் கொல்லப்பட்டமை அந்த வேளையில் பரபரப்பான ஒரு செய்தியாகப் பேசப்பட்டது. ஆடு,மாடு என்பவற்றில் யுத்தத்தால் கொல்லப்பட்டவை போக எஞ்சியவை கட்டாக்காலிகளாக காடுகளிலும் தரவைகளிலும் திரிகின்றன. இவற்றில் ஆடுகள் பராமரிப்பு இன்மையால் நோய்த்தாக்கத்துக்கு உட்பட்டு இறந்தும் போகின்றன. கட்டாக்காலிகளாகவுள்ள மாடுகளை உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பிடிக்கவோ, விற்கவோ நிர்வாகத் தரப்பிலிருந்து இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. ஆனால் அனுமதியின்றி சட்டவிரோதமாக இவற்றை வரோ வெட்டி இறைச்சிக்காகப் பயன்படுத்திவருகின்றனர். இது தொடர்பாக இராணுவத்தினரும் பொலிஸாரும் நடவடிக்கைகள் மேற்கொண்ட போதும், இச் சட்டவிரோத செயற்பாடுகள் கட்டுப்படுவதாகவில்லை. இதனால் யுத்தத்தால் இறந்தவை போக எஞ்சிய வளர்ப்பு மிருகங்களையும் பாதுகாக்க முடியாது மக்கள் அல்லலுறுகின்றனர்.

மனித இறப்புக்கள் பற்றியும் அனுபவித்த துன்பங்கள் பற்றியும் தொடர்ந்து பேசிக்கொள்ளும் நாம் வளர்ப்பு மிருகங்கள் பற்றிப் பெரிதும் அலட்டிக் கொள்வதில்லை. அவற்றின் இழப்புத் தொடர்பான கணிப்பீடுகளும் இல்லை. இதனால் கொல்லப்பட்ட வளர்ப்பு மிருகங்கள் பற்றியோ, எஞ்சியிருக்கும் வளர்ப்பு மிருகங்கள் பற்றியோ தகவல்களைப் பெறமுடியாதுள்ளது.

வன்னிமக்களின் பொருளாதாரத் துணையாகவிருந்த மிருகவளர்ப்பு இப்போது முழு அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. ஆடு,மாடு,கோழி என்பவற்றின் மூலம் இவர்கள் ஈட்டிவந்த வருமானம் இப்போது பூச்சிய நிலையில் அல்லது அதற்கு அண்மையிலேயே உள்ளது. பொது மக்கள் மத்தியில் தற்போது கோழி வளர்ப்பு முயற்சி ஆர்வத்துடன் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அத்துடன் சில உதவும் அமைப்புக்களும் கோழி,ஆடு,மாடு வளர்ப்புத் திட்டங்களுக்கு உதவியளித்து வருகின்றன. இவ்வகையில் மக்கள் தமது சுய தேவைகளைப் பூர்த்தி செய்வதனூடாக வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் அக்கறை செலுத்திவருகின்றனர்.

யுத்தம் மனிதர்களுக்கு நேரடியாக ஏற்படுத்திய துயரங்களுக்குச் சமமாக அவர்களுடைய புறச்சூழலையும் வெகுவாகப் பாதித்திருக்கின்றது. மனிதர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள், துயரங்களை சமாளியம் செய்துகொண்டு அடுத்தகட்டத்துக்கு நகர்வதென்பதை இந்தப் புறச்சூழலே ஏற்படுத்தவேண்டும். ஆனால் வன்னியில் அந்த நிலைமை இதுவரை ஏற்படவில்லை என்பது கவலைக்குரியதே. ★★★

# கைவிரிக்கும் மைதானங்கள்



## ஆஸ்திரேலிய ஓபின் ரெனிஸ் என்ன சொல்கிறது?

-ராஜாஜி-

உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு இன்னும் இரண்டு வாரங்களே இருக்கும் நிலையில் மைதானங்கள் தயாரில்லாததால் போட்டிகளை வேறு மைதானங்களுக்கு மாற்ற வேண்டிய நிலை ஐ.சி.சிக்கு ஏற்பட்டுள்ளது.

ஈடன் கார்டன் மைதானத்தை நேரில் சென்று பார்வையிட்ட ஐ.சி.சி குழுவினர், குறிப்பிட்ட தினத்தில் மைதானத்தை ஐ.சி.சியிடம் கையளிக்காமையினால் இந்த மைதானத்தில் இடம்பெற இருந்த இந்தியா- இங்கிலாந்து இடையேயான போட்டியை இரத்துச் செய்யத் தீர்மானித்தது. இதனால் இந்தப் போட்டி வேறு ஒரு மைதானத்துக்கு இடமாற்றப்பட்டது.

இதேவேளை இலங்கையிலும் சிலவேளைகளில் இவ்வாறான பிரச்சனைகள் எழுவதற்கான வாய்ப்புக்கள் இருந்தபோதும் அவை தற்போது இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கையின் அம்பாந்தோட்டையில் ராஜபக்ஷ மைதானம் அவ்வாறான பிரச்சனைகளை எதிர்கொள்ள இருந்தபோதும் அவற்றை சாதுரியமாகச் சமாளித்திருக்கிறது. இலங்கை-மேற்கிந்தியதீவுகள் இடையேயான போட்டித் தொடர் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் இடம்பெற்றது. இதில் டெஸ்ட் தொடர் முடிவடைந்த நிலையில் ஒரு நாள் போட்டித் தொடர் ராஜபக்ஷ மைதானத்தில் இடம்பெறுவதாக இருந்தது. தீடீரென மழை காரணமாகத் போட்டித் தொடரையே ஒத்தி வைப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு மழை காரணமாக போட்டித் தொடர்கள் ஒத்திவைக்கப்படுவது இல்லை. போட்டிகள் கைவிடப்படுமே ஒழிய ஒத்திவைக்கப்படுவதில்லை. போட்டித் தொடர் ஒத்திவைக்கப்பட்டு ஜனவரி மாத இறுதிப் பகுதியில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

ஏனெனில் முதன் முதலில் அம்பாந்தோட்டை மைதானத்தில் போட்டிகள் இடம்பெறும் பொழுது மைதானம் தயாரில்லாமல் இருப்பதும், போட்டி நடைபெறும் காலங்களில் மைதானத்தை உலகக் கிண்ண போட்டிகளுக்கு ஏற்றவாறு தயார் செய்ய முடியாது போனால் ஐ.சி.சியிடம் குறித்த தினத்தில் மைதானத்தை கையளிக்காமல் போய்விடும். அது ராஜபக்ஷ மைதானத்துக்கும் நாட்டுக்குமே அதிலும் குறிப்பாக ஜனாதிபதி பிறந்த ஊரில் ஜனாதிபதியின் வழிகாட்டலில் இடம்பெற்ற ஒன்று இவ்வாறு தரம் குறைவாக கணிக்கப்படுவதையும் விரும்பாத அரசு இவ்வாறு தந்திரமாக தப்பித்து போட்டி நடத்தும் வாய்ப்பை தக்கவைத்துக்கொண்டது.

-தில்லாலங்கடி-



# தோற்றாலும் கிண்ணம் வெல்வார்களாம்

தென்னாபிரிக்காவுடன் தொடர் இழப்பு. இதனால் பின்னடைவு இவர்களுக்கு இல்லை. இந்தியா இந்த நாமம் உலகக் கிண்ணத்தில் பலமான நாமம். சொல்பவர்கள், இவர்களை வீழ்த்திய தென்னாபிரிக்கர்கள்.

முதலில் நடந்தது டெஸ்ட் தொடர். அதிகம் அறிக்கை விட்டனர் தென்னாபிரிக்கர்கள் அதனால் வெல்ல முடியவில்லை தொடரை. சமனானது அந்தத் தொடர். மூடிக்கொண்டனர் தமது வாய்களை தென்னாபிரிக்கர்கள். புலி பதுங்குவது புல்லுத்தின்பதற்காக இல்லை, பாய்வதற்கே. ஒரு நாள் தொடரை வெற்றி கொண்டது தென்னாபிரிக்கா.

சொந்த மண்ணில் வெற்றி சாதாரண வெற்றி. ஐந்து ஆட்டங்களில் மூன்று ஆட்டம் தென்னாபிரிக்காவுக்கு. அனைத்துப் போட்டிகளிலும் சவால் விட்டது இந்தியா. யூசுப் பதான் ஆடிய ஆட்டம். அதிர்ச்சி அடைந்தது தென்னாபிரிக்கா மட்டுமல்ல எல்லா நாடுகளும்தான். தென்னாபிரிக்க மண்ணில் அதிரடி என்பது நாய் வாலை நிமிர்த்துவதற்குச் சமன். விக்கெட்டுகளை இழந்து தடுமாற்றம். தடுமாற்றத்திலும் தான் மாறாமல் ஆடினார் யூசுப். இதுவே இந்தியாவின் பலம்.

இப்போது முடிந்தபின் அறிக்கை விட்டனர் தென்னாபிரிக்கர்கள். தாம் வியந்து விட்டோம் பதானின் ஆட்டத்தால் என்றனர். இந்தியர்கள் சொந்த மண்ணில் ஆடுவதால் வெற்றி வாய்ப்பு அதிகமாம். ஆரூடக் கணிப்பு. சொன்னவர் தலைவர் ஸ்மித்.

பார்ப்போம், பலரது கணிப்பும் எவ்வாறு அமைகின்றதென்று.

-டிலீப்-




ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் இடம் பெற்று வந்த ஆஸ்திரேலிய ஓபன் ரெனிஸ் போட்டிகள் முடிவுக்கு வந்திருக்கின்றன.

ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் சேர்பிய வீரர் நோவாக் டிஜோவிக்கும் இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் அமெரிக்காவின் பிரையன் சகோதரர்களும் வெற்றி பெற்றனர். மகளிர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் கிளைவ்டர்ஸூம் இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் பெனாரா - டுல்கோ ஜோடியும் சாம்பியன் பட்டங்களை வென்றனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் பலராலும் எதிர்பாக்கப்பட்ட உலகின் முதல் நிலை ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் காலிறுதியில் தோல்வியடைந்து வெளியேறினார். காலில் ஏற்பட்ட தசைப்பிடிப்புப் காரணமாக கடும் சிரமத்தின் மத்தியிலேயே தனது சக நாட்டவரான டேவிட் பெரடர்ரிடம் தோல்வியடைந்து வெளியேறினார். இவரது தோல்வி ஆஸ்திரேலிய ஓபன் ரெனிஸ் போட்டிகளிலேயே திருப்பத்தை கொண்டு வந்தது.

ரெனிஸ் தரவரிசையில் மூன்றாம் இடத்திலிருக்கும் சேர்பிய வீரரான நோவாக் டிஜோகோவிக் தரவரிசையில் ஐந்தாவது இடத்திலிருக்கும் ஜேர்மன் வீரர் அன்டி முர்ரேயை எதிர் கொண்டு அவரை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தைத் தனதாக்கினார்.

ஒன்பது வருடங்களின் பின்னர் ஜோடி சேர்ந்த இந்தியாவின் மகேஸ் - பூபதி ஜோடி ஆடவர் இரட்டையர் பிரிவின் இறுதிப் போட்டிவரை முன்னேறியது. இந்த ஜோடி கிண்ணத்தைக் கைப்பற்றும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியிருந்தது. இருப்பினும் அந்த எதிர்பார்ப்புக் களையெல்லாம் தகர்த்தெறிந்து அமெரிக்காவின் பிரையன் சகோதரர்கள் சாம்பியன் பட்டம் வென்றனர். பிரையன் சகோதரர்கள் ஹட்ரிக் சாம்பியன்கள் என்ற பெருமையைப் பெற்றனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவில், ஓய்விலிருந்து ரெனிஸ் போட்டிகளுக்கு திரும்பிய கிளைவ்டர்ஸ் சாம்பியன் பட்டத்தைத் தனதாக்கினார். முதன் முறையாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற சீன வீராங்கனையான லீ நாவுடன் போராடியே கிளைவ்டர்ஸ் சம்பியனானர்.

சீன வீராங்கனையான லீநா ரெனிஸ் தரவரிசையில் முதல் நிலை வீரரான டென்மார்க்கின் வோல்னியாக்கி வெற்றியை நெருங்கும் வேளையில் தட்டிப் பறித்தே இறுதிக்குத் தெரிவானவர். இறுதியில் முதல் சுற்றை கிளைவ்டர்ஸிடம் இருந்து கைப்பற்றிய போதும் எஞ்சிய இரண்டு சுற்றுக்களையும் இழந்து தோல்வியடைந்தார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் இத்தாலியின் பெனாரா, ஆர்ஜென்தீனாவின் டுல்கோ ஜோடி ரஷ்யாவின் மரியாகிரிவென்கோ, வெலாரஸ்ஸின் விக்டோகியா ஜோடியை எதிர்த்து ஆடியது. இதில் பெனாரா - டுல்கோ ஜோடி சிறப்பாக ஆடி முதன் முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றது.

# கவிதைப்புனல்



## வரம்தர வேண்டும்

தெய்வம் என்முன்னே தோன்றிட வேண்டும்
தேர்ந்த வரங்கள் தந்திட வேண்டும்
பொய்யர் உலகைப் புவிதர வேண்டும்
புலமை சிறக்கும் வல்லமை வேண்டும்

அன்பும் அறமும் நிலைபெற வேண்டும்
அகிலம் அமைதியில் அழகுற வேண்டும்
இன்பம் குலவும் இல்லங்கள் வேண்டும்
இரக்கம் மலரும் இதயங்கள் வேண்டும்

பஞ்சம் அறியாப் பாரிது வேண்டும்
பகிர்ந்துணும் பண்பே பரவிட வேண்டும்
வஞ்சகர் வாழாப் புவிவர வேண்டும்
வனப்புறு புவியில் வாழ்ந்திட வேண்டும்

இந்த வரங்கள் தந்திடில் உலகில்
இருப்பவர் மனதில் இன்பமே கூடும்
தந்திடு தேவே தரணியைப் புதுக்கி
தந்திரமாந்தர் தமைக் களைத் துய்வோம்

கம்சத்வனி பாலசுப்ரமணியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

## மௌனப் பயணம்

பேச்சடக்கி மூச்சடக்கிப் பேசாமல் இருக்கின்றார்
கூச்சலிட்டு வாகனமோ குலுக்கியடித் தோடுகுதென்
ஆச்சோ இவர்களுக்கு ஆசைகதை சொல்லுதற்கும்
பேச்சோ மனங்குலைந்து பொய்முகமோ வாழ்ந்திருக்கு

என்னத்தைச் சொல்ல என்மீதும் சந்தேகம்
முன்னத்தைப் போலவிங்கு முகம்பார்த்துப் பேசுகின்ற
நன்மனத்தைக் காணவில்லை நண்பரென யாருமில்லை
சொன்னகதை கேட்பதற்கும் சுதந்திரமாய்ச் சிந்தையில்லை

எல்லோரும் பகைவர்களாய் எதிரிகளாய்த் தோணுகிறார்
நல்லோரென் றெண்ணுதற்கு நடந்தகதை விடுகுதில்லை
பொல்லாப்பே சூழ்ந்திருக்கு பொய்களவு ஆடிநிற்கு
சொல்லாக் கதைதிரிந்து சோதனையாய்க் கூடிநிற்கு

பேச்சடக்கி மூச்சடக்கிப் பேசாமல் இருக்கின்றார்
நீச்சலடித் திச்சூழல் நெருப்பைக் கடப்பதெப்போ
பேசாமல் கொள்ளாமல் பேயனைப்போல் மூன்றுமணி
மூசிவிழி மூடாத மௌனமெனைக் கொல்லுதையோ

"மாவுறையூரான்"

## ஞானக்கண் விழிப்பு

வானத்தில் தோன்றிய
மின்னல்
விழிகளில் தெரிந்து
மறைகிறது
ஒளிபட்டு முகமும்
சிறிது நேரம்
ஒளிர்ந்து பின்னர்
இருட்டாகிறது
மின்னல் தொடராய்
மின்னுகிறது
முகமும் தொடர்ந்து
ஜொலிக்கிறது
உலகம் இப்போது
இருள்கிறது
மின்னலைக் காணவில்லை
அவன் கண்களில்
இப்போது உலகமே
தெரியவில்லை
அவன் கண்களுக்கு

போல் சுகந்தன்,
நெல்லியடி.

## அரசியல்வாதி

என்வீட்டுத் தெருவில்
ஒவ்வொரு நாளும்
பிச்சைக்காரர்கள்
தேர்தல் காலத்தில் - ஒரு
புதுப்பிச்சைக்காரன்

## இடைத் தேர்தல்

சாவு மணியா
பூசைமணியா
இனங்காண்பதற்குள்ளே
இன்னொரு மணி
அடித்து விடுகிறது

## வறுமை

வரப்போகும்
சூறாவளியை முன்னிட்டு
வழங்கப்படுகிறது
நிவாரண விண்ணப்பப்
படிவங்கள்

## எச்சரிக்கை

என்சடலத்தின் மீதும்
மலர்களைத் தூவி விடாதீர்கள்
சிலவேளை என்னவளின்
கைபட்டதென்று
எழுந்தாலும் எழுந்து விடுவேன்

நெடுந்தீவு
முகிலன்.

## சக்தி கொடு

புத்தாண்டு பலவந்து போனதுண்டு
பூத்ததுண்டா துயர் களைக்கும் புதியவாழ்வு
எத்தனைநீள் ஆண்டுகள்தாம் வந்தபோதும்
எம்தேவை தீர்ந்ததுண்டா ஏதுசெய்வோம்

வித்தாக விழுந்தகுடி விளைந்த மக்கள்
வீடுவந்து சேர்வதற்காய் உழைப்போம் அன்பாய்த்
தித்திப்பாய் உணவூட்டி வளர்த்த தாயோம்
தெய்வத்தின் ஆசைகளைத் தீர்த்து வைப்போம்

முத்தான பிள்ளைகளைத் தேடித் தேடி
முகம்வாடிச் சோர்ந்து உளம் காய்ந்துகாய்ந்து
பித்தாகி நிற்கும்நிலை களைவதெப்போ
புத்தாண்டே சக்திகொடு புலம்பல் நீங்க

ப.சுழநிலா

## தேர்தலெனும் தேரேறி வா

பொய்யும் புளுகும்
புரட்டும் திருட்டுகளும்
செய்வோர் உரைதேர்ந்து
கற்றவரின் - மெய்பாய்ந்து
சீர்வல்ல நல்லசெய்கை
செய்தவரை
தேர்ந்தனுப்பத்
தேர்தலெனும்
தேரேறி வா

'பொய் பொறுக்கான்'



# ராசி-பலன்

**06 . 02 . 2011 - 12 . 02 . 2011**




அச்சுனி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

புரட்சியை விரும்பும் நீங்கள், நெருக்கடி நேரத்திலும் நேர்மையாக இருப்பீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளிடம் மறைந்திருந்த திறமைகளை இனம் கண்டறிவீர்கள். புது வீடு கட்டி குடி புகுவீர்கள். சொந்த ஊரில் செல்வாக்குக் கூடும். அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். விலகிச் சென்ற சொந்த-பந்தங்கள் வலிய வந்து பேசுவார்கள். மன இறுக்கம், வேலைச்சுமை வந்து நீங்கும். பழைய பங்குதாரர்கள், வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை தெரிந்துக் கொள்வீர்கள். சமூகத்தில் அந்தஸ்து உயரும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 4, 6 அதிர்ஷ்ட நிறங்கள் : வெள்ளை, மஞ்சள் அதிர்ஷ்ட திசை : வடக்கு




கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்

அதிர்ஷ்டத்தை அதிகம் நம்பாத நீங்கள், உழைப்பால் உயர்ந்தவர்கள். உண்மைக்காகப் போராடுவீர்கள். எதிர்பாராத வகையில் பண உதவி கிடைக்கும். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். பழுதான வாகனத்தை மாற்றுவீர்கள். பூர்வீக சொத்து பிரச்னை முடிவுக்கு வரும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். வீட்டை அழகுப்படுத்துவீர்கள். நவீன டிசைனில் நகை வாங்குவீர்கள். வீடு வாங்க லோன் கிடைக்கும். அலைச்சல், முன்கோபம், மறதி வந்து நீங்கும். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் லாபம் பெருகும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். ஒருபடி முன்னேறும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 2, 9 அதிர்ஷ்ட நிறங்கள் : இளம்சிவப்பு, ப்ரவுன் அதிர்ஷ்ட திசை : கிழக்கு




மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

உலகம் ஒரு சந்தை மடம் என்பதை உணர்ந்த நீங்கள் அதிகம் ஆசைப்பட மாட்டீர்கள். யாருக்காகவும் அஞ்சவும் மாட்டீர்கள். திருமண முயற்சிகள் பலிதமாகும். குடும்பத்தில் அமைதி நிலவும். பிள்ளைகளின் வருங்காலம் குறித்த கவலைகள் விலகும். புதிய வகையில் பணம் வரும். கை, கால் வலிக்கும். வாகனத்தில் கவனம் தேவை. புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். வியாபாரத்தில் மற்றவர்களை நம்பி எதையும் செய்ய வேண்டாம். உத்தியோகத்தில் உங்களைத் தாக்கிப் பேசினாலும் பதட்டப்படாதீர்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும் வாரமிது. அதிர்ஷ்ட எண் கள் : 5, 8 அதிர்ஷ்ட நிறங்கள் : நீலம், ஆரஞ்சு அதிர்ஷ்ட திசை : தென்மேற்கு.




புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

காலங்களும், காட்சிகளும் மாறினாலும் கலாச்சாரத்தை விட்டுக் கொடுக்காமல் வாழ்பவர்களே! அதிகாரப் பதவியில் இருப்பவர் அறிமுகமாவார். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். வீடு கட்டும் பணியை தொடங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும். உறவினர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். சொத்து வாங்க முன் பணம் தருவீர்கள். சிலர் வீடு மாறுவீர்கள். மனைவிக்கு மருத்துவச் செலவு, அவசர முடிவுகளைத் தவிர்க்கப் பாருங்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். பங்குதாரர்களால் இருந்த பிரச்சனைகள் தீரும். உத்தியோகத்தில் கடினமான வேலைகளையும் எளிதாக முடிப்பீர்கள். வாக்குசாதுர்யத்தால் வளர்ச்சியடையும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 1, 4 அதிர்ஷ்ட நிறங்கள் : வெள்ளை, சில்வர்கிரே அதிர்ஷ்ட திசை : வடகிழக்கு




மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

மனித நேயம் மிக்க நீங்கள் தன்னை நம்பி வந்தவர்களை கைவிடமாட்டீர்கள். உயர்ந்த சிந்தனை உள்ளவர்கள். சூரியன் வலுவாக நிற்பதால் மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். எதிரும், புதிருமாக இருந்த உறவினர்கள் தன் தவறை உணர்வார்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். பூர்வீக சொத்தை சீர் செய்வீர்கள். கணவுத் தொல்லை, சிறுசிறு ஏமாற்றங்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கிடைக்கும். உத்தியோகத்தில் கௌரவப் பொறுப்புகள் தேடி வரும். கலைத்துறையினர்களே! தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும் சமயோஜித புத்தியால் முன்னேறும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 7, 8 அதிர்ஷ்ட நிறங்கள் : ஆலிவ்பச்சை, பிங்க் அதிர்ஷ்ட திசை : மேற்கு




உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்

மற்றவர்களின் மனம்கோணாமல் பேசும் நீங்கள் கைமாறு கருதாமல் உதவுபவர்கள். சுக்ரன் சாதகமான நட்சத்திரங்களில் செல்வதால் சோர்வு, அச்சம் நீங்கும். குழப்பம் நீங்கி தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள். பழைய பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். கல்யாண விசேஷங்களில் முதல் மரியாதை கிடைக்கும். குடும்பத்தில் சில முக்கிய பொறுப்புகள் உங்கள் கைக்கு மாறும். வராது என்றிருந்த பணம் வரும். தூரத்து உறவினர்கள் தேடி வருவார்கள். அடகு வைத்த நகையை மீட்பீர்கள். புதிதாக வீடு, மனை அமையும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பர். வசதி, வாய்ப்புகள் பெருகும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 6, 9 அதிர்ஷ்ட நிறங்கள் : ஆரஞ்சு, ஊதா அதிர்ஷ்ட திசை : வடமேற்கு




சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

தன்மானம் அதிகம் கொண்ட நீங்கள் யார் தயவிலும் வாழ மாட்டீர்கள். நீதி, நெறிமுறைகளை மீற மாட்டீர்கள். வர வேண்டிய பணம் கைக்கு வரும். பூர்வீக சொத்து கைக்கு வரும். வேலை தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வழக்கில் இருந்த பயம் விலகும். விலகியிருந்த சகோதரங்கள் விரும்பி வந்து பேசுவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகளுடன் விவாதங்கள் வரும். சக ஊழியர்கள் உதவுவார்கள். சவால்களை சமாளிக்கும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 1, 7 அதிர்ஷ்ட நிறங்கள் : பிஸ்தாபச்சை, மெரூண் அதிர்ஷ்ட திசை : தென்கிழக்கு.




விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

மனச் சாட்சிக்கு விரோதமின்றி செயல்படும் நீங்கள், பிறர் செய்யும் தவறைத் தட்டிக் கேட்கவும் தயங்க மாட்டீர்கள். பழைய சொத்து சம்பந்தப்பட்ட வழக்கு சாதகமாகும். எதிர்பாராத பணவரவு உண்டு. கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வீடு, வாகனத்தை சீர் செய்வீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சியும், உறவினர்களால் ஆதாயமும் உண்டாகும். உடன்பிறந்தவர்கள் உங்கள் யோகா, தியானத் தில் மனம் லயிக்கும். வியாபார ரகசியங்கள் யார் மூலம் கசிகிறது என்பதை அறிந்து அதற்கேற்ப செயல்படுவீர்கள். உத்தியோகத்தில் கலைத் துறையினர்களே! உங்களின் படைப்புகளுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும். வெற்றிப் பயணம் தொடரும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 3, 7அதிர்ஷ்ட நிறங்கள் : சில்வர்கிரே, ரோஸ் அதிர்ஷ்ட திசை : தெற்கு




மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

தடைகள் பல வந்தாலும் தயங்காமல் எடுத்த வேலையை முடித்துக் காட்டும் நீங்கள், சொன்ன சொல் தவறாதவர்கள். திருமணம், சீமந்தம் போன்ற சுப நிகழ்ச்சிகள் வீட்டில் நடக்கும். பாதியில் நின்ற வீடு கட்டும் பணி முழுமையடைய, பிள்ளைகளை அவர்களின் எண்ண ஓட்டத் திலேயே சென்று பிடிப்பது நல்லது. தாய்வழி உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். வீண் பழி, சந்தேகம், இழப்புகள் வந்து நீங்கும். பதவிகள் தேடி வரும். பெரிய திட்டங்களை தீட்டுவீர்கள். வியாபாரத்தில் கடின உழைப்பால் இழந்ததை பெறுவீர்கள். எதிர்பார்த்த ஒப்பந்தங்கள் தேடி வரும். பழைய பிரச்சனை ஒன்று தீரும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 2, 7 அதிர்ஷ்ட நிறங்கள் : பழுப்பு, க்ரீம் வெள்ளை அதிர்ஷ்ட திசை : வடமேற்கு





உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

யாருக்காகவும் தன் குறிக்கோளை மாற்றிக் கொள்ளாத நீங்கள் அழுத்தமான கொள்கை பிடிப்புள்ளவர்கள். குடும்பத்தில் நிம்மதி உண்டு. பூர்வீக சொத்தை விற்று புது வீடு கட்டுவீர்கள். பிள்ளைகளின் புது முயற்சிகளை ஆதரிப்பீர்கள். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். வருமானம் உயரும். உறவினர்கள், நண்பர்களால் அனுகூலம் உண்டு. சகோதர வழியில் அலைச்சல் இருக்கும். சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும், அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். அரசாங்க அதிகாரிகளால் தொந்தரவுகள் ஏற்படும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையால் வெற்றி பெறும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 3, 9 அதிர்ஷ்ட நிறங்கள் : ரோஸ், மஞ்சள் அதிர்ஷ்ட திசை : கிழக்கு




அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்

அதர்மத்தை எதிர்த்து குரல் கொடுக்கும் நீங்கள், அகிம்சை வழியில் செல்பவர்கள். பணம் வரும். கௌரவப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். குடும்பத்தில் நல்லது நடக்கும். பிள்ளைகளிடம் மனம் விட்டுப் பேசி மகிழ்வீர்கள். பழுதான வாகனத்தை மாற்றுவீர்கள். சோர்வு, களைப்பு வந்து நீங்கும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வெளிநாட்டில் இருப்பவர்களால் ஆதாயமடைவீர்கள். உங்களைப் பற்றிய வதந்திகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பீர்கள். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 4, 5 அதிர்ஷ்ட நிறங்கள் : ப்ரவுன், மஞ்சள் அதிர்ஷ்ட திசை : தென்மேற்கு




பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி


பல சமயங்களில் சாதுவாக இருக்கும் நீங்கள் சண்டையென்று வந்து விட்டால் சட்டம் பேசுவீர்கள். புதனும், சுக்ரனும் சாதகமாக இருப்பதால் வீட்டில் நல்லது நடக்கும். அலட்சியம், சோம்பல் நீங்கும். பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். உறவினர்கள் உங்கள் உதவியை நாடுவார்கள். வீட்டை அழகுப்படுத்துவீர்கள். நட்பு வட்டம் விரியும். சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். உடன்பிறந்தவர்களின் பிரச்னையை தீர்த்து வைப்பீர்கள். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். வேலைச்சுமை, ஏமாற்றம், காய்ச்சல் வந்து நீங்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி லாபம் சம்பாதிப்பீர்கள். தன்கையே தனக்குதவி என் பதை உணரும் வாரமிது. அதிர்ஷ்ட எண்கள் : 1, 6 அதிர்ஷ்ட நிறங்கள் : மயில்நீலம், கிரே அதிர்ஷ்ட திசை : மேற்கு

## எந்த ராசிக்காரர்களுக்கு காதலில் அதிக ஆர்வம்?

ஜோதிடத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு ராசிக்கும் தனி சிறப்பம்சம் உண்டு. மனிதர்களின் பழக்க வழக்கம் கூட ராசியின் அடிப்படையில் வேறுபடும். ஒருவர் உணவு சாப்பிடும் முறை, பிடித்த உணவு வகைகளைக் கூட ராசியைக் கொண்டு தெரிவிக்க முடியும் என்றும் சமீபத்திய கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் எந்த ராசிக்காரர்கள் காதலில் அதிக ஆர்வம் உடையவராக இருப்பார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரிஷபம், கடகம், கன்னி, தனுசு, மீனம் ஆகிய ராசிக்காரர்கள் காதலில் ஈடுபாடு உள்ளவர்களாக இருப்பார்கள். இதில் ரிஷப ராசிக்காரர்கள் காதலித்தவர்களையே கைபிடிப்பதில் உறுதியாக நிற்பார்கள். கன்னி ராசிக் காரர்கள் எப்போதுமே காதலித்துக் கொண்டிருப்பவர்கள்.

காதலிப்பார்கள், காதலில் ஈடுபாடு இருக்கும், காதலர்களை சேர்த்து வைப்பார்கள் என்று மேற்குறிப்பிட்ட 5 ராசிக்காரர்களையும் குறிப்பிடலாம். காதலில் வெற்றி பெறுவார்களா?



காதலித்தவரை கைபிடிப்பார்களா? என்பதை அவர்களின் சொந்த ஜாதகத்தை வைத்தே கணிக்க முடியும்.

ஒருவரின் ஜாதகத்தில் சுக்கிரன் நன்றாக இருந்தால் அந்த ஜாதகர், தான்காதலித்தவரையே திருமணம் செய்து கொள்வார். சுக்கிரன் மோசமாக இருந்தால் காதலில் தோல்வி, திருமணத்திற்கு பின் குறுகிய காலத்தில் பிரிவு போன்ற சம்பவங்கள் ஏற்படும்.

பொதுவாக எந்த ராசியாக இருந்தாலும், களத்திர ஸ்தானம் என்றழைக்கப்படும் 7, 8ஆம் வீடுகளைக் கொண்டே எந்த வகையான திருமணம் அமையும் எனக் கூற வேண்டும். ஒருவருக்கு 7, 8ஆம் அதிபதி நல்ல நிலையில் இருந்து பாவ கிரகங்களின் பார்வை சேர்க்கை இல்லாமல் இருந்தால் அவருக்கு பெற்றோர் பார்க்கும் வரன் துணைவராக அமைவார்.

களஸ்திர ஸ்தானமும், பூர்வ புண்ணிய ஸ்தானமும் வலுவாக இருந்தால் நெருங்கிய உறவிலேயே திருமணம் நடைபெறும்.




## துலங்கும் புள்ளிகள்

## ஹெலன் கெல்லர்



ஒளிமறைய இருள்பரவ
விழி இழந்த போதும்,
வழிதெரிந்து வாழ்வுயர
தெளிவடைந்த மங்கை.

முயற்சியொன்றே முன்னேற்றம்
உயர்ச்சி அஃதென்றெண்ணி,
அயர்ச்சியின்றிக் ஹெலன்கெல்லர்
பயிற்சி பெற்றாள் வென்றாள்.

கண்ணிருண்டு சொல்மறைந்து
மண் இருண்ட போதும்,
பெண்முயன்றே கல்விகற்று
வண்ணமுற வாழ்ந்தாள்.

- ★ அமெரிக்காவிலுள்ள அலபாமா மாநிலத்தில் 1880 ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் நாள் பிறந்தார்.
- ★ இராணுவ அதிகாரியான கெல்லருக்கும் அடம்ஸ் அம்மையாருக்கும் ஊனமற்ற குழந்தையாகப் பிறந்து வளர்ந்தார்.
- ★ ஒரிரு வயதிலேயே அவருக்கு ஏற்பட்ட கொடிய நோயினால் பார்வையையும் கேட்கும் பேசும் ஆற்றல்களையும் இழந்தார்.
- ★ ஐந்து வயதில் சிறந்த ஆசிரியையான ஆன் சலிவன் என்பவரிடம் கல்வி கற்றார்.
- ★ பேசும் ஆற்றலைப் பெற்று இலத்தீன் பிரெஞ்சு ஜேர்மன் மொழிகளில் திறமை பெற்றார்.
- ★ என் கதை நான் வாழும் உலகம் இருளிலிருந்து மீண்டேன் ஆகியவை ஹெலன் எழுதிய சிறந்த நூல்களாகும்.
- ★ விக்ரோறியா மகாராணியாரால் கப்பல் ஒன்றுக்குக் ஹெலன் எனப் பெயரிடப்பட்டதன் மூலம் பெருமைப்படுத்தப்பட்டார்.
- ★ அமெரிக்க ஜனாதிபதி, பாரதப் பிரதமர் ஆகியோரின் பாராட்டுக்களைப் பெற்றார்.
- ★ 1968ஆம் வருடம் ஜூன் மாதம் 22ஆம் நாள் காலமானார்.

- உமாபாரதி.

## மூளைக்கு வேலை தரும் மாயச் சதுரம்

### கணிதப் புதிர் - 02

| | | | |
|---|---|---|---|
| 13 | 5 | 12 | 1 |
| 15 | 10 | 6 | 3 |
| 2 | 11 | 7 | 14 |
| 16 | 8 | 9 | 4 |

இடம் மாறியுள்ள நான்கு எண்களை மாத்திரம் உரிய கட்டிற்குள் மாற்றிவிடுவதன் மூலம் நிரை, நிரல், மூலைக்கு மூலை கூட்டுத்தொகை 34 ஆகும் வண்ணம் எண்களை ஒழுங்கமையுங்கள். உங்கள் முயற்சி வெற்றியளித்ததா? என்பதை அறிய அடுத்த வாரம் இளஞ்சுடரைப் பாருங்கள்.

**கணிதப் புதிர் - 01 இன் சரியான விடை**

| | | | |
|---|---|---|---|
| 1 | 15 | 14 | 4 |
| 12 | 6 | 7 | 9 |
| 8 | 10 | 11 | 5 |
| 13 | 3 | 2 | 16 |

மாணவர்களே!

**உங்கள் வாசிப்புத் திறமைக்கு ஒரு சவால்**

நீங்கள் வாசித்த புத்தகம் ஒன்றினைப் பற்றிய கருத்துக்களை A4 தாளில் அதன் ஒரு பக்கத்துக்கு மேற்படாமல் எழுதி அனுப்புங்கள். தகுதி வாய்ந்தவை பிரசுரிக்கப்படும்.

பிரசுரமாகும் ஒவ்வொரு கட்டுரைக்கும் பெறுமதி மிக்க புத்தகப் பரிசுகள் வழங்கப்படும்.

உங்கள் திறமையைக் காட்டுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி
'இளஞ்சுடர்', சுடர் ஒளி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-........................................

தரம் :-........................................

பாடசாலை :-........................................

........................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென் சிபார்சு செய்கின்றேன்.

........................ திகதி

........................................ வகுப்பாசிரியர் கையொப்பம்

# தெனாலிராமனின் குதிரை

கிருஸ்ண தேவராயரின் குதிரைப் படை மிகவும் பிரமாண்டமானதாகும் ஆயிரக் கணக்கான குதிரைகள் அவரின் குதிரைப் படையில் இருந்தன போர் இல்லாத சமாதான காலங்களில் அவ்வளவு குதிரைகளையும் பராமரிப்பதற்கு அதிக சிரமபப்பட வேண்டி இருந்தது செலவும் அதிகமாயிற்று. செலவையும் நிருவாகச் சிரமத்தையும் குறைப்பதற்கு மன்னர் ஒரு முடிவு செய்தார் குடிமக்களிடம் வீட்டுக்கு ஒரு குதிரையைக் கொடுத்து வளர்க்கச் சொல்லலாம் குதிரையை அவர்கள் வளர்ப்பதற்கு மாதாமாதம் ஒரு உதவித்தொகையைக் கொடுத்து விடலாம். இதுதான் மன்னரின் திட்டம் அதன்படி முரசறையப் பட்டு மக்களுக்குத் தெரியப் படுத்தப் பட்டது மக்கள் சாரி சாரியாக வந்து ஆளுக்கு ஒரு குதிரையாக வளர்ப்பதற்கென வாங்கிச் சென்றார்கள்

தெனாலி ராமனும் வளர்ப்பதற்கெனத் தனக்கொரு குதிரையை வாங்கிக் கொண்டான்.

குதிரையைப் பெற்றுச் சென்றவர்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை குதிரையைக் கொண்டுவந்து காண்பித்துச் செல்ல வேண்டும் என நிபந்தனையும் போடப்பட்டது

தெனாலி ராமன் தனக்குக் கிடைத்த குதிரை மீது விருப்பின்மையால் தனது வழமையான குறும்பு வேலையைச் செய்யத்தொடங்கினான்

அவன் அந்தக் குதிரையை ஒரு குடிசையினுள் அடைத்து வைத்தான் குடிசை வாசலில் சுவர் ஒன்றை எழுப்பினான். அந்தச் சுவரின் ஒரு பக்கத்தில் சிறு துவாரம் ஒன்றை அமைத்தான். அன்றாடம் ஒரு கைப்பிடி அளவு

புல்லை அந்தத் துவாரத்தினூடாக உள்ளே நீட்டினான். பசியோடிருக்கும் குதிரை அந்தப் புற்கற்றையை வெடுக்கெனப் பிடுங்கிக் கொள்ளும் குதிரைக்கு அவன் கொடுக்கும் அன்றாட தீனி அவ்வளவுதான். அதனால் அது வயிறாற உண்ண இயலாமையால் எலும்பும் தோலுமாக இளைத் திருந்தது. எந்த நேரத்திலும் அது தன் உயிரை விட்டுவிடக் கூடும் என்ற பரிதாப நிலையில் இருந்தது.

மன்னரின் நிபந்தனைப்படி மன்னரிடம் குதிரையைக் கொண்டு வந்து காண்பிக்க வேண்டிய வேளை வந்தது.

குதிரை வளர்ப்பவர்கள் தாங்கள் வளர்க்கும் குதிரைகளுடன் வந்து சேர்ந்தனர். ஆனால் தெனாலி ராமன் மட்டும் குதிரையுடன் வரவில்லை. தனியாக வந்திருந்தான்.

மற்றைய குதிரைகள் எல்லாம் நல்ல கவனிப்புடன் வளர்க்கப்பட்டிருந்தன. அவை ஆரோக்கியமாகவும் பலம் மிக்கவையாகவும் திகழ்ந்தன. மன்னர் தெனாலி ராமனை நோக்கி உன்னுடைய குதிரை எங்கே? எனக் கேட்டார்.

அவன் மன்னரை வணங்கி ''மன்னாதி மன்னா! குதிரை மிகவும் வலிமையுடன் முரட்டுத்தனமும் கொண்டதாக உள்ளது. அதை இங்கே கொண்டு வந்தால் ஒரு பெரிய குழப்பத்தையே அது ஏற் படுத்தி விடும். இங்கு கூடியுள்ள மக்களுக்கும் பெரிய தொல்லையாகி விடும். அதனால் அச்சமடைந்து அதனை இங்கே கொண்டுவரவில்லை. தாங்கள் அருள்கூர்ந்து தங்களின் குதிரை வளர்ப்புத் துறைத் தலைவரை என்னுடன் வீட்டுக்கு அனுப்புங்கள்.

அவர் அங்கே வந்து, நான் வளர்க்கும் குதிரையைப் பார்வையிட்ட பின், அவரிடம் என் குதிரையைப் பற்றிய கருத்தைக் கேளுங்கள்'' என்றான்.

குதிரை வளர்ப்புத் துறைத் தலைவருக்கோ நீண்ட தாடி யிருந்தது மன்னரின் உத்தர வுப்படி அவர் தெனாலி ராமனின் வீட்டுக்குச் சென்றார்.

குதிரை வளர்ப்புத் துறைத் தலைவர் தெனாலிராமன் வீட்டுக்குச் சென்றதும் ''தெனாலி ராமா நீ வளர்க்கும் குதிரை எப்படி இருக்கிறது?'' என்று கேட்டார். குதிரை அடைத்து வைத்திருந்த குடிசையை அவருக்குக் காண்பித்த தெனாலி ராமன் ''அதோ அந்தச் சுவரிலிருக்கும்



துவாரத்தினூடாக உள்ளே எட்டிப் பாருங்கள்'' என்றான்.

''இது என்ன விநோதமான ஏற்பாடாக இருக்கிறதே, குதிரையை இப்படி யாராவது அடைத்து வைத்து வளர்ப்பார்களா?'' என்று கேட்டார்.

''ஐயா இது முரட்டுக் குதிரை, இதனை வெளியே விட்டால் நம் இருவருடைய உயிரும் அதோ கதிதான். அதனால் இந்தத் துவாரத்தினூடாக மிகவும் ஜாக்கிரதையாக எட்டிப் பாருங்கள்'' என்றான் தெனாலி ராமன்.

அதிகாரி பயந்து கொண்டே அந்தத் துவாரத்தின் வழியாகக் கழுத்தை உள்ளே நீட்டிப் பார்த் தார். அதிகாரியின் நீண்ட தாடி யைக் கண்ட குதிரை, தெனாலி ராமன் வழமையாகக் கொடுக்கும் புல்லுக் கட்டென அதனை எண்ணி லபக்கென அதனைத் தன் வாயினால் கௌவிக் கொண்டது. பசி அகோரத்தினாலே தாடியை அது உண்ணும் வகையில் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டது.

''ஐயோ! ஐயோ! என் தாடி, என் தாடி'' என்று கூச்சலிட்டபடி அதிகாரி தனது தாடியை விடுவிக்கப் படாத பாடுபட்டார். ஆனால் அவரால் அது இயலாமல் போய் விட்டது. தாடியுடன் சேர்த்து அதிகாரியையும் குதிரை உள்ளே இழுக்க முயன்றது.

''தெனாலி ராமா! என் உயிரைக் காப்பாற்று'' என்று அவர் அலறினார்.

''நான் என்னசெய்யமுடியும் நீங்கள்தான் உங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அது தீனியைத் தின்று கொழுத்துக் கிடக்கிறது'' என்று சொல்லியபடி தெனாலி ராமன் வாழாவிருந்தான்.

குதிரையுடன் வளர்ப்புத் துறைத் தலைவர் போடும் ஜீவமரணப் போராட்டத்தை எவ்வாறோ கேள்வியுற்ற மன்னர், தனது மந்திரி பரிவாரங்களுடன் தெனாலி ராமனின் வீட்டுக்கு வந்தார். அதிகாரியின் அவலத்தைக் கண்ணுற்றார் மன்னரின் ஆணைப்படி காவலர்கள் எடுத்த முயற்சிகள் எல்லாமே தோல்வியில் முடிந்தன.

குதிரையோ தாடியை விடவில்லை. இறுதியில் அதிகாரியின் தாடியை வெட்டியே குதிரையின் பிடியிலிருந்து அவரை மீட்டார்கள். குடிசையின் முன் சுவர் உடைக்கப்பட்டது. குடிசையின் உள்ளே எலும்பும் தோலுமாகக் கட்டப்பட்டிருந்த குதிரையைக் கண்டதும், மன்னர் கோபத்தோடு ''குதிரை வளர்ப்பதற்காக நான் தந்த நிதியை நீ தின்று கொழுத்து விட்டாய் குதிரையைப் பட்டினி போட்டிருக்கிறாய். குதிரை பாழாய்ப் போய்விட்டதே'' என்றார்.

தெனாலி ராமனோ அரசரைப் பௌவியமாக வணங்கி ''மன்னர் பெருமானே இந்த அளவுக்குக் குதிரைக்குத் தீனி கொடுத்திருக்கும்போதே அதிகாரியின் தாடியை மீட்பதுவே பெரும் பாடாய்ப் போய்விட்டது. இதற்கு மேலும் வயிறு நிரம்பத் தீனி கொடுத்திருந்தால் அதிகா ரியை இலகுவில் விடுவித்திருக்க இயலாதே, ஒரேயடியாக அவரைக் கொன்று போட்டிருக்குமே'' என்றான். அதைக் கேட்ட மன்னர் தன்னையும் மறந்து பலமாகச் சிரித்துவிட்டார்.

''தெனாலி ராமா உன்னுடைய நகைச்சுவை ஆற்றலால் ஒவ்வொரு தடவையும் தப்பித்துக் கொள்ளுகிறாய் நீ செய்த தவறை வேறு யாராவது செய்திருந்தால் மரண தண்டனை கொடுத்திருப் பேன் உன்னுடைய பேச்சே உன்னைக் காப்பாற்றி விட்டது. என்றாலும் இந்தமாதிரி வாயில்லாப் பிராணிகளின் உயிருடன் விளையாடாதே'' என மன்னர் எச்சரித்தார். ★★★

# ஔவைக்கு இட்ட அமுது



மைதிலி தேவராஜா

எந்த உணவையும் சமைப்பதனால் ஏற்படும் சுவைப் பெருக்கினைப் பார்க்கிலும் அவ்வுணவு விருப்புடன் பரிமாறப்படும் போது தான் அதன் சுவை அதிகரிக்கின்றது. அந்த உபசரிப்பில் கலந்துள்ள விருப்பு அன்பு என்பவற்றுடன் அதனைத் தயாரித்த சமையலாளரின் கைவண்ணமும் அதன் சுவையை அதிகரிக்கின்றது. இதனாற்றான் பலருக்கு வீட்டு சாப்பாட்டைப் போல ஏனைய இடங்களில் உண்ணும் உணவு சுவைப்பதில்லை. உணவு பரிமாறப்படும் போது பரிமாறுபவர், உண்பவர் மீதில் காட்டுகின்ற கரிசனையும், விருப்புடன் உபசரிக்கும் பாங்கும் உணவின் சுவையைப் அதி கரிக்கிறது. அது உண்பவர் மனதுக்கு மகிழ்வையும், உற்சாகத்தையும் தருகின்றது. வயிற்றை நிரப்பவும், பசியைப் போக்கவும் உணவு தேவைப்படினும் அவற்றால் உடலுக்குக் கிடைக்கும் ஊட்டமும், மனதுக்குள் விளையும் திருப்தியும் மனிதர்களை ஆரோக்கியமாக வாழ வைக்கின்றது. புகழ் பெற்ற தமிழ்ப் புலவரான ஔவைப் பாட்டியின் நான்கு கோடிப் பாடல்களில் ஒன்றானதும் ஒரு கோடிப் பாடல் களுக்கு சமனானவல்லமை கொண்டதுமான.

**"உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம் மனையில்**
**உண்ணாமை கோடி பெறும்"**

எனும் ஔவையாரின் குறளில் உணவளிப்பவர் விரும்பி அழைக்கும் அழைப்பின் வலிமை எத்தகையது என்பதைக் கூறுகின்றார். விருப்பின்றி அன்பான அழைப்பின்றி விருந்துக்குப் போதலை விருந்தினிற் கலந்து கொள்ளுதலைத் தவிர்த்தல் "கோடி" மதிப்பு மிக்கது எனக் கூறுகின்றார்.

ஔவையார் ஒருநாள் நீண்ட தூரம் நடந்த களைப்பினால் ஒரு குடியானவனின் வீட்டுத் திண்ணையிலே போய் அமர்கின்றார். அவருக்கோ கடும்பசி. அக்குடிசையில் வாழும் குடியானவன் மிகவும் சாது. தனது மனைவிக்குப் பயந்து நடுங்குபவன். மனைவியோ அகங்காரி எச்சில் கையால் காகத்தை விரட்டாத அளவுக்கு கருமி. ஔவையார் திண்ணையிலே வந்து அமர்ந்த வேளையில் வீட்டை விட்டு வெளியே போகப் புறப்பட்ட குடியானவனைப் பார்க்கின்றார்.

"பசிக்கிறது கொஞ்சம் கூழ் கிடைக்குமா?" என்று கேட்கிறார் அவனுக்கோ கிழவி மீது இரக்கம் ஏற்படுகிறது ஆனால் ஔவைப்பாட்டியை உடனடியாகவே விருந்துக்கு அழைக்க அவனது மனம் அஞ்சுகின்றது. மனைவியின் பத்திரகாளியாகும் தோற்றம் அவனைப் பயமுறுத்துகின்றது. இந்த நிலையில் ஔவையாரே நயந்தரும் வெண்பாக்களில் நடந்தவற்றை கூறுகின்றார்.

**"இருந்து முகம் திருத்தி ஈரோடு பேன்வாங்கி**
**விருந்து வந்ததென்று விளம்ப - வருந்தி மிக**
**ஆடினாள் பாடினாள் ஆடிப்பழமுறத்தால்**
**சாடினாள் ஓடோடத் தான்"**

அக்குடியானவன் ஔவைக்கு உணவளிக்க எண்ணும் தன் விருப்புக்கு மனைவியை ஈர்க்க அவளுக்கு அருகிருந்து இனியவை பேசி தலை வாரி, பேன் பார்த்து, ஈருருவி , அவளை மகிழ்ச்சிப்படுத்தி அச்சத்தோடும் தயக்கத்தோடும் ஔவையார் வந்திருப்பதைக் கூறுகிறான். ஔவைக்கிழவிக்கு பசி தீர்க்க உதவும்படி கேட்கின்றான். கெஞ்சுகிறான் ஆனால் அவளோ அவனை ஏசி. அவனைப் பழைய சுளகினால் அடித்து விரட்டுகிறாள். அவளின் தாக்குதலுக் குத் தன்னைத் தப்புவிக்க அவன் வீட்டுக் குள்ளேயே ஓடுகிறான். சுற்றிச் சுற்றி ஓடுகிறான். இத்தகைய மனையிலே அந்தக் குடியானவன் எல்லாத் துன்பங்களையும் ஏற்றுக்கொண்டு ஔவையாருக்கு உணவளிக்க உடன்படும் தன் மனைவியினால் ஆக்கப்பட்ட உணவை உண்பதற்காக குடியானவனின் அழைப்பை ஏற்று உணவின் முன்னே ஔவையார் அமர்கின்றார். அந்த உணவின் சுவையை அறியு முன்னரே. தனக்கு அளிக்கப்பட்ட உபசாரத்தையும், விருப்பின்றி ஆக்கித், தன் முன்னே படைக்கப்பட்ட உணவையும் பார்க்கின்றார். அதனால் அவரது உள்ளமும் உடலும் படும் வேதனையை அவரே கூறுகின்றார்.

**"காணக் கண் கூசுதே கையெடுக்க நாணுதே**
**மாணொக்க வாய்திறக்க மாட்டாதே வீணுக்கென்**
**என்பெல்லாம் பற்றி எரிகின்ற தையையோ**
**அன்பில்லாள் இட்ட அமுது."**

இவ்வாறு ஏற்படும் உணர்வலைகளால் உந்தப்பட்ட மனம் அவளின் விருப்பற்ற உபசரிப்பை ஏற்க மறுக்கிறது. ஔவையார் பசியின் மிகுதியிலும் உணவின் சுவையிலும் உளங் கொள்ளாமல் உபசரிப்பின் விருப்பின்மையால் உணவை வெறுப்பதைக் காணுகின்றோம்.

இத்தகைய சம்பவங்கள் எம் மத்தியில் இன்றும் நிகழ்வதைக் காணுகின்றோம். அந்தவகையில் ஔவையாரின் பாடல்கள் காலத்தால் அழியாதவை. இவ்வாறான சந்தர்ப்பங் களில் ஒருவரிடத்தில் எழுகின்ற உணர்ச்சி வெளிப்பாட்டை மிகவும் இலகு தமிழில் வெண்பா வடிவில் தந்த ஔவையாரின் புலமைச்சிறப்பு உலகம் உள்ளவரை நிலைத்திருக்கும். ★ ★ ★

# முற்றுப்புள்ளியைத் தேடி...

*(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

"ஆ... சௌந்து ,எங்கடை பக்கத்து 25 ஏக்கர் தென்னந்தோட்டத்துக்கை ஆரோ ஆரோ எல்லாம் நிக்கினம். ஒருத்தற்றை முகமும் தெரியல்லை. ஒரு மாதிரிப் புதுக்குடியிருப்புக்கு போட்டன். அப்பிடியே ஒருக்கா உலகளுந்த பிள்ளையாரிட்டையும் போட்டு வீட்டை போவமெண்டா பாதையையும் மறந்து போனன். குறிப்புத் தெரியல்லை.

"ஒரு மாதிரி ஆசுப்பத்திரியடிக்குப் போட்டன். அதிலை குழந்தை... குழந்தை எங்கே சௌந்து" என்று கீறல் விழுந்த ஒலித் தட்டுப்போல சொல்லிக்கொண்டு இரு கைகளாலும் தலையைப் பிடித்துக் கொண்டு விழப் போனவரை என் இரு கைகளாலும் தாங்கிப்பிடித்து மடியிற் சாய்த்துக் கொண்டேன்.

"மகேசு, மகேசு, இஞ்சை ஓடியா. ஓடியா பிள்ளை ரதி. எல்லாரும் ஓடியாருங்கோ. குழந்தை பேசு ஒண்டுக் கும் விடமாட்டார். அந்த மதவுக்குக் கீழை இருக்கலாம். போப் சௌந்து ஓடியா. பொருள் போனாப் போகட்டும் உயிர் போனா என்ன செய்யிறது.. ?' கண்களை மூடிய நிலையில் அழகண்ணை புலம்பிக்கொண்டிருந்தார்.

இது இவரது வீட்டில் அவ் அனர்த்தம் நடப்பதற்குச் சில கணங்களுக்கு முன் அவர் கூறியவை. அவர் இருந்த மதவுக்குக் கீழே இருந்தவர்கள் தான் உயிர் பிழைத்தவர்கள். நான் காயங் களுடன் தப்பினேன். நிகழ்ந்த அவ் அனர்த்தத்தில் அவரது மனைவியும் மகள் ரதியும் உடலாகவே இல்லையாம். இத்தனை மாதங்களுக்குப் பிறகா இவரில் இத்தனை மாற்றம்?. அந்த வேளையில் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு வாழ்ந்தவரால் இப்பொழுது ஏன் முடியவில்லை?.

"பிள்ளையளுக்காகக் குடிக்கிறதை விட்டன். குடும்பத்துக்காக கோயில் கோயிலாக வந்தன். இப்ப...?" தன்னையும் மீறி அழத்தொடங்கி விட்டார். அவர் அழுது நான் பார்த்ததே இல்லை. நல்லவருக்கு நல்லவர். நியாயந் தெரிந்தவர். எந்தச் சோலியும் இல்லை. மற்றவருக்கு உதவி செய்யிறதில ஏராள மனம். இவ்வளவு தான் அவருடைய இயல்புகள். என்றாலும் என்னைப் பொறுத்தவரை அவர் தான் எனக்குக் கடவுள்.

எங்கள் இருவரையும் பார்த்துச் சிலர் பொறாமைப்பட்டதுண்டு. அவ்வளவு நெருக்கம். இப்படி இருந்த நிலை அத்தனையும் மண்ணாகிப் போகுமெண்டு ஆர் நினைச்சது?.

நான் அழகண்ணையோடு பழகத்தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரை அவரிடம் மறைத்த ஒரேயொரு விடயம் எப்படியோ அவருக்குத் தெரிஞ்சுபோச்சு. அதுதான் அவரது மனமாற்றத்துக்குக் காரணமென்று எனக்கென்ன தெரியும்?.

இவ்வளவு நெருக்கடிகள் சூழ்ந் திருந்த காலத்தில் தான் ரதியும் எனது மகன் மகேசும் ஏ.எல்.சோதினை எழுதினவை. அந்தப் பெறுபேறு வெளியானபோது ரதி உயிருடன் இல்லை. அவர்கள் பார்க்கவுமில்லை. எனது மகன் வைத்தியத்துறைக்குத் தேறியிருந்தான். இதுபற்றி அவர் கேட்டதுமில்லை. நான் சொன்னதுமில்லை. ஊர் சும்மா விடுமா? 'உன்ரை மேள் இண்டைக்கிருந்தா டாக்குத்தருக்குப் படிச்சிருப்பாள் எல்லே' என்று சாதாரணமாகவும் அனுதாபத்தோடும் கேட்டது இப்படியாகுமெண்டு ஆர் கண்டது?.

'சௌந்து, புதுக்குடியிருப்பு ஆசுப்பத்திரியில இப்ப டாக்குத்தர் ஆர்சொல்லு? எங்கடை ரதிக் குட்டியடா' என்று அவர் சொன்னபோது அவர் முகத்திலை தோன்றிய ஒளி கார்த்திகைத் திருநாள் போல இருந்தது. எங்கள் இரண்டு குடும்பத்துக்கும் ரதிதான் செல்லப்பெண்ணாக இருந்தாள்.

அன்று அந்தப் பேரிழப்பைச் சந்தித்தும் அழகண்ணை சாதாரணமாக இருந்தது அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ஆனால் நான் அதற்காக மனதுக்குள் சந்தோஷப்பட்டேன். இப்ப இருக்கும்நிலை, எதிர்பார்த்தது தான் என்று மனம் சொன்னாலும் ஜீரணிக்க முடியாமலிருக்கிறது.

'என்ன பாக்கிறாய்? நாளைக்கு நீ போனால் ரதியிட்டைப் போட்டு வா என்ன? மகேசு பிள்ளைபோலை இருக்கிறது, எனக்கெப்பன் ஆறுதல். எண்டாலும் நானுமிருந்தால் எவ்வளவு ஆறுதல்?'

எனக்கு ஐயோ என்று கதற வேணும் போலக் கிடந்தது. 'அம்மா வற்றாப்பளையாளே, என்னை ஆளாக்கின மனிசன், ஆருக்கும் கேடு செய்யாத மனிசன். நீ தான் அம்மா காப்பாத்த வேணும்' நெஞ்சுக்குள் கூறிக்கொண்டேன்.

யமனது கோட்டை வாசல் வரை சென்று மீண்ட ஒவ்வொருவரும் 'வற்றாப்பளையாளே, எங்கையனை போனாய்? எங்களை விட்டிட்டு நீ ஓடிவிட்டியோ? ஆயிரம் கண்ணாளே, ஒரு கண்ணைத்திறக்காயோ?' என்று தான் கூக்குரல் போட்டவர்கள். எத்தனை தெய்வம் இருந்தாலும் முல்லை மக்களுக்கு வற்றாப்பளையாளிடம் இருந்த பற்று, நம்பிக்கை எல்லாம் பொடிபட்டாலும் இன்னமும் அவளைத்தான் நம்ப வேண்டியுள்ளது. ஏனென்றால் இன்னமும் எமது அவல வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளியைக் காணவில்லையே!..

★★★



# உடல் பருமனைக் குறைக்க அரிய மருத்துவ ஆலோசனைகள்

**கேள்வி:** தூக்கத்தில் நடத்தல், நித்திரையில் வாய் உளறல் வியாதியா?

**பதில்:** தூக்கத்தில் நடத்தல் கிப்போகிரட் காலத்திற்கு முன்பே (கி.மு 460- கி.மு370) பேசப்பட்டிருக்கிறது. வில்லியம் சேக்ஸ்பியர் தனது மக்பெத் (Macbeth) நாடகத்தில் லேடி மக்பெத்தின் நித்திரையில் நடக்கும் நடத்தையைக் குறிப்பிடுகின்றார்.

நித்திரையில் நடத்தல் என்பது ஒருவர் நித்திரையாய் உள்ளபோது இடம்பெறும் பல நடத்தைகளின் கூட்டினால் சிறப்பிக்கப்படுகிறது. சிலவேளைகளில் நித்திரையில் நடக்கும் போது சுய அறிவில்லாத வார்த்தைப்பிரயோகங்களும் இடம்பெறக் கூடும். குறிப்பிட்ட நபரின் கண்கள் திறந்தே இருக்கும். ஆயினும் சிறப்பியல்பான தன்மையுடன் காணப்படும். பொதுவாக குழந்தைப்பருவத்தின் நடுப்பகுதியில் தொடங்கி ஆரம்பக் கட்டிளமைப்பருவம் வரை இது தொடரக்கூடும். சுமார் 15 சதவீதக் குழந்தைகள் 4-12 வயதுக்குட்பட்ட காலப்பகுதியில் இத்தகைய நடத்தையைக் காட்டுவார்கள். அறையிலே இரவு படுத்திருக்கும் குழந்தை 'ஹோலில்' உள்ள 'செற்றி'யில் காலை விழித்தெழுவது இந்த வகையைச் சேர்ந்தது தான். பொதுவாகவே கட்டிளமைப்பருவத்தில் இது மறைந்து விடுமாயினும் 10 சதவீதத்தினர் தமது ரீன்ரேச் பருவம் முடியும் வரை நித்திரையில் நடக்கிறார்கள். இதற்கும் பரம்பரைத் தொடர்பு இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக நித்திரையானது 5 நிலைகளை உடையது. நிலைகள் 1, 2,3 மற்றும் 4 கண்கள் வேகமாக அசையாத தன்மை கொண்ட நித்திரையைக் கொண்டவை. (N.R.E.M). கண்களின் வேகமான அசைவைக் கொண்ட நித்திரையானது (Rapid Eye Movement) (R.E.M) நித்திரைச் சக்கரம் கனவுகளோடு சம்பந்தப்பட்டிருப்பதோடு உடல் வளர்ச்சிக்கு அவசியமான ஓமோன்களின் சுரப்பு மற்றும் உடற்தொழிலியல் அனுசேபங்களோடும் தொடர்புபட்டதாகும். ஒவ்வொரு நித்திரைச் சக்கரமும் (நிலைகள் 1, 2, 3, 4 மற்றும்R.D.M) சுமார் 90- 100 நிமிடம் வரை நீடிக்கும். மேலும் முழு இரவும் நித்திரைச் சக்கரங்கள் மாறிமாறி நிகழலாம் சாதாரண சுகதேகி ஒருவர் 4 அல்லது 5 முழு நித்திரைச் சக்கரங்களை ஒரு இரவில் அனுபவிப்பார். நித்திரையில் நடப்பதானது முதலாவது அல்லது இரண்டாவது சக்கரத்தில் 3 வது மற்றும்4 வது நிலையிலேயே நடைபெறும் குட்டித்தூக்கம் எனப்படும். பகற்தூக்கம் சிறுநேர இடைவெளியைக் கொண்டிருப்பதால் குட்டித்தூக்கத்தில் நடப்பது சாத்தியமில்லை. நித்திரையில் எழுந்து நடப்பதைத் தவிர நடப்பவருக்கு நடந்தது எதுவும் நினைவில் இருக்காது. இதிலிருந்து நித்திரையில் நடத்தல் என்பது (பாரதூரமான) நோயல்ல என்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

**கேள்வி:** வயது 23. பெண். எனது உடலின் நிறை வழமைக்கு அதிகமாக உள்ளது. உடல் பருமனைக் குறைக்க ஆலோசனை சொல்லுங்கள்?

**பதில்:** நீங்கள் உங்களது உயரம், நிறை என்பனவற்றைக் குறிப்பிடவில்லை. உடற்பருமன் என்பது இப்போது உடற்திணிவுச் சுட்டியினால் கணிக்கிடப்படுகிறது. (Body Mass Index)

உடற்திணிவுச் சுட்டி BMI:-

$$= \frac{\text{உங்கள் நிறையை கிலோகிராமில்}}{(\text{உங்களது உயரம் மீற்றரில்})^2}$$

உதாரணமாக உங்கள் நிறை 65 கிலோ கிராம் ஆகவும் உங்கள் உயரம் 155 சென்ரிமீற்றர் ஆகவும் இருந்தால்

உங்கள் BMI $\frac{65}{1.5^2}$

28.88 ஆகும்

BMI ஆனது 18.5 முதல் 20.5 வரை இருக்கலாம். 25-29.9 வரை உள்ளபோது அதிக நிறை எனவும் 30க்கு கூடவாக இருந்தால் மிக அதிக நிறை (OBESITY) எனவும் அழைப்போம். இந்த நிலை ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவையாவன,

1.தேவைக்கு அதிகமான கலோரிப் பெறுமான உணவை உட்கொள்ளல். எமக்குத் தேவையான சக்தியை காபோஹைதரேற் உணவுகள் வழங்குகின்றன. எமது சக்தித் தேவைக்கு அளவான உணவை உட்கொள்ளவேண்டும். கலோரிப் பெறுமானம் குறைவாக உண்ணும் பொழுது நிறைக்குறைவும், அதிகளவாக உட்கொள்ளும் போது நிறை அதிகரிப்பும் ஏற்படுகின்றன.

2. உடல் உழைப்பைக் குறைத்து சோம்பேறித்தனமான வாழ்க்கை முறையைப் பின்பற்றல். தொலைக்காட்சி, வீடியோ விளையாட்டுகள், சலவை இயந்திரங்கள் போன்ற சாதனங்கள் எம்மைச் சோம்பேறிகளாக்கி விட்ட முக்கியமான சில சாதனங்களாகும். எம் முன்னோர்களின் உடல் உழைப்போடு ஒப்பிடும்போது எமது தொழிற்பாடு மிகமிகக் குறைவானதாகும். உடல் உழைப்பு எமது உடலின் இன்சுலின் அளவை நிலையாகப் பேணப் பெரிதும் உதவுகிறது. நிலையற்ற இன்சுலின் அளவானது உடல்நிறை அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகிறது.

3.சரியான தூக்கமின்மையும் உடல் நிறை அதிகரிப்புக்கு முக்கிய காரணியாகும். உடற்பருமன் அதிகரிப்பிற்கான நிகழ்தகவை தூக்கமின்மை இருமடங்காக அதிகரிக்கின்றது. எமது உடலில் கிரலின் (Ghrelin) லெப்ரின் (Leptin) என இரு ஓமோன்கள் உள்ளன. கிரலின் பசியின் அளவைக் கூட்டக்கூடியது. லெப்ரின் உணவில் விருப்பத்தைக் குறைக்கும். சரியான தூக்கமின்மை, கிரலினின் அளவை அதிகரிக்கச் செய்வதோடு லெப்ரினின் அளவைக் குறைக்கிறது. இதனால் உணவு உண்ணும் விருப்பம் அதிகரித்து உடல் நிறையும் அதிகரிக்கிறது.

4.பிரக்ரோஸ் (Fructose) போன்ற பதார்த்தங்கள் கலந்த குளிர்பானங்களையும், கொழுப்பு அனுசேபத்தைப் பாதிக்கும் உணவுகளையும் அதிகளவில் உட்கொள்ளல். இது நிறை அதிகரிப்போடு நீரிழிவு நோய் தோன்றவும் காரணியாகிறது.

5. உடற்பருமனைக் கூட்டக்கூடிய மருந்து வகைகளை உட்கொள்ளல்.

உடற்பருமன் அதிகரிப்பதற்கான காரணிகளைக் குறிப்பிட்டேன். இவற்றைத் தவிர்த்துக் கொண்டாலே உடற்பருமன் அதிகரிக்காது தடுக்கலாம். ஆனால் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விடயம் ஒன்றுண்டு. அதாவது திடீரென உடற்பருமனைக் குறைக்க எண்ணி உள்ளெடுக்கும் உணவின் அளவை குறைத்துக் கொள்வீர்களாயின், போஷாக்குக் குறைவு, சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் விற்றமின் குறைவு போன்ற நோய்களுக்கும் ஆளாக வேண்டிவரும். மேலும் உங்கள் முயற்சி தோல்வியடைவதற்கான சாத்தியமும் அதிகம். எனவே ஒரு வைத்தியரின் ஆலோசனையுடன் அவரது கவனிப்பின் கீழேயே உணவுக்கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆனால் சீரான உடற்பயிற்சி உடற்பருமனைக் குறைப்பதில் பெரிதும் துணைநிற்கும். குறைந்தது 10 நிமிடம் ஒரு முறைக்கென எடுத்து, ஒரு நாளில் 30 நிமிடங்கள் வீதம் வாரத்தில் 5 நாட்கள் உடற்பயிற்சி செய்து வர நல்ல பலன்கிடைக்கும்.

உடற்பருமனைக் குறைப்பதற்கு மருந்து வகைகள் மருந்துக் கடைகளில் கிடைக்குமானாலும் அவற்றைப் பாவித்தல் கூடாது.



இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் ஜோன் பொன்னையா. நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரிகள்:

**இலவச மருத்துவ ஆலோசனை**

I. சுடர் ஒளி, யாழ். அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

II. சுடர் ஒளி,
85, ஐயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## பிச்சைக்காரர்களை அகற்றும் தென்னாசிய நாடுகள்

சர்வதேச ரீதியான கொண்டாட்டங்கள், போட்டிகள், களியாட்டங்கள் என்றாலே தென்னாசிய நாடுகள் முதலில் செய்யும் காரியம், பிரதான நகரங்களிலிருந்து பிச்சைக்காரர்களை அகற்றுவதுதான்.

தென்னாசிய நாடுகளில் அண்மையில் நடைபெறவுள்ள ஐ.பி.எல்., ஐ.சி.சி. போட்டிகளானவை நகரங்களில் பிச்சைக்காரர்களை அகற்றவேண்டிய உடனடிக் காரியத்துக்கு சமூக நலன்புரி அலுவலர்களை தள்ளியுள்ளது.

இந்தியாவில் கடந்த ஆண்டும் இவ்வாண்டும் இவ்வாறான பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதனைப் பின்பற்றி இலங்கையிலும் கொழும்பு, வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற நகரங்களில் இருந்து பிச்சைக்காரர்கள் அகற்றப்பட்டனர். முன்னோடி நடவடிக்கையாக யாழ். மாநகர சபை பிச்சைக்காரர்களுக்கு வேலைவழங்கும் செயற்திட்டத்தை அமுல்படுத்தி வருகின்றது.

பங்களாதேஷில் உலகக் கோப்பைப் போட்டிகள் நடைபெறவுள்ளதை அடுத்து டாக்காத் தெருக்களில் உள்ள பிச்சைக்காரர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். அந்நாட்டு சமூக நலன்புரி அமைச்சகம் அவர்களை அகற்றி நலன்புரி நிலையங்களில் சேர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.







# காகம் பார்த்த எஜமான்

விடியற்காலையிலே நித்திரை விட்டு எழுந்ததும் ஒருவன் தனது கண்களால் ஒரு சோடு காகங்களைக் காணக் கிடைத்தால் அவனுக்கு அந்த நாள் முழுவதும் நல்ல பலன் கிடைக்கும் என்று யாரோ ஒரு சாஸ்திரி சொல்லியிருந்தான்.



அதனைக் கேட்ட ஒரு தனவந்தன், தனது வேலைக்காரனை அழைத்து "நீ விடியற்காலையிலே எழுந்து ஒரு சோடி காகங்களைக் கண்டால் அதைப் பார்த்து வந்து என்னை எழுப்பு" என்றான். வேலைக்காரன் அப்படியே அதிகாலையிலே ஒரு மரத்திலே இரண்டு காகங்கள் இருப்பதைக் கண்டான். உடனேயே ஓடிச் சென்று தனது எசமானை எழுப்பினான். எஜமானும் நித்திரைவிட்டெழுந்து கண்களைத் திறக்காமலே அந்தச் சோடிக் காகங்கள் இருந்த மரத்தடிக்கு அவற்றைப் பார்க்கச் சென்றான். அங்கே இருந்த



காகங்களில் ஒன்று பறந்து போய்விட மற்றக் காகம் மாத்திரமே தனித்திருந்தது. கண்களைத் திறந்தபோது ஒரு காகத்தை மாத்திரம் கண்ட எஜமான், வேலைக்காரன் மீது கோபம் கொண்டான். "ஒரு காகம் பறப்பதற்கு முன்னே என்னை ஏன் வந்து எழுப்பவில்லை" எனக் கேட்டு ஏசி அவனை ஆத்திரத்தோடு அடித்து உதைத்தான். அதற்கு அந்த வேலைக்காரன் "ஐயா அதிகாலையிலே அந்த இரண்டு காகங்களையும் முதலிலே பார்த்த எனக்குக் கிடைத்த தண்டனையைப் பார்த்தீர்களா நீங்கள் பார்த்திருந்தால் இதை விட அப்படி என்ன விசேடம் நடந்துவிடப் போகிறது" என்றான் ஏளனமாக. அதைக் கேட்ட எஜமான் தனது மடமையை எண்ணி வெட்கமடைந்தார்.






சென்றவாரம்...

தமது கோடை விடுமுறையில் ஓரிரு நாள்கள் வித்தியாசமான முறையில் கழிப்பதற்காகப் பனி கொட்டும் அழகான மலையொன்றில் ஏறிய பெரிஹில் மற்றும் ஷெரோன் பிரேசர் இளம் காதல் ஜோடி எதிர்பாராத விதத்தில் உடைந்து விழுந்த பனிப் பாறையொன்றுக்குள் சிக்கிக் கொள்கின்றனர்.

# பனிப் பாறையில் இரு காதலர்கள்

*ஒரு உண்மைச் சம்பவம்*

மிகவும் சிரமத்தின் மத்தியில் ஷெரோனை ஐஸ் பாறைகளுக்கு மேலால் மெல்ல மெல்ல இழுத்துச் சற்றுத் தூரத்திலிருந்த ஒரு தட்டையான பாறைப் பகுதியில் அவளை மெல்லச் சாய்ந்திருக்கச் செய்துவிட்டு அவளது இடுப்புக்குக் கீழே சில சாய்வான மரக்கொப்புகளை முறித்து ஆதாரமாகக் கொடுத்து முடிந்த வரை அவளுக்கு வலி தெரியாமலிருக்கச் செய்தான்.

உதவியில்லாமல் இருவரும் தப்புவதென்பது நினைத்தும் பார்க்க முடியாத ஒன்று. பெரியின் கார் அந்த இடத்திலிருந்து மூன்று கிலோமீற்றர் தள்ளி ஒரு இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அது சன நடமாட்டமேயில்லாத ஒரு பகுதி. எப்படியும் மூன்று கிலோ மீற்றர் போய்க்காரை எடுத்துக் கொண்டு முதலாவது கிராமத்திலோ, நகரத்திலோ உதவி கேட்டால்தான் ஷெரோன் பிழைப்பாள். காயப்பட்ட கால்களுடன் மூன்று கிலோமீற்றர் போய்க்காரை எடுத்துக் கொண்டு போய் உதவி கேட்டு, அது எப்போது வரும்? நினைக்கவே மயக்கம் வந்தது. அதுவரை அவள் உயிரோடு இருப்பாளா?

தற்போது ஷெரோனுக்கு உள்ள மிகப் பெரிய ஆபத்து "ஹைபோதெர்மியா" என்னும் நிலை.

அதாவது உடல் சூடு முழுவதுமாகத் தணிந்து மரணம் வரும் நிலை. அநேகமான மரணங்கள் பனி இடங்களில் 'ஹைபோதெர்மியா'வால் தான் வருகிறது. ஏற்கனவே நனைந்து போன உடைகள், வேறு கம்பளிகளோ சட்டையோ இல்லாத நிலை. எது எப்படியிருந்தாலும் கடவுள் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு பெரி உதவிக்காகப் போக வேண்டியது தான்.

ரணமாக நோகும் கால்களுடன் பெரி நடந்தான்; ஓடினான், நேரம் இரவு 8.30 மணியையும் தாண்டிவிட்டது. களைப்பு ஏற்படும் போதெல்லாம் அவளை நினைத்தான். உத்வேகம் ஏற்பட்டது. கடவுளே, அவளுக்கு நித்திரை வரக்கூடாது. உடல் சூடு தணியக்கூடாது!.

பெரி திரும்பிய போது ஷெரோனுக்குக் குளிர் நடுக்கம் வந்துவிட்டது. "ஹைபோதெர்மியா"வின் முதல் அறிகுறி இந்த நடுக்கம் தான்.

அதோடு 'ஹைபோதெர்மியா'வின் அறிகுறி வரும் போது நித்திரை கொள்ளவே கூடாது. நித்திரை கொண்டுவிட்டால் மரணத்துயில்தான். பெரி அவளின் கைகளைப் பிடித்துக் கொண்டு தழுதழுத்த குரலில் சொன்னான் "ஷெரோன் நான் உன்னை என் உயிராக நேசிக்கிறேன். உன்னைக் காப்பாற்ற ஏதாவது நிச்சயம் செய்வேன் என்று நம்பு. அதோடு தயவு செய்து நித்திரை கொண்டுவிடாதே! எனக்கு உறுதிமொழிகொடு. மனதை எப்படியாவது நிலை நிறுத்தி தூக்கத்தை விரட்டு. இதோ நான் வருகிறேன்".

ரணமாக நோகும் கால்களுடன் பெரி நடந்தான்; ஓடினான், நேரம் இரவு 8.30 மணியையும் தாண்டிவிட்டது. களைப்பு ஏற்படும் போதெல்லாம் அவளை நினைத்தான். உத்வேகம் ஏற்பட்டது. கடவுளே அவளுக்கு நித்திரை வரக்கூடாது; உடல் சூடு தணியக்கூடாது!

எப்படியோ காரை அடைந்து அதிசயிக்கத்தக்க விதமாக காரைச் செலுத்தினான். ஆனால் அந்தோ பரிதாபம் மலைப்பாதையில் கார் மோத ஒரு முன் சில்லு காற்றுப் போய்விட்டது. செத்தாலும் பரவாயில்லை என்று ரிம்மிலேயே காரைச்செலுத்தி ஒருவாறாக ஒரு கடைக்கு வந்து அந்த நகர ஷெரிப் (காவற்துறைப் பொறுப்பாளர்)புக்கு விடயத்தைச் சொல்லிவிட்டான். காரின் ரிம் வட்டமாக வளைந்திருந்தது. எப்படி இந்தக் கார் வந்தது என்று கடைக்காரன் அதிசயப்படும் அளவுக்குப் பெரி காரைச் செலுத்தி வந்திருந்தான்.

ஷெரிப்பின் காரியாலயத்திலிருந்து உயிர்காக்கும் தொண்டர்களுக்குச் செய்தி பறந்தது. அத்துடன் கலோராடோ பாதுகாப்புப் படைக்குச் செய்தி பறந்து ஹெலிகொப்டர் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்குள் தொண்டர்கள் மலை யேறத்தொடங்கிவிட்டார்கள்.

ஷெரோனின் நிலைமை என்னவென்று சொல்வது? குளிர் நடுக்கம் ஒரு புறம், சொல்ல முடியாத தூக்கம் மறுபுறம்.

"கடவுளே எனக்குத் தூக்கத்தைக் கொடுக்காதே, கொடுக்காதே!"

திடீரென்று வானில் ஒரு சத்தம். ஒரு மிகப் பெரிய பருந்து மங்கிய வெளிச்சத்தில் அவளுக்கு மேலாகப் பறக்கத் தொடங்கியது.

"ஆண்டவனே கடைசியில் பருந்துக்குத் தான் இரையாகப் போகிறேனா?"

முடிந்தளவு சத்தம் போட்டுக் கைகளை ஆட்டி அந்தப் பருந்தைக் கலைக்க முயற்சித்தாள். அதுவும் நன்மைக்குத் தான். ஏனெனில் பருந்தைக் கலைக்கும் முயற்சியில் அவள் தூக்கம் பறந்தது. கடவுளே பருந்து ரூபத்தில் வந்தாரோ? அதிசயங்களின் காரணகாரியங்களை மனிதன் அறிய முடியுமா என்ன?

பருந்து பறந்து விட்டது. அதைக் கலைக்க எடுத்த முயற்சியில் மேலும் உடல் சோர அவள் மெல்ல மயக்க நிலைக்குப் போகத் தொடங்கினாள். அவளுக்குத் தெரியும் இது தான் "ஹைபோதெர்மியா"வின் கடைசிக் கட்டம்.


அப்போது சுமார் 30 அடித் தூரத்தில் டார்ச் விளக்குகள் தோன்றின. ஆம் தொண்டர்கள் வந்துவிட்டார்கள். "வந்துவிட்டோம் வந்துவிட்டோம். பயப்படாதே" என்று கூவிக்கொண்டு முதலில் பாய்ந்து வந்தார் வீமன் என்னும் அனுபவமிக்க தொண்டர். உடனடியாகவே களமிறங்கினார். அவளது காயங்களைப் பரிசோதித்துவிட்டுத் தடித்த கம்பளியால் அவளைச் சுற்றிவிட்டு உள்ளங்கால்கள் இரண்டையும் சூடு பறக்கத் தேய்க்கத் தொடங்கினார்.

அதற்குள் மற்றைய தொண்டர்கள் எல்லோருமாக - 23 பேர் - ஸ்தலத்தில் குவிந்தார்கள். அவர்களுக்கிடையே உடல் எல்லாம் சோர்ந்து போய் வெளிறிப்போன பெரியும் காணப்பட்டான். அவன் முகத்திலே ஒரு நிம்மதி.

வந்த தொண்டர்கள் கொண்டுவந்த பொருள்களைக் கொண்டு ஒரு தீயை வளர்த்தார்கள். ஷெரோன் அருகே கொண்டு வந்து கிடத்தப்பட்டாள். தொண்டர்களில் இரண்டு பெண்கள் ஷெரோனின் ஈர உடைகளைக் களைந்து கதகதப்பான உடைகளை மாற்றினார்கள். அத்தோடு அந்தப் பெண்கள் இருவரும் ஷெரோனை இறுகக் கட்டிப்பிடித்தபடி அரை மணித்தியாலம் அவள அருகிலேயே படுத்துவிட்டார்கள். உடல் சூடு அவளின் மேல் படவேண்டும் என்பதும் "ஹைபோதெர்மியா"வுக்கான ஒரு சிகிச்சை முறையாகும். இப்படியான முதலுதவிகளால் 'ஹைபோதெர்மியா'வின் ஆபத்து நீங்கிவிட்டது. நேரம் விடிகாலையை நெருங்கிக்கொண்டிருந்தது.

முதல் ஒளி தெரியும்போதே சட சடவென்ற சத்தத்துடன் ஹெலிகொப்டர் பறந்து வந்தது. அது தரை இறங்க இடமில்லாதபடியால் 150 அடி உயரத்திலிருந்து ஒரு வலை கீழிறக்கப்பட்டு, ஷெரோன் மெதுவாக வலையில் கிடத்தப்பட்டு ஹெலிகொப்டரில் ஏற்றப்பட்டாள். பன்னிரண்டு மைல்களுக்கு மேல் நடந்த களைப்பும் சோர்வும் பெரியை அப்படியே தரையில் படுக்கச் செய்து விட்டது. அவன் வாய் மட்டும் "கடவுளே நன்றி. கடவுளே நன்றி" என்று சொல்லிக்கொண்டிருந்தது.

ஆஸ்பத்திரியில் ஷெரோன் பதினாறு கிழமைகள் படுக்கையில் இருக்கவேண்டி வந்தது. நான்கு மாதங்களுக்குப் பின் அவளது கட்டுக்கள் வெட்டப்பட்டாலும் மேலும் சில மாதங்களுக்கு அவள் ஊன்று கோலுடன்தான் நடமாட வேண்டும்.



பெரியின் காயங்கள் விரைவில் ஆறிவிட்டன. முறிவுகள் இல்லாதபடியால் அவன் பெரிதாகப் பாதிக்கப்படவில்லை. விரைவிலேயே ஆஸ்பத்திரியை விட்டு அவன் வெளியேறிவிட்டான்.

ஐந்து மாதங்கள் கடந்துவிட்டன. ஏற்கெனவே திட்டமிட்டபடி தங்கள் திருமணம் நடக்கவேண்டும் என்று பெரி பிடிவாதமாக இருந்தான்.

திருமண நாளன்று ஷெரோன் ஊன்று கோல்களுடனும் அவளது தந்தையின் ஆதரவான அரவணைப்புடனும் மணமேடைக்குக் கூட்டிவரப்பட்டாள். கிறிஸ்தவ முறைப்படி அந்த 'சர்ச்' சின் பாதிரியார் அவர்களை மண வாழ்க்கையில் இணைத்தார்.

பேரி

திருமணத்துக்குப் பின் பெரி பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற விரும்பினான். அதற்குப் பிறகு ஒரு ஆசிரியராக அவன் தனது வாழ்க்கையைத் தொடங்கினான். ஏறத்தாழ 1 1/2 வருட காலத்துக்குப் பின் ஷெரோன் நன்றாக நடக்கத் தொடங்கினாள். அவள் ஆஸ்பத்திரியில் இருந்த காலத்தில் அங்குள்ள நர்ஸ்மார் அவளுக்குச் செய்த சேவை அவளைப் பெரிதும் கவர்ந்தது. பிணியாளர்களுக்குச் சேவை செய்வதே பெரிய பாக்கியம் என்று அவள் எண்ணி அதுவரை பார்த்த வங்கி வேலையை விட்டு விட்டு ஒரு நர்ஸிங் வகுப்பில் இணைந்து பிற்காலத்தில் ஒரு நர்ஸாகத் தன் வாழ்க்கையை ஆரம்பித்தாள்.

(முற்றும்)



காரணமாகவே இவை ஆழம் குறைந்த பகுதிக்கு வருவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். அந்த வகையில் மிகக் கடைசியாக கடந்த சில நாள்களுக்கு முன்னர் பருத்தித்துறை முனைக் கடற்கரைப் பகுதியில் இராட்சத திமிங்கிலம் ஒன்று இறந்த நிலையில் கரையொதுங்கியது. 33 அடி நீளமும் 16 அடி சுற்று வட்டமும் கொண்ட அத்திமிங் கிலம் ஏறக்குறை ஐயாயிரம் கிலோவுக்கு அதிகமான நிறையுடையது எனத் தெரியவந்துள்ளது.



# இலங்கையின் வடபகுதிக் கடலோரம் கரையொதுங்கும் ஆழ் கடல் உயிரிகள்

அண்மைக்காலமாக நாட்டின் வடபகுதிக் கடற்கரைகளில் அரியவகை கடல்வாழ் உயிரினங்கள் கரையொதுங்கி வரும் சம்பவங்கள் அதிகரித் துள்ளன. கடந்த மாதம் முதல் வாரத்தில் குடாக்கடலில் 10 அடிக்கும் மேற்பட்ட நீளமான பாரிய சுறா மீன் ஒன்று மீனவர்களின் வலையில் சிக்கிக்கொண்டது. வழமைக்குமாறாக அண்மைக்காலங்களில் இத்தகைய பாரிய மீன் வகைகள் குடாக்கடலில் மீனவர்களின் வலைகளில் சிக்கிவருகின்றன.

கடந்த டிசெம்பர் மாதம் முதல் வாரத்தில் ஊர்காவற்றுறை கருவிலில் ஆழம் குறைந்த கடல் ஏரிப் பகுதியில் காயமுற்ற நிலையில் இரு டொல்பின் மீன்கள் கரையொதுங்கின. இதில் ஒன்று உயிரிழந்த நிலையிலும் மற்றையது குற்றுயிராகவும் மீட்கப்பட்டன. அதற்குச் சில வாரங்களுக்கு முன்னரும் பருத்தித்துறைக் கடற்பரப்பில் டொல்பின் மீன் ஒன்று கரை யொதுங்கியது.

டொல்பின் மீன்கள் குடாக்கடலில் மிக நீண்ட காலத்தின் பின்னர் இப்போது கரையொதுங்கி வருவதாகவும் கூறப்படு கிறது. பொதுவாக டொல்பின் மீன்கள் ஆழம் மிக்க கடற்பகுதி களிலேயே வாழ்பவை எனவும், தற்போதைய சீரற்ற காலநிலை





